# 1. பொருளாதாரச் செயலாற்றம், தோற்றப்பாடு, கொள்கைகள் மற்றும் விடயங்கள்

## 1.1 பொதுநோக்கு

தொழில் நிலையில் கணிசமான அதிகரிப்பு மிதமான பணவீக்கம் என்பனவற்றுடன் 1999 நடுப்பகுதியில் தொடங்கப்பட்ட பொருளாதார மீட்சியின் தொடர்ச்சியாக 2000ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் உறுதியாக விரிவடைந்தது. அரசின் அரசிறையின் வீழ்ச்சி தேசிய பாதுகாப்புச் செலவினத்தில் ஏற்பட்ட எதிர்பாராத அதிகரிப்பு, பெற்றோலியத்தின் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட மிகக்கூடியளவு அதிகரிப்பு, மற்றும் நீரேந்து பிரதேசங்களில் காணப்பட்ட வழமைக்கு மாறான குறைந்த மழைவீழ்ச்சியின் காரணமாக நீர்மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி அதன் காரணமாக செலவுமிக்க வெப்பமின்வலு உருவாக்கத்தில் தங்கியிருத்தல் என்பனவற்றின் காரணமாக அரசிறை மற்றும் சென்மதி நிலுவையின் பற்றாக்குறை விரிவடைந்தமையின் காரணமாக ஆண்டின் இறுதிப்பாகத்தில் மெதுவடையும் தன்மையொன்று காணப்பட்டது. இந்த நிகழ்வுகள் செலாவணிவீதக் கொள்கையில் பெருமளவு நெகிழ்ச்சியுடைய நகர்வுக்கு இட்டுச்சென்று வெளிநாட்டு ஒதுக்குகளில் பெருமளவு அழுத்தத்தை ஏற்படுத்தின. இந்தச் சூழலில் உள்நாட்டு விலைகளின் உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் தேசிய ஒதுக்குகளைப் பாதுகாப்பதற்குமான நோக்கில் நாணயக் கொள்கை மேலும் இறுக்கமாக்கப்பட்டது. இதன் விளைவாக குறுங்கால வட்டிவீதங்களின் அதிகரிப்பு தவிர்க்கமுடியாததாகியது. எனவே 2000ஆம் ஆண்டில் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவமானது பெருமளவு அறைகூவல்களைக் கொண்டிருந்தது.

இவ்வாண்டிலான உறுதியான பெறுபேறுகள் யாதெனில் மேம்பட்ட உலகப் பொருளாதார சூழலிலிருந்தான நன்மைகளை இலங்கை பெற்றுக்கொண்டமையும் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களைத் தொடர்ந்து பொருளாதாரத்தில் கட்டியெழுப்பப்பட்ட ஆற்றல் மீளப்பெறப் பட்டமையுமாகும். எனினும் சிறிய பொருளாதாரங்கள் வெளிநாட்டு அதிர்ச்சிகளினால் எளிதில்

**அட்டவணை 1.1**
தெரிந்தெடுக்கப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| விடயம் | 1980–89 சராசரி | 1990–95 சராசரி | 1996 | 1997 | 1998 | 1999 | 2000(அ) |
|---|---|---|---|---|---|---|---|
| மொ.உ.உ. (உண்மை) வளர்ச்சி வீதம் | 4.2 | 5.3 | 3.8 | 6.3 | 4.7 | 4.3 | 6.0 |
| மொ.உ.உ. உட்கிடை | 11.8 | 11.4 | 12.1 | 8.6 | 8.4 | 4.4 | 6.7 |
| மொ.உ.உ. (பெயரளவு) தலைக்குரிய, ரூபாய்கள் | 9,608 | 27102 | 41,940 | 47,988 | 54,220 | 58,077 | 64,038 |
| மொ.உ.உ. (பெயரளவு) தலைக்குரிய, ஐ.அ.டொலர்கள் | 362 | 549 | 759 | 814 | 839 | 825 | 860 |
| தொழிலற்றோர் வீதம் சதவீதம் | வி.கி | 14.0 | 11.3 | 10.5 | 9.2 | 8.9 | 7.7 |
| வெளிநாட்டுச் சொத்துக்களை அடக்கிய இறக்குமதி மாதங்கள் | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | வி.கி | வி.கி. | 6.0 | 6.4 | 5.9 | 5.2 | 3.5 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | 1.8 | 3.8 | 4.3 | 4.2 | 4.0 | 3.3 | 1.7 |
| | | | (மொ.உ.உ.இன் சதவீதமாக) | | | | |
| மொத்த உள்நாட்டு முதலீடு | 26.2 | 24.4 | 24.2 | 24.4 | 25.1 | 27.13 | 28.0 |
| மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 12.9 | 14.6 | 15.3 | 17.3 | 19.1 | 19.5 | 17.3 |
| வெளிநாட்டுச் சேமிப்புக்கள் (ஆ) | 13.3 | 10.3 | 8.9 | 7.1 | 6.0 | 7.8 | 10.7 |
| சென்மதி நிலுவை, நடைமுறைக் கணக்கு | -8.1 | -6.3 | -4.9 | -2.6 | -1.4 | -3.6 | -6.4 |
| வரவு செலவுத் திட்டம், நடைமுறைக் கணக்கு | 2.7 | -1.8 | -3.8 | -2.2 | -2.4 | -1.0 | -3.4 |
| வரவு செலவுத் திட்டம், திரண்ட நிலுவை | -12.4 | -9.9 | -9.4 | -7.9 | -9.2 | -7.5 | -9.9 |
| பண நிரம்பல் ($M_{2b}$), சதவீத மாற்றம் (இ) | வி.கி. | வி.கி. | 11.3 | 15.6 | 13.2 | 13.4 | 12.9 |
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் சதவீத மாற்றம் | 12.8 | 12.2 | 15.9 | 9.6 | 9.4 | 4.7 | 6.2 |
| செலாவணி வீதம் (ரூ./ஐஅடொ) சதவீத மாற்றம் (ஈ) | -9.1 | -4.9 | -4.7 | -7.1 | -9.6 | -6.0 | -9.9 |


(அ) தற்காலிகமானவை.
(ஆ) பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் தேறிய இறக்குமதிகள்
(இ) வெளிநாட்டு நாணய வங்கித் தொழிலை உள்ளடக்கிய திரட்டிய பண நிரம்பல்.
(ஈ) ஆண்டு முடிவில் செலாவணி வீத மாற்றம் எதிர்க்கணிய அடையாளம் தேய்வினைக் குறிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பாதிப்புக்குள்ளாகும் தன்மை தெளிவாகக் காணப்பட்டதோடு பெருமளவு பன்முகப்படுத்தப்பட்டதும் தாக்குப்பிடிக்கக் கூடியதுமான பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு உறுதியான பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் முன்மதியுடைய பொருளாதார முகாமைத்துவம் என்பவற்றுடன் போதுமானதும் ஊக்கம் மிக்கதும் உரிய நேரத்திலுமான நடவடிக்கைகளின் தேவையை இது வலியுறுத்துகின்றது.

2000ஆம் ஆண்டின் இறுதிவரையில் தேசிய தேர்தலுக்கான அரசியல் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் இவ்வழி முறைகளில் சில பெருமளவு தாக்கத்துடன் முன்னரே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியவையாகக் காணப்பட்டபோதும் அரசாங்கம் சரிப்படுத்தும் வழிமுறைகள் பலவற்றை மேற் கொண்டது. அரசிறையை அதிகரித்தல் அரச செலவினத்தை ஒழுங்கு முறைப்படுத்தல் அரசாங்கத்தின் முகாமைத்துவத்தினை மேம்படுத்தல் , நிருவகிக்கப்பட்ட விலைகளில் சரிப்படுத்தும் அதிகரிப்புக்கள், நாணயக் கொள்கையை இறுக்கமாக்கல், பெருமளவு நெகிழ்ச்சியுடைய செலாவணிவீத முறையொன்றுக்கு நகருதல் என்பனவற்றை இந்த வழிமுறைக்ள் உள்ளடக்கியிருந்தன. இப்பொழுது தேர்தல் செயல்முறை முற்றுப் பெற்றுள்ளமையினால் நடுத்தர காலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்காக மேலதிகப் பொருளாதார சீர்திருத்தங்களுக்காக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மிகச் சிறந்த சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்துள்ளது. எனினும் இதன் முன்னேற்றமானது பாதுகாப்பினை மீண்டும் ஏற்படுத்துவதிலேயே பெருமளவு தங்கியுள்ளது. சமாதானத்தை எய்துதல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் இயக்கவிசை கொண்ட பொருளாதாரமொன்றை ஊக்குவித்தல் என்பன மீதான அதனது முயற்சிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து பெருமளவிலான நன்மதிப்புக் காணப்படுகின்றது.

2000ஆம் ஆண்டில் உலகின் வெளியீடு 1999இன் 3.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.8 சதவீதத்தினால் விரிவடைந்தது. உலக வர்த்தக விரிவாக்க வீதம்



முன்னைய ஆண்டின் 5.1 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 12.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இந் நிகழ்வுகள் குறிப்பாக, தமது பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்திக் கொள்வதற்காக உலகளாவிய பொருளாதாரத்துடன் தம்மைத்தாமே அதிகரித்த அளவில் ஒருங்கிணைத்துக் கொண்ட நாடுகளுக்கு சாதகமான சூழலொன்றை உருவாக்கியுள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சி, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட வளர்ச்சி உத்வேகம், சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகளின் பொருளாதார மீட்சி, மற்றும் எண்ணெய் உயர் விலைகளின் விளைவாக மத்திய கிழக்கு நாடுகளின் மேம்பட்ட இறக்குமதி இயலளவு என்பனவற்றிலிருந்து இலங்கை மிகப் பெரிய நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. இச்சாதகமான அபிவிருத்திகள் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு வலுவான கேள்வியை உருவாக்கும் காரணிகளாக இருந்தன. மேலும், நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான கிழக்காசிய நாடுகள் அவற்றின் பொருளாதாரத்தில் அடைந்து கொண்ட மீட்சியுடன் தமது நாணயங்களை வலுவாக்கிக் கொண்டமையானது இலங்கை அதன் வெளிநாட்டு போட்டித்தன்மையை மேம்படுத்திக் கொள்ள உதவியது.

2000ஆம் ஆண்டில் உலகின் பெரும்பாலான பகுதிகளில் பணவீக்கம் குறைந்தளவில் காணப்பட்டமையானது மேம்பட்ட நிரம்பல் நிலைமைகளையும், குறிப்பாக கைத்தொழில் நாடுகளின் தொடர்ச்சியான இறுக்கமான நாணயக் கொள்கைகளையும் பிரதிபலிப்பதாக இருந்தது. மேம்பட்ட அரசிறை மற்றும் நாணய முகாமைத்துவத்தின் ஊடாக பலநாடுகள் பணவீக்கத்தை தாழ்ந்த மட்டங்களில் வைத்திருக்க முயன்ற வேளையில் மேலும் பல நாடுகள் அவற்றின் கொள்கைக் கட்டமைப்பாக பணவீக்க இலக்கிடலை மேற்கொண்டன. எண்ணெய் விலைகள் மிகக் கூடுதலாக அதிகரித்த வேளையில் எரிபொருளற்ற பண்டங்களின் விலைகள் சிறிதளவால் அதிகரித்தமையானது எண்ணெய்யை இறக்குமதி செய்கின்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சென்மதி நிலுவையில் இடர்பாடுகளைத் தோற்றுவித்தன. இப் பன்னாட்டு விலை அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மாற்று விகிதம், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 2000ஆம் ஆண்டிலும் மேலும் 6 சதவீதத்தினால் மோசமடைந்தமையானது அதிகரித்த பன்னாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் முழு நன்மைகளையும் நாடு பெற்றுக் கொள்வதனைத்தடை செய்தது.

2000ஆம் ஆண்டில் பன்னாட்டு நிதியியல் சந்தைகள் ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்டபோதும் முக்கியமான நாணயங்கள் அடிக்கடி மாறுபடும் தன்மையைக் காட்டியமையானது, சிறிய அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள், பேரண்டப் பொருளாதாரத்தினை முகாமைப் படுத்துவதனை கடினத்திற்குள்ளாக்கின. முக்கிய கைத்தொழில் நாடுகளிடையேயான வளர்ச்சி வேகத்தில் காணப்பட்ட வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஐ.அ.டொலர் மற்றைய அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் வலுவடைந்தது. நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட ஒருசில நாடுகள் தவிர, ஆசிய பிராந்தியத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகள் ஒப்பீட்டு ரீதியில் உறுதியான தன்மையைக் காட்டியமையானது, கிழக்காசிய நாடுகளின் பொருளாதார மீட்சியையும் இந்தியாவினதும் சீனாவினதும் தொடர்ச்சியான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

பணவீக்கத்திற்கு எதிரான ஒரு வழிமுறையாக கைத்தொழில் நாடுகளில் குறுங்கால வட்டிவீதங்கள் உயர்த்தப்பட்டன. இதன் விளைவாக அவற்றினது பொருளாதாரங்களின் மேம்பட்ட உறுதிப்பாட்டின் மத்தியிலும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் தோற்றம் பெறும் பொருளாதாரங்களின் கடன்பாட்டுச் செலவுகள் அதிகரித்தன. அதேவேளை, கைத்தொழில் நாடுகளின் தகவல் தொழில்நுட்ப பங்கு விலைகளின் மேல் நோக்கிய போக்கின் நேர்மாற்றமானது தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் தொடர் தாக்கத்தைக் கொண்டிருந்தது. இதன் காரணமாக அவற்றிற்கான மொத்த மூலதனப் பாய்ச்சல் அதிகரித்த போதும் தோற்றம் பெறும் சந்தைப் பொருளாதாரங்களுக்கான தேறிய தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான அலுவல்சார் அபிவிருத்தி உதவி பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.21 சதவீதத்திற்கு மேம்பட்டதெனினும் ஐக்கிய நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொ.தே.உற்பத்தியின் 0.7 சதவீத இலக்கினைவிட மிகக் குறைவாகவே இருந்தது. அதேவேளை ஆசியா தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவு செய்தமைக்கு, பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட கிழக்காசிய நாடுகள் 1997இலும் அதன் பின்னரும் பெற்ற நிதியியல் உதவிகளில் பெரும் தொகையினைத் தீர்ப்பனவு செய்தமை ஓரளவு காரணமாகும்.

2000ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் வளர்ச்சி வீதமானது 1999இன் வளர்ச்சி வீதமான 4.3 சதவீதத்தினைவிட உயர்வானதாகும். பத்தாண்டுகளின் ஆண்டு சராசரி வளர்ச்சி 5

சதவீதமாகும். 2000ஆம் ஆண்டில் மொ.தே.உற்பத்தி முன்னைய ஆண்டின் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.8 சதவீதத்தினால் அதிகரித்தது. 1998இன் பின்னரைப் பகுதியில் ஆரம்பமான பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவான போக்கினைத் தொடர்ந்து 1999இன் பின்னரைப் பகுதியில் ஆரம்பமான பொருளாதார மீட்சி 1999முழுவதும் தொடர்ந்து 2000ஆம் ஆண்டில் முதல் மூன்று காலாண்டுகள்வரை காணப்பட்டது. மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி, ஒப்பீட்டு ரீதியில் குறைந்த குடித்தொகை வளர்ச்சியுடன் சேர்ந்து நாட்டின் தலைக்குரிய வருமானத்தினை 1999இன் ரூ.58,077 இலிருந்து (ஐ.அ.டொலர் 825) 2000ஆம் ஆண்டின் ரூ.64,855இற்கு (ஐ.அ.டொலர் 856) உயர்த்தியது. இதன் விளைவாக, பன்னாட்டுப் பகுப்பாய்வின்படி நாட்டின் தலைக்குரிய வருமானமாக ஐ.அ.டொலர்கள் 795-3125 வரையான வீச்சினைக் கொண்ட நாடுகளை உள்ளடக்கியுள்ள குறைந்த நடுத்தர வருமான வகைக்குள் நாட்டின் நிலை மேலும் மேல்நோக்கி அசைந்தது.

**அட்டவணை 1.2**
**நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி ( ஆண்டு சதவீத மாற்றம்)**

| விடயம் | 1990-98 மாற்றம் (அ) | 1999 (அ) | 2000 (அ) |
|---|---|---|---|
| 1. விவசாயமும் காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் | 2.3 | 4.5 | 1.8 |
| 1.1 விவசாயம் | 2.2 | 4.4 | 1.7 |
| தேயிலை | 4.3 | 1.3 | 7.8 |
| இறப்பர் | -0.9 | 1.0 | -9.7 |
| தெங்கு | 0.6 | 9.1 | 8.0 |
| நெல் | 3.8 | 6.6 | -0.3 |
| ஏனையவை | 2.6 | 3.4 | 0.9 |
| 1.2 காட்டுத்தொழில் | 1.5 | 1.3 | 1.6 |
| 1.3 மீன்பிடித்தொழில் | 3.8 | 7.6 | 2.5 |
| 2. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 2.4 | 4.1 | 4.8 |
| 3. தயாரிப்பு | 8.4 | 4.4 | 9.2 |
| 3.1 தேயிலை, இறப்பர், தெங்கு பதனிடல் | 2.1 | 3.8 | 4.2 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 9.7 | 4.5 | 10.4 |
| 3.3 சிறு கைத்தொழில் | 6.1 | 4.8 | 5.5 |
| 4. கட்டடவாக்கம் | 5.3 | 4.8 | 4.8 |
| 5. வலு,வாயு,நீர், சுகாதாரப்பணிகள் | 7.9 | 9.5 | 4.5 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 6.1 | 8.1 | 7.8 |
| 7. மொத்த மற்றும் சில்லறைவியாபாரம் | 5.7 | 1.0 | 8.7 |
| 7.1 இறக்குமதிகள் | 8.0 | -1.4 | 12.9 |
| 7.2 ஏற்றுமதிகள் | 10.1 | 6.1 | 18.3 |
| 7.3 உள்நாடு | 2.5 | 2.1 | 2.4 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 8.2 | 4.6 | 6.4 |
| 9. வதிவிடங்களின் உடைமை | 1.3 | 1.2 | 1.7 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 3.4 | 4.2 | 4.2 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 5.2 | 9.8 | 2.3 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 5.3 | 4.3 | 6.0 |
| 13. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | 2.0 | 41.6 | 19.6 |
| 14. மொத்த தேசிய உற்பத்தி | 5.5 | 3.8 | 5.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) 1996 நிலையான காரணிச் செலவு விலைகளில்.

உற்பத்திப் பக்கத்தில், வளர்ச்சி அனைத்து முக்கிய துறைகளிலும் பிரதிபலிக்கப்பட்டதெனினும், தயாரிப்பு மற்றும் அதனுடன் தொடர்பான பணிகள்துறைகள் முக்கியமான வளர்ச்சிப் பங்களிப்பாளர்களாக மாறி 2000ஆம் ஆண்டின் மொத்த வளர்ச்சியில் முறையே 61 சதவீதத்திற்கும் 26 சதவீதத்திற்கும் வகைகூறின. கேள்விப் பக்கத்தில் உள்நாட்டு, நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டின் உயர் வளர்ச்சிக்குப் பங்களித்தன. உயர்ந்த பங்களிப்பு பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றமதிகளிலிருந்து கிடைத்ததுடன் இது பொதுவான கேள்வியின் வளர்ச்சியில் 47 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2000ஆம் ஆண்டில் உண்மை நியதிகளில் 18 சதவீத உயர்ந்த ஆண்டு வளர்ச்சி வீதத்தினையும் பதிவு செய்தது. அரசதுறை மற்றும் தனியார்துறை இரண்டினதும் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம், 2000ஆம் ஆண்டில் 9.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது இது 1999இன் 6.4 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கதாகும். நிரம்பல் பக்கத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதேபோன்று பொருட்கள் மற்றும் தொழிற்சாலையல்லா பணிகளின் இறக்குமதிகள் ஆகிய இரண்டும் 1999இலும் பார்க்க 2000ஆம் ஆண்டில் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்து பொருட்கள் பணிகளின் கிடைப்பனவை அதிகரித்தது.

உலகப் பொருளாதாரத்துடன் இலங்கையின் பொருளாதாரம் அதிகரித்தளவில் ஒருங்கிணைக்கப்பட்டு வருவதனை அண்மைய ஆண்டுகளில் உள்நாட்டு வளர்ச்சி வீதத்திற்கும் உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்பு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. உலகப் பொருளாதாரத்தின் மீட்சிப்பாதையினைத் தொடர்ந்து இலங்கையின் காலாண்டு வளர்ச்சி வீதம் 1999இன் மூன்றாம் காலாண்டின் 4 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 7.4 சதவீதத்திற்கு விரிவடைந்தது. 2000ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் உயர்ந்த ஏற்றுமதிகள் காணப்பட்டபோதும் பொருளாதார வளர்ச்சி மெதுவடைந்தமைக்கு, தாமதமடைந்த பருவக்காற்று வேளாண்மை உற்பத்தியை மோசமாக வேகமாகப் பாதித்த வேளையில் தேர்தலுக்கு முன்னர் நிச்சயமற்ற தன்மைகளும் உயர்ந்த வட்டிவீதங்களும் பொதுவாக வர்த்தச் சூழலைமோசமடையச் செய்தமையே காரணமாகும்.

2000ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு முதலீடு/மொ.உ.உற்பத்தி விகிதம் 27.3 சதவீதத்தினால் 1997இலிருந்து காணப்பட்ட முன் நோக்கிய போக்கின் தொடர்ச்சியாக அதிகரித்தமைக்கு தனியார்துறை முதலீட்டு நடவடிக்கைகளே காரணமாகும். ஒன்றுதிரண்ட மொத்த மூலதனத்தில் தனியார் முதலீடு தொடர்பான பங்கு படிப்படியாக அதிகரித்து 89 சதவீதத்தினை அடைந்து பொருளாதாரத்தில் தனியார்துறையின் பங்கு அதிகரித்துச் செல்வதனைப் பிரதிபலித்தது. அதேவேளை அரசதுறை முதலீடு முக்கியமாகப் பொருளாதார, சமூக உள்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் செறிந்து காணப்பட்டது. தற்பொழுது நடைபெற்றுவரும் உள்நாட்டுக் குழப்பங்கள் முதலீட்டாளர் மனோநிலையில் மோசமான தாக்கங்களைக் கொண்டிருந்தபோதும் பொருளாதாரம் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரக்கூடியதாக இருந்ததன் காரணமாக 2000ஆம் ஆண்டில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 175 மில்லியனாக விளங்கின.

விரைந்து அதிகரித்துவரும் கேள்வியினை எதிர்கொள்ளுவதற்கான அரசதுறை தனியார்துறை ஆகிய இரு துறைகளினதும் அதிகரித்த முதலீட்டுடன் 2000ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி தொடர்ந்தது. எனினும் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலில் காணப்பட்ட தாமதங்களின் காரணமாகவும் ஆண்டின் நடுப்பகுதியில் அதிகரித்த பாதுகாப்புச் செலவுகளை எதிர்கொள்ளுவதற்காக வேண்டி மூலதனச் செலவுகளைக் குறைக்க வேண்டியிருந்தமையினாலும் உட்கட்டமைப்பு வசதிகளில் அரசாங்கத்தின் முதலீடு எதிர்பார்ப்புக்களை விடக் குறைவாக இருந்தது. உட்கட்டமைப்பு வசதிகளையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட அரச முதலீடுகள் வரவு செலவுத்திட்ட இலக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.4 சதவீதமாகக் காணப்பட்டது. இந்த வீழ்ச்சியின் மத்தியிலும் முக்கியமாக போக்குவரத்து, வலு, தொலைத்தொடர்பூட்டல் மற்றும் துறைமுகம் ஆகியவற்றில் 2000ஆம் ஆண்டில் அரச துறையினாலும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பல தொடக்கி வைக்கப்பட்டன. கடந்த சில ஆண்டுகளில் சமூக குறிகாட்டிகளில் மேலும் மேம்பாடுகளை இயலச் செய்யும் வகையில் கல்வி மற்றும் நலத்துறைப் பணிகளுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மின்வலு, சுத்தமான, குடிநீர், தொலைத் தொடர்பூட்டல் வசதிகள் மற்றும் போக்குவரத்து சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகள் என்பனவற்றைக் கொண்ட குடும்ப அலகுகளின் சதவீதம் அதிகரித்துள்ளதெனினும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவும் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் உட்கட்டமைப்புத் தடைகளை நீக்குவதற்கும் மேலதிகமாக முயற்சியும் மூலவள ஒதுக்கீடும் அத்தியாவசியமாகும்.

**அட்டவணை 1.3**
மொத்த தேசிய உற்பத்தி
(துறைகளின் பங்குகள் சதவீதத்தில்)(அ)

| | 1978 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|
| 1. விவசாயம், காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் | 30.3 | 21.1 | 20.7 | 19.4 |
| 2. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 2.2 | 1.9 | 1.8 | 1.9 |
| 3. தயாரிப்புத் தொழில் | 18.4 | 16.5 | 16.4 | 16.8 |
| 4. கட்டடவாக்கம் | 4.7 | 7.6 | 7.6 | 7.3 |
| 5. பணிகள் | 44.4 | 52.9 | 53.5 | 54.6 |
| மின்வலு, வாயு, நீர், சுகாதாரப்பணி | 0.4 | 1.5 | 1.5 | 1.2 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 10.7 | 11.1 | 11.4 | 11.7 |
| மொத்த சில்லறை வர்த்தகம் | 19.7 | 21.5 | 21.2 | 22.6 |
| வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 2.2 | 7.6 | 8.1 | 8.1 |
| வதிவடங்களின் உடைமை | 3.7 | 1.9 | 1.8 | 1.8 |
| பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 3.6 | 5.3 | 5.3 | 5.2 |
| பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.1 | 4.0 | 4.1 | 4.0 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| 7. வெளிநாடுகளிலிருந்தான தேறிய காரணி வருவாய் | -0.6 | -1.3 | -1.8 | -2.0 |
| 8. மொத்த தேசிய உற்பத்தி | 99.4 | 98.7 | 98.2 | 98.0 |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில்

தனியார்துறை சேமிப்புக்கள் மேம்பட்டு 12.3 சதவீதமான உயர்ந்த வீதத்தில் காணப்பட்டமைக்கு அதிகரித்த தலைக்குரிய வருமானங்கள், கவர்ச்சிகரமான நேர் உண்மை வட்டிவீதங்கள் மற்றும் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களின் அதிகரித்த தனியார் பணவனுப்பல்கள் என்பனவே காரணமாக இருந்தன. எனினும் மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் மொ.உ.உற்பத்தியின் 17.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2000ஆம் ஆண்டில் இறையில் ஏற்பட்ட நழுவல்களின் விளைவாக அரசின் குறைச்சேமிப்பு 1999இன் 1.0 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தி 3.4 சதவீதத்திற்கு அதிகரித்தமையே காரணமாகும்.

உயர்ந்த பொருளாதார வளர்ச்சியும் விரிவடைந்துவரும் முதலீட்டு நடவடிக்கைகளும் கூடியளவு தொழில்வாய்ப்புக்களை, குறிப்பாக தனியார்துறையில் உருவாக்கியுள்ளன. இதன் விளைவாக தொழிலின்மை வீதம் 7.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து நாட்டில் புதிய தொழில்களினூடாக தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டதனைப் பிரதிபலித்ததுடன் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களையும் அதிகரித்தது. தொழிலின்மை வீதத்தில் கீழ் நோக்கிய போக்கு பதிவு செய்யப்பட்ட தொடர்ச்சியான ஏழாவது ஆண்டு இதுவாகும். எனினும் தொழிலின்மை, குறிப்பாக உயர்கல்வி கற்ற இளைஞர்களிடையே இன்னமும் உயர்வாகவே

வரைபடம் 1.2
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளமைப்பு




இருக்கின்றது. அதேவேளை சில கைத்தொழில்களில் நிரப்பப்படாத வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்படுவதானது தொழிலாளர் சந்தையில் கேள்விக்கும் நிரம்பலுக்குமிடையில் காணப்படும் பொருத்தப்பாடின்மையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. 2000ஆம் ஆண்டில் பெயரளவுக் கூலிகளும் சம்பளங்களும் அதிகரித்தமையானது பெரும்பாலான பொருளாதாரத் துறைகளின் உண்மைக் கூலிகளைப் பாதுகாப்பதாக இருந்தது.

1998இன் தொடக்கப்பகுதியில் இருந்து 2000ஆம் ஆண்டு முதலரைப் பகுதிவரை வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைப் பதிவு செய்த பணவீக்க வீதம் ஆண்டின் பின் பகுதியில் நேர்மாறான போக்கினைக் கொண்டிருந்தமைக்கு பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட உயர்வினைத் தொடர்ந்து சில நிருவகிக்கப்பட்ட விலைகளில் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தம், சீனி, பால், உற்பத்திகள் மற்றும் வளமாக்கி போன்ற மற்றைய சில இறக்குமதிகளின் விலைகளின் அதிகரிப்பு மற்றும் ரூபாவின் பெறுமதித் தேய்வு என்பன காரணங்களாக அமைந்தன. உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கம் வழங்கல் நிலைமையை மேம்படுத்தியமையினால் பணவீக்க அழுத்தம் ஓரளவிற்கு தணிக்கப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பின்மூலம் அளவிடப்பட்ட ஆண்டுச் சராசரி பணவீக்க வீதம் 2000ஆம் ஆண்டில் 6.2 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும், புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில், இது 1999 இறுதியில் காணப்பட்ட 4 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டு திசெம்பரில் 10.8 சதவீதத்திற்கு உயர்வடைந்து செலவை உயர்த்தும் காரணங்களின் முக்கிய காரணமாக பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்கள் அதிகரித்துச் செல்வதனை பிரதிபலித்தது. இத்தகைய பின்னணியில், கூட்டுக் கேள்வியிலிருந்து எழும் உள்ளார்ந்த பணவீக்க அழுத்தங்களை சமப்படுத்தும் பொருட்டும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையினை இறுக்கமாக்கியது.

அண்மைக்கால அரசிறை மேம்பாடுகளை வலுப்படுத்துகின்ற அரசினது முயற்சியின் ஒரு பகுதியாக, நடைமுறைக் கணக்கில் மொ.உ.உற்பத்தியின் 0.6 சதவீதங்கொண்ட மிகையுடன் பங்குக்குறையை நிதியிடுவதற்காக உள்நாட்டுக்கடன்பாடுகளை மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதத்திற்கு குறைப்பதன் மூலம் திரண்ட இறைப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.6 சதவீதத்தில் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் இலக்கிட்டது. எனினும் இறைச் சூழல் மோசடைந்து உயர்ந்த பற்றாக்குறையை உருவாக்கியதன் மூலம் உள்நாட்டுக் கடன்பாடுகளை அதிகரித்தன. 2000ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காகச் சில சரிப்படுத்தும் வழிமுறைகள் எடுக்கப்பட்டபோதும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 3.4 சதவீதத்திற்கு விரிவடைந்த வேளையில் கொடைகள் நீங்கலான திரண்ட இறைப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 9.9 சதவீதத்திற்கு உயர்வடைந்து 1995இல் பதிவு செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 10.1 சதவீதத்திற்குப் பின்னர் ஏற்பட்ட உயர்வீதமாகக் காணப்பட்டது. இதற்கு, இறக்குமதித் தீர்வை மற்றும் வருமானவரி என்பனவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் உயர்ந்த பாதுகாப்புச் செலவினம் மற்றும் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளின் முக்கிய

விளைவாக மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புமே காரணமாகும்.

அதிகரித்த பற்றாக்குறையானது தனியார் மயமாக்கல் செயல் முறையில் ஏற்பட்ட தாமதம் மற்றும் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவான வெளிநாட்டு நிதியிடலின் உட்பாய்ச்சல் என்பனவற்றுடன் சேர்ந்து அரசின் உள்நாட்டுக்கடன்பாடுகளை மொ.உ.உற்பத்தியின் 9.4 சதவீதத்திற்கு உயர்த்தியமையினால் உள்நாட்டு வட்டி வீதங்களில் அழுத்தம் ஏற்படுத்தப்பட்டது. வங்கியல்லா உள்நாட்டு மூலவளங்களின் கிடைப்பனவு வரையறுக்கப் படுகின்றமையினால், அரசு வங்கித் தொழில் முறையிலிருந்து மீதி மூலவளத் தேவைகளை ஈடுசெய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது. இதன் விளைவாக, அரசின் வங்கிக் கடன்பாடுகள் ரூ.53.4 பில்லியனால் மொ.உ.உற்பத்தியின் 4.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. கடந்த 12 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த அளவு இதுவாகும். வர்த்தக வங்கிகள் தனியார்துறையின் கொடுகடன் கேள்விகளுக்கு நிதியிடுவதற்கு தேவையான திரவத் தன்மையினைப் பெற்றுக் கொள்வதற்கு மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியினை பயன்படுத்தியமையினதும் அரசதுறையின் அதிகரித்த கொடுகடன் தேவைகளினாலும் இதில் பெரும்பகுதி (84 சதவீதம்) மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகளில் பிரதிபலிக்கப்பட்டது. அரச கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகள் ரூ.25.2 பில்லியனால் உயர்வடைந்தமைக்கு எண்ணெயின் உயர்ந்த உலக விலைகளுக்கு ஏற்ற விதத்தில் அவை தமது உற்பத்திகளின் விலைகளை உயர்த்துவதில் காணப்பட்ட தாமதமே முக்கிய காரணமாக இருந்தது. இதனால் அரசதுறையின் திரண்டபற்றாக்குறை (அரசு மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்) 1999இன் ஏறத்தாழ மொ.உ.உற்பத்தியின் 7.8 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 11.9 சதவீதத்திற்கு உயர்வடைந்து உள்நாட்டுக் கொடுகடனுக்கான கேள்வியை உயர்த்தியதுடன் வட்டி வீதங்களின் மீதான அழுத்தத்தினையும் அதிகரித்தது.

இதன்விளைவாக, அரசின் மொத்தப்படுகடன் இருப்பு ரூ.167 பில்லியனால் (16 சதவீதம்) 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.1,219 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 97 சதவீதம்) அதிகரித்தமையானது படுகடன் பணிச் சுமையினை மேலும் உயர்த்தியது. நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில், சந்தை சார்ந்த கடன்பாட்டுக் கருவிகளின்மீது (அதாவது திறைசேரி முறிகள்) தங்கியிருப்பது அதிகரித்த வேளையில் சந்தைசாரா கடன்பாட்டுக் கருவிகளின் (ரூபாப்பிணைகள்) 2000ஆம் ஆண்டில் மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தன.

ஏற்றுமதிகளில் தொடர்ச்சியான அதிகரிப்பும் தனியார் மாற்றங்களினூடான உட்பாய்ச்சல்களில் அதிகரிப்பும் காணப்பட்டபோதும், 2000ஆம் ஆண்டில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் அதேபோன்று சென்மதி நிலுவையின் திரண்ட பற்றாக்குறையும் பெருமளவிற்கு விரிவடைந்தமைக்கு வலு மற்றும் பாதுகாப்புத் தொடர்பான இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1999இன் மொ.உ.உற்பத்தியின் 3.6 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 6.4 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் சென்மதி நிலுவையின் திரண்ட பற்றாக்குறை முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 263 மில்லியன் கொண்ட குறைந்த அளவிலிருந்து ஐ.அ.டொலர் 516 மில்லியனுக்கு மோசமடைந்தது.

உயர்ந்த சென்மதி நிலுவைப் பற்றாக்குறை 2000ஆம் ஆண்டு இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 36 சதவீதத்தினால் அல்லது ஐ.அ.டொலர் 596 மில்லியனால் ஐ.அ.டொலர் 1043 மில்லியனுக்கு (1.7 மாத இறக்குமதிகள்) வீழ்ச்சியடைய வழிவகுத்தது. எனினும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 141 மில்லியனாக அதிகரித்தமையின் விளைவாக நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் 2000ஆம் ஆண்டு இறுதியில் சிறிய தொகையினால் அதாவது ஐ.அ.டொலர் 456 மில்லியனால் (18 சதவீதம்) ஐ.அ.டொலர் 2,126 மில்லியனுக்கு (3.5 மாத இறக்குமதிகள்) வீழ்ச்சியடைந்தது.

அதிகரித்த வெளிநாட்டுத்துறைப் பற்றாக்குறையும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் பன்னாட்டு ஒதுக்குகளும் 2000ஆம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் விரைவாகத் தேய்வடையும் விதத்தில் ரூபாவின் மீது அழுத்தங்களை ஏற்படுத்தின. செலாவணிச் சந்தையில் அழுத்தங்களைக் குறைக்கும் விதத்தில் மத்திய வங்கி இடையீட்டு நாணயமான ஐ.அ.டொலரின் வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களுக்கிடையிலான அளவினைப் படிப்படியாக விரிவாக்கிய வேளையில் ஊக அடிப்படையில் வெளிநாட்டு நாணய நிலுவை வைத்திருப்பதனை ஊக்கமிழக்கச் செய்யும் விதத்தில் குறுங்கால வட்டிவீதங்களை உயர்த்தியது. மத்திய வங்கியின் நடுவீதத்தினால் அளவிடப்பட்டவாறு 2000ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலருக்கு எதிராக ரூபா 1999இன் 6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 9.9 சதவீதத்தினால் (வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி சந்தைச் சராசரி செலாவணி வீதத்தினால் அளவிடப்பட்டவாறு 12.5 சதவீதம்) தேய்வடைந்தது. ஐ.அ.டொலருக்கெதிராக மற்றைய பங்காளர் மற்றும் போட்டியாளர் நாடுகளின் செலாவணி வீதங்களும் தேய்வடைந்தமையின் காரணமாக, 24 கூடை நாணயங்களுக்கெதிராக ரூபாவானது பெயரளவு

பயன்தரு தாக்கமுள்ள நியதிகளில் 6.7 சதவீதத்தினால் மட்டும் தேய்வடைந்தது. எனினும், இலங்கையில் காணப்படும் உயர் பணவீக்கத்திற்கு இடமளித்து நோக்குகையில், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 0.6 சதவீதங் கொண்ட சிறிதளவு உயர்வினை மட்டும் பதிவு செய்துள்ளமையானது, நாட்டின் வெளிநாட்டுப் போட்டித் தன்மை முன்னேற்றமடையவில்லை என்பதனை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

சென்மதி நிலுவையில் காணப்பட்ட அதிகரித்த பற்றாக்குறையின் காரணமாக நாட்டின் வெளிநாட்டுச்செலாவணி ஒதுக்குகள் குறைவடைந்தமை, குறிப்பாக 2000ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் செலாவணி வீதத்தில் தவிர்க்கமுடியாத கீழ் நோக்கிய சீராக்கமொன்றிற்கு வழிவகுத்தது. இதன்படி, மத்திய வங்கி அதன் வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களுக்கிடையிலான அளவினை 2001 சனவரியில் 10 சதவீதத்திற்கு விரிவாக்குவதற்கு முன்னர் 2000ஆம் ஆண்டு யூனில் 2 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கும் நவெம்பரில் 6 சதவீதத்திற்கும் திசெம்பரில் 8 சதவீதத்திற்கும் விரிவாக்கியது. அதேவேளை சந்தை நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற நகரும் வீச்சு முறையின் கீழ் கிரமமான சீராக்கங்கள் செய்யப்பட்டன. சந்தை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட விரிவாக்கப்பட்ட அளவுகளும், கிரமமான சீராக்கங்களும் வெளிநாட்டுச் செலாவணிச்சந்தை அழுத்தங்களைப் படிப்படியாக விடுவிக்க அனுமதித்தமையின் மூலம் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளுடன் செலாவணி வீதத்தில் அழுத்தத் தன்மை தடுக்கப்பட்டதுடன் இதன் மூலம் அபிவிருத்தியடைந்து வருகின்ற பல நாடுகளில் குறிப்பாக கிழக்காசியா மற்றும் லத்தீன் அமெரிக்கா நாடுகளில் காணப்பட்ட உள்ளார்ந்த நிதியியல் நெருக்கடிகளும் தவிர்க்கப்பட்டன.

எனினும், நடைமுறைப் பொருளாதார சூழலில், தலையிட்டு வீச்சின் பிரிவினைக் கிரமமாக விரிவாக்குவது, ரூபாவின் தொடர்ச்சியான தேய்வுக்கான சந்தை எதிர்பார்ப்புக்களின் உருவாக்கத்திற்கு வழிவகுப்பதுடன் இதன் மூலம் நாட்டின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்கின் மீதும் தேவையற்ற அழுத்தங்கள் ஏற்படுத்தப்படுகின்றது. அதேவேளை உயர்ந்த வட்டி வீதங்கள் வலுவான நிதியியல் துறைக்கும் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்களுக்கும் தீங்கு பயக்குமாகையால், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டினை வழங்குவதற்காகச் செய்யப்பட்ட வட்டிவீத அதிகரிப்புகளை நீண்ட காலத்திற்குப் பேண முடியாமல் இருக்கும். அதே நேரம் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை முதிர்ச்சி மட்டமொன்றை அடைந்துள்ளதுடன் மிகுந்த நெகிழ்ச்சியும் போட்டித் தன்மையும் கொண்ட சந்தைச் சூழலில் செலாவணி வீதத்தினை நிர்ணயிக்கும் அனுபவத்தையும் பெற்றுக்கொண்டது.

இவ்வனைத்துக் காரணிகளையும், நீண்ட காலப் பொருளாதார வாய்ப்புக்களையும் கவனத்திற் கொண்டு 1977இல் தொடங்கப்பட்ட மிதக்கும் செலாவணிவீத முறையின் படிமுறை வளர்ச்சியின் முன்னோக்கிய இன்னொரு நடவடிக்கையாக வெளிநோக்கிய பொருளாதார தாராளமயமாக்கல் கட்டமைப் பொன்றுடன் 2001ஆம் ஆண்டு சனவரி 23ஆம் நாளிலிருந்து புதிய செலாவணிவீத அமைப்பொன்றினை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. புதிய முறையின்கீழ், ஐக்கிய அமெரிக்கா டொலருக்கான (இடையீட்டு நாணயம்) வாங்கும் விற்கும் வீதங்களை முன் கூட்டியே அறிவிக்கின்ற அதன் முறையினை மத்திய வங்கி நிறுத்திக் கொண்டது. அதற்குப்பதிலாக, சந்தை விலைகளில் அல்லது அதற்கு அண்மிய விலைகளில் வெளிநாட்டு செலாவணியினை வாங்குவது மற்றும் விற்பது ஊடாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தீவிரமாகப் பங்கேற்பதற்கு தீர்மானித்தது. இது செலாவணி வீதத்தினைத் தீர்மானிப்பதற்கு சந்தைக்குப் பூரணமான சுதந்திரத்தை வழங்கியவேளையில் அதிகாரிகள் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புவதனை இயலச் செய்தமையானது, நீண்ட காலத்தில் விலை மற்றும் செலாவணித்துறை இரண்டிலும் உறுதிப்பாட்டினைக் கொண்டு வந்து, வலுவான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைய உதவும்.

ஒருசில நாட்கள் அளவுக்கு மீறிய உயர்வினைக் கொண்டிருந்த செலாவணி வீதச் சந்தை ஒரு குறுங்காலத்திற்கிடையில் மீண்டும் உறுதிப்பாட்டினை எய்தி செலாவணி வீதம் உறுதியான நிலையை அடைந்ததுடன், நிர்ணயிக்கப்பட்ட அல்லது முகாமைப்படுத்தப்பட்ட முறையொன்றிலிருந்து மிதக்கவிடப்படுகின்ற முறைக்கு மாறியவேளையில் மற்றைய பல நாடுகளில் காணப்பட்ட அனுபவங்களுடன் ஒப்பிடுகையில் அளவுக்கு மீறிய உயர்வு மிகையான ஒன்றல்ல. (கூடுதலான விபரங்களுக்கு சிறப்புக் குறிப்பு 1இனைப் பார்க்கவும்) உறுதிப்பாடு மீண்டும் விரைவாக அடையப்பட்டமைக்கு வீச்சினை விரிவாக்கியதன் மூலமாக அழுத்தத்தினை படிப்படியாகக் குறைத்தமையும், முன்னைய ஆண்டுகளில் செலாவணி வீதம் படிப்படியாகத் தேய்வடைந்தமையுமே காரணமாகும்.

வெளிநாட்டுத்துறையிலும், இறைத்துறையிலும் ஏற்பட்ட அபிவிருத்திகள் 2000ஆம் ஆண்டிற்கான நாணய முகாமைத்துவத்தில் குறிப்பிடத்தக்க சிக்கல்களைக் கொண்டிருந்தன. அதிகரித்த அரசதுறைக் கடன்பாடுகள் மற்றும் அதிகரித்த சென்மதி நிலுவைப்

சிறப்புக் குறிப்பு 1

## இலங்கையில் செலாவணி வீத முகாமைத்துவத்தின் படிமுறை வளர்ச்சி

இலங்கை மத்திய வங்கி நிறுவப்படக் காரணமாயமைந்த நாணய விதிச்சட்டமானது, இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியின் உறுதிப்பாட்டினை வெளிநாட்டு நாணயங்களுக்குச் சார்பான வகையிலும் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளுடன் இணைத்தும் பேண வேண்டிய பொறுப்பினை வங்கிக்கு வழங்கியுள்ளது. கடந்த அரை நூற்றாண்டில், இலங்கையின் செலாவணி வீத முறை, நிலையான செலாவணி வீத முறைமையொன்றிலிருந்து நிருவகிக்கப்பட்ட மிதப்புக்கும் இறுதியில் சுதந்திரமானதொரு மிதப்புக்குமாக படிப்படியாக மாற்றமடைந்தது.

### நிலையான செலாவணி வீத முறைமை

மத்திய வங்கி முதன் முதலில் நிறுவப்பட்ட போது, அந்த நேரத்தில் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது போன்று இலங்கையும் நிலையான முறைமையொன்றைக் கொண்டிருந்தது. இலங்கை ரூபா, ஸ்ரேலிங் பவுணுடன் இணைக்கப்பட்டிருந்தது. நிலையான செலாவணிவீதமுறை 1960களிலும் பெரும்பாலான 70 களிலும் பேணப்பட்டு வந்ததுடன் நிலையான செலாவணிக் கட்டுப்பாடு முறையினையும் கொண்டிருந்தது. பெரும்பாலும் இக்காலப்பகுதி முழுவதிலும் வெளிநாட்டு ஒதுக்குகள் மீது கடுமையான அழுத்தம் காணப்பட்டது. ஒதுக்குகளில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட குறைப்பு மற்றும் ஸ்ரேலிங் பவுணினது பெறுமதியிறக்கம் ஆகியவற்றுக்குப் பதிலிறுக்கும் வகையில் 1967இல் ரூபா 20 சதவீதத்தால் முதலில் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டது. இப் பெறுமதியிறக்கமானது 1968இல் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டைச் செலாவணி வீத முறையினால் குறை நிரப்பீடு செய்யப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டமெனக் கூறப்பட்ட இம்முறையின் கீழ், இன்றியமையாத இறக்குமதிகள் மற்றும் மரபு ரீதியான ஏற்றுமதிகளுக்குப் பொருந்தக்கூடிய அலுவல்சார் செலாவணி வீதமொன்றும் மற்றும் ஏனைய அனைத்து ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளுக்குப் பொருந்தக்கூடிய மற்றொரு உயர்வான வீதமும் காணப்பட்டிருந்தன. இத்திட்டத்தின் நோக்கம், இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளின் பாய்ச்சலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சந்தை முறையை அனுமதிப்பதன் மூலம் ஏற்றுமதியை பன்முகப்படுத்தலும் இறக்குமதியைச் சுருக்குவதுமாகும். அத்தகைய இறக்குமதிகளின் பரந்த அளவிலான ரூபாச்செலவினை வெளிநாட்டுச் செலாவணியின் உண்மைத் தன்மைக்கு நெருங்கிய அளவில் கொண்டு வருவதற்கேற்ற வகையிலேயே இது வடிவமைக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க நாடுகளினால் 1971 ஓகத்தில் தங்கத்துக்கான ஐ.அ.டொலரின் மாற்று வீதமானது இடை நிறுத்தப்பட்டமையினால் ரூபா ஐ.அ.டொலரொன்றுக்கு ரூ.5.952 கொண்ட தற்போது நிலவும் சமநிலையில் ஐ.அ.டொலருடன் இணைக்கப்பட்டு ஏனைய நாணயங்களுக்கெதிரான சமநிலைகளை, பன்னாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் ஐ.அ.டொலருடனான அவர்களது குறுக்கு வீதங்களினடிப்படையில் தீர்மானிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. .1972 யூனில் ஸ்ரேலிங் பவுண் மிதக்க விடப்பட்டதைத் தொடர்ந்து 1972 யூலை 10 இலிருந்து ரூ.14.94 கொண்ட நடைமுறையிலுள்ள சமநிலையில் இலங்கை ரூபா ஸ்ரேலிங் பவுணுடன் இணைக்கப்பட்டது. செலாவணி வீதத்தை தீர்மானிப்பதற்காக பொருத்தமான முறையில் நிறைவேற்றப்பட்ட நாணய கூடையொன்றுடன் தொடர்புபடுத்தி ஒரு நாணயத்துக்கான கடினமான இணைப்பிலிருந்து பல நாணயங்களைக் கொண்ட நாணயக்கூடை முறைக்கு 1976இல் இலங்கை நகர்ந்தது. முன்னைய முறைமையின் கீழ் வெளிநாட்டில் ஏற்பட்ட இடையிடையேயான நிகழ்வுகளிலிருந்து ரூபா பாதுகாக்கப்பட வேண்டிய தேவையினால் இந்நடவடிக்கை அவசியமாகக் காணப்பட்டது. ரூபாவுக்கும், ஸ்ரேலிங் பவுணுக்குமிடையேயான இணைப்பின் ஊடாக இது இலங்கைக்கு மாற்றப்படக் கூடியதாயிருந்தமையே இதற்கான காரணமாகும்.

செலாவணி வீதத்தைத் தீர்மானிப்பதில் நாணயக் கூடையினது பயன்பாட்டுடன், இலங்கைப் பொருளாதாரத்திலான அடிப்படை போக்குகளின் தாக்கத்தைப் பொறுத்தவரையில், பெருமளவான வாய்ப்பொன்று காணப்படுவதுடன் ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கையின் செலாவணி வீதங்களிலும் இது பிரதிபலிக்கக்கூடியதாயிருக்கும். 1977 ஓகத்துக்கும் நவெம்பரின் நடுப்பகுதிக்குமிடையில் செலாவணி வீதமானது நகரும் முறையின் கீழ் படிப்படியாக மீளச் சீராக்கஞ் செய்யப்பட்டு, ரூபாவுக்கு அதிகளவுக்கு இயல்பான தன்மையுடைய வீதமொன்றைக் கண்டுகொள்ளும் நோக்கத்துடன் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளில் மாற்றங்களைப் பிரதிபலிக்க அனுமதிக்கப்பட்டது.

## சிறப்புக் குறிப்பு (தொடர்ச்சி)

### நகரும் வீச்சுடனான முகாமைப்படுத்தப்பட்ட மிதப்பு

1977நவெம்பரில் இலங்கையானது, கட்டுப்பாட்டுக் கொள்கைகளிலிருந்து, வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் கொடுப்பனவுகளின் பகுதியளவு தாராளமய மாக்கலுடனான தாராளமயக் கொள்கை முறைமையொன்றை நோககி முக்கியமான பெயர்வொன்றை மேற்கொண்டிருந்தது. ஆரம்பத்தில் 46 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த ஒரு சீரான செலாவணி வீதமொன்றை அறிமுகப்படுத்தியதன் மூலம் இரட்டைச் செலாவணி வீதமுறை ஒழிக்கப்பட்டது. இவ் ஒருமைப்பாட்டுடன், சந்தையில் காணப்படும் கேள்வி மற்றும் நிரம்பலின் அடிப்படையில் செலாவணி வீதமானது பெருமளவுக்கு தீர்மானிக்கப்படுவதற்கான வாய்ப்பினை வழங்கி, மிதப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. மிதப்பின் ஆரம்பநிலையில், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை உறுதியற்றதாகவும், நிதியியல் முறையானது தானாகவே தொழிற்படக்கூடியளவுக்கு முதிர்ச்சியடையாததாகவும் காணப்பட்டமையால் செலாவணி வீதத்தில் மத்திய வங்கியின் முகாமைத்துவம் அவசியமானதொன்றாகக் காணப்பட்டது. இதன்படி, மத்திய வங்கி, சந்தையிலிருந்து மற்றும் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை குறுகிய வீச்சுக்குள் வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களை நாளாந்தம் அறிவித்தது.

முகாமைப்படுத்தப்பட்ட மிதக்கும் முறையின் கீழ் மத்திய வங்கி ஆரம்பத்தில் ஆறு முக்கிய நாணயங்களுக்கான நாளாந்த வீதங்களைக் குறிப்பிட்டிருந்தது. எனினும், 1982இன் பின் வங்கியானது இடையீட்டு நாணயமாகிய ஐ.அ.டொலருக்கு மட்டுமே தனது குறிப்பீட்டை மட்டுப்படுத்தி, சந்தை நிலைமைகளின் அடிப்படையில் ஏனைய நாணயங்களுக்கான குறுக்கு வீதங்களைத் தீர்மானிப்பதற்கு வர்த்தக வங்கிகளை அனுமதித்தது. தொடக்கத்தில் மத்திய வங்கியினால் பேணப்பட்ட வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களுக்கிடையிலான வீச்சு, ஐ.அ.டொலர் 100க்கு ரூ.6.00ஆகக் காணப்பட்டது. அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு பல சந்தர்ப்பங்களில் இது சீராக்கஞ் செய்யப்பட்டதுடன் இறுதியாக 2001 சனவரியில் 10 சதவீதத்துக்குத் திருத்தியமைக்கப்பட்டு, உள்நாட்டிலுள்ள வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையானது ஆகக் கூடியளவில் முதிர்ச்சியைப் பெற்றிருந்தமையினால் செலாவணி வீதத்தைத் தீர்மானிப்பதில் சந்தை சக்திகளுக்கு அதிகளவு வாய்ப்பினை வழங்கியிருந்தது. முகாமைப்படுத்தப்பட்ட மிதப்பு முறையின் கீழ் செலாவணி வீதம் தாராளமயமாக்கப்பட்டமையுடன் நாடு தனது கொடுப்பனவு முறைமையையும் 1994 மார்ச்சு அளவில் தாராளமயமாக்கி, பன்னாட்டு நாணய நிதியின் உடன்படிக்கையின் அமைப்பு விதிகளினது viii ஆவது விதியை ஏற்றுக்கொண்டது. வெளிநாடுகளில் முதலீடுகள் மீதான கட்டுப்பாடுகள், வதிவோரின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மற்றும் வதிவுற்றோரினால் படுகடன் கருவிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ஆகியன தவிர மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களும் பெருமளவில் தாராளமயமாக்கப்பட்டன.

### 2000ஆம் ஆண்டிற்கான மாற்றங்கள்

அதிகரித்த எண்ணெய் இறக்குமதி விலைகள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய மேலதிக இறக்குமதிகள் ஆகியனவற்றின் காரணமாக சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அதிகரித்ததுடன் 2000ஆம் ஆண்டில் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளில் குறிப்பொன்றையும் விளைவித்தன. வெளிநாட்டு ஒதுக்குகள் மேலும் வீழ்ச்சியடையக் கூடுமென்ற எதிர்பார்ப்புக்களும் காணப்பட்டன. இப் பின்னணியில், செலாவணி வீதம் மீதான அழுத்தமொன்று காணப்பட்டதுடன், மத்திய வங்கியானது நகரும் வீச்சுடனான, செலாவணி வீதத்தை முகாமைப்படுத்த வேண்டிய முக்கியமான அறைகூவலொன்றையும் எதிர்நோக்கியது. 2000ஆம் அண்டு மேயில் நாடு யுத்த சூழ்நிலையிலிருப்பதாக அரசு பிரகடனப்படுத்தியமையினால், அதிகரித்துச் செல்லும் பெற்றோலிய விலைகள் மற்றும் வீழ்ச்சியடையும் ஒதுக்குகள் ஆகியவற்றோடு சந்தையானது அரசிடமிருந்து அதிகளவான செலவை எதிர்பார்த்ததுடன் ரூபாவின் பெறுமதித் தேய்வொன்றுக்கான சந்தை எதிர்பார்ப்பொன்றையும் உருவாக்கியது. ஏற்றுமதியாளர்கள் தமது வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை நிறுத்தி வைத்து, ரூபா நிதியங்களினூடாக தமது தொழிற்பாடுகளை நிதியிடும் வேளையில் இறக்குமதியாளர்கள் தமது தொழிற்பாடுகளில் முன்னேற்றமடைந்ததுடன் இறக்குமதிகளுக்கான முன் பதிவுகளையும் ஆரம்பித்திருந்தனர். வாடிக்கையாளர்களுக்கான உடன் மற்றும் முன்விற்பனைகள் இரண்டினையும் உள்ளடக்குவதற்காக வர்த்தக வங்கிகளும் உடன் சந்தையில் தமது வாங்கல் நடவடிக்கைகளைத் தீவிரமாக்கின. இம் முன்னேற்றங்களின் விளைவாக, சந்தைச்செலாவணி வீதமானது, பெரும்பாலான நேரங்களில் மத்திய வங்கியின் விற்பனை வீதத்துக்குக் கிட்டிய வீதங்களில் தொழிற்படத் தொடங்கியதுடன், செலாவணி வீதத்தைப் பாதுகாக்கும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணியை விற்பனை செய்யுமாறு வங்கியை வேண்டியது. மத்திய வங்கி, தனது வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களுக்கிடையிலான வீச்சினை

## சிறப்புக் குறிப்பு (தொடர்ச்சி)

விரிவாக்கியும் 2000ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்கில் தனது வட்டி வீதத்தை அதிகரித்தும் இதற்குப் பதிலிறுத்தது. இதன்படி, மத்திய வங்கி தனது வெளிநாட்டுச் செலாவணி வாங்கல் மற்றும் விற்றல் வீதங்களுக்கிடையிலான வீச்சை 2 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 5 சதவீதத்துக்கு விரிவாக்கி, 2001 சனவரியில் 10 சதவீதமாக விரிவுபடுத்தியதற்கு முன்னர் நவெம்பரில் 6 சதவீதத்துக்கும் திசெம்பரில் 8 சதவீதத்துக்கும் மேலும் விரிவுபடுத்தியிருந்தது.

சந்தை நிகழ்வுகளைக் கருத்திற் கொள்வதன் மூலம் இந்த விதத்தில் வீச்சை விரிவுபடுத்தல் மற்றும் செலாவணி வீதத்தின் ஒழுங்கான சீரமைப்பு ஆகியன மேற்கொள்ளப்பட்டமையானது, வெளிநாட்டுச் சந்தையில், அழுத்தத்தைக் குறைப்பதை அனுமதித்ததுடன், அபிவிருத்தியடைந்து வரும் பல நாடுகளில் குறிப்பாக கிழக்காசியா மற்றும் லத்தீன் அமெரிக்கநாடுகள் ஆகியவற்றில் காணப்பட்ட நிதியியல் நெருக்கடிகளையும் தவிர்த்துக் கொண்டது. எனினும், தற்போதைய பொருளாதாரச் சூழலில், இடையீட்டு வீச்சினது ஒழுங்குமுறையிலான விரிவாக்கமானது ரூபாவின் தொடர்ச்சியான தேய்வொன்றுக்கான சந்தை எதிர்பார்ப்புக்களை உருவாக்குவதற்கு வழிவகுப்பதுடன், நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகள் மீது தேவையற்ற அழுத்தங்களை ஏற்படுத்துவதாயும் அமையுமென்பதை மத்திய வங்கி அவதானித்துள்ளது. அதே நேரத்தில், செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட வட்டி வீதங்களிலான அதிகரிப்புக்கள், நீண்டகாலத்திலான பொருளாதார நடவடிக்கைகளுக்கு உயர்வட்டி வீதங்கள் ஏற்புடையதாகக் காணப்படாமையால் நீண்டகாலத்துக்குப் பேணப்பட முடியாதவையாகும்.

### புதிய செலாவணி வீத முறைமை

2001 சனவரி 23இல், செலாவணி வீதத்தை சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கு வர்த்தக வங்கிகளை அனுமதித்ததன் மூலம், வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களைத் தாராளமயமாக்குவதில் இலங்கை முன்னோக்கிய முக்கியமான நடவடிக்கையொன்றை மேற்கொண்டது. இதற்குப் பதிலாக வாங்கும் மற்றும் விற்கும் நடவடிக்கைகளில் சந்தை விலைகளில் அல்லது அதற்கு அண்மிய விலைகளில் வங்கி தீவிரமாகப் பங்கேற்கும் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளது. புதிய முறை சந்தையில் சுதந்திரமான கொடுக்கல் வாங்கல்களை அனுமதித்த வேளையில், ரூபாவின் பெறுமதியை உறுதிப்படுத்தி, அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்களைக் கட்டியெழுப்புவதில் மேலாண்மையாளர்களுக்கு உதவியையும் வழங்கியது. தமது நாணயங்களை மிதக்கவிட்ட ஏனைய நாடுகளின் அனுபவங்கள், மாற்றுக் காலப்பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையை எடுத்துக் காட்டின. இவை சந்தைக்கு உதவவும் சந்தையை உறுதிப்படுத்தவும் மற்றும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வர்த்தக வங்கிகளின் மதிநுட்பம் வாய்ந்த நடத்தையை ஊக்குவிப்பதற்குமானவையாகும். எனவே வர்த்தக வங்கிகளுடனும்,வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களுடனும் கலந்துரையாடிய பின் பின்வரும் தற்காலிக வழிமுறைகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது

- வங்கிகளினால் வழங்கப்பட்ட கடந்தகால ஏற்றுமதி-இறக்குமதி கொடுகடன் வசதிகளின் அடிப்படையில், சட்டப்படி உரிமையற்ற குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியை வங்கிகள் கட்டி எழுப்புவதைத் தடை செய்வதற்காக, வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணியில் காணப்படும் நாளாந்த தொழிற்பாடும் நிலுவைகள் மீதான வரையறைகள்.
- ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்தி, 90 நாட்களுக்கிடையில் ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதிக் கொடுகடனைத் தீர்ப்பனவு செய்வதை உறுதிப்படுத்துமாறு வங்கிகளை வேண்டுதல்.ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில், பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளில் வாங்குனர்களுக்கு 120 நாட்கள் வழங்குவது. வழமையாகக் காணப்பட்டமையினால் இக்காலப்பகுதி 120 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. தீர்ப்பனவு காலந் கடந்திருக்கையில், உயர் வட்டி விதிக்கப்பட்டிருந்தது.
- வர்த்தகம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமே தமது முன் சந்தைத் தொழிற்பாடுகளை மட்டுப் படுத்துமாறு வங்கிகளை வேண்டுதல்.
- ஊக அடிப்படையிலான முன் ஒப்பந்த முறையினை ஊக்கமிழக்கச் செய்வதற்காக 50 சதவீத ரூபா வைப்புடனான வெளிநாட்டுச் செலாவணி முன் விற்பனை மற்றும் கொள்வனவினைத் தேவைப்படுத்துதல்.


## சிறப்புக் குறிப்பு (தொடர்ச்சி)

- பெறுமானத் தேய்வொன்று ஏற்படக் கூடுமென்ற எதிர்பார்ப்புடன், இறக்குமதி உண்டியல்களுக்கு நேர காலத்தோடான அல்லது முற் கொடுப்பனவுகளை அனுமதிக்கக் கூடாதென வங்கிகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

எதிர்பார்த்தவாறு, இவ்வழிமுறைகள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டினை உருவாக்குவதற்கு உதவின. இவை படிப்படியாகத் தளர்த்தப்படுவதுடன், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையானது விரும்பத்தக்க உறுதிப்பாட்டு நிலையை அடைந்ததும் நீக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

செலாவணி வீத முறைமையிலேற்பட்ட மாற்றத்தை உடனடுத்து, வீதத்தின் இலக்கை விஞ்சிய அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதுடன் ஏனைய பல நாடுகளில் காணப்பட்டவாறே அவ்வாறு அதிகரித்தும் காணப்பட்டது. ரூபா, முதல் இரண்டு நாட்களிலும் படிப்படியாக தேய்வடைந்ததெனினும் மூன்றாம் நாள் இலக்கை விஞ்சி அதிகரித்து, சில நடவடிக்கைகளை ஐ.அ.டொலரொன்றுக்கு ரூ.98இலும் பதிவு செய்தது. எனினும், மேலதிக பிரதிபலிப்புக்கான சந்தைத் திருத்தப்பாட்டுச் செய்முறை அதே நாளில் ஆரம்பிக்கப்பட்டதுடன், வாரமொன்றுக்கு வீதமானது ஐ.அ.டொலரொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ.88.90 ஆக உறுதிப்படுத்தப்பட்டது. உடன் சந்தையில் நிறையேற்றப்பட்ட சராசரிச் செலாவணி வீதம், மிதப்புக்கு முன்னைய மட்டத்துடன் ஒப்பிடுகையில் 2001 சனவரி 25இல் 9.1 சதவீத தேய்வொன்றைப் பதிவு செய்ததெனினும், தேய்வு வீதமானது 2001 மார்ச் 7 அளவில் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதேபோல, வெளிநாட்டு நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றல் வீதங்களுக்கிடையிலான வீச்சு, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலும், வாடிக்கையாளர்களுடனான வங்கியின் கொடுக்கல் வாங்கல்களிலும் மிகவும் கடுமையாகச் சுருக்கமடைந்தது. இது, தமது செலாவணி வீதங்களை மிதக்கவிட்ட ஏனைய நாடுகளின் அனுபவங்களுடன் ஒப்பிடுகையில் சார்புரீதியில் செலாவணி வீதத்தின் மிக விரைவான உறுதிப்பாடாகக் காணப்பட்டது. பிறேசிலின் நாணயம், மிதக்கவிடப்பட்ட முதலாம் நாளில் 40 சதவீதத்தால் தேய்வடைந்ததுடன், 1999 சனவரியில் மிதக்கவிடப்பட்ட முதலாம் மாதத்திலேயேயான தேய்வு 21 சதவீதமாகக் காணப்பட்டிருந்தது. இந்திய ரூபா, 1993 மார்ச்சில் மிதக்கவிடப்பட்ட முதலாம் மாதத்தில் 16 சதவீதத்திலும், கொறிய நாட்டு வொன் நாணயம் 1997 திசெம்பரில் மிதக்கவிடப்பட்ட முதலாம் மாதத்தில் 31 சதவீதத்தாலும் சுவீடிஷ் குரோனர் 1992இல் மிதக்கவிடப்பட்ட முதல் ஐந்து மாதங்களிலும் 28 சதவீதத்தாலும் தேய்வடைந்தன.

**வங்கிகளுக்கிடையிலான வீதங்கள்**




சந்தையில் விரைவான உறுதிப்பாட்டை அடைவதற்குப் பின்னரும் முக்கிய காரணிகள் பங்களிப்புச் செய்திருந்தன.

- நாட்டின் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளின் மாற்றங்களுக்கமைய செலாவணி வீதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கான சீராக்கங்களினூடாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலான அழுத்தத்தைப் படிப்படியாகக் விடுவித்தல் மற்றும் சந்தையில் கூடிய நெகிழ்ச்சித் தன்மையை அனுமதிப்பதற்காக நீண்ட காலப்பகுதியில் வீச்சினை விரிவாக்குதல்.

- புதிய முறைமையின் அறிமுகத்துடன் முன்னெச்சரிக்கை வழிமுறைகளின் காலத்துக்கேற்ற மற்றும் பயன்தரக்கூடிய நடைமுறைப்படுத்தல்.

- உயர்வட்டி வீதக்கொள்கை மற்றும் தொடர்ச்சியான மூலதனக் கட்டுப் பாடுகளினால் வழங்கப்படும் பாதுகாப்புக்கள். சந்தையில் பங்குகொள்வோர் மற்றும் அதிகாரிகளுக்கிடையிலான இணக்கமான மற்றும் நெருங்கிய உறவு முறை.

புதிய முறையானது, அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகள் வீணாவதை ஏற்கனவே நிறுத்தியுள்ளதுடன் கூடியளவு பயன்தரத்தக்க மட்டத்தில் அவற்றைக் கட்டியெழுப்பவும் உதவும். மேலும், செலாவணிச் சந்தையில் உறுதிப்பாடு ஏற்படுத்தப்படுவதனால் மத்திய வங்கி படிப்படியாக தனது வட்டி வீதத்தைக் குறைக்கக் கூடிய நிலைமையிலும் காணப்படும்.

## அட்டவணை 1
## செலாவணி வீத மாற்றங்கள்

| நாள் | பிரிவின் வீச்சு | முக்கிய மாற்றங்கள் | இலங்கை மத்திய வங்கியின் செலாவணி வீதம் | | | செலாவணி வீத அமைப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | வாங்கும் | நடு | விற்கும் | |
| 1949 | ரூ.0.25/ஐ.அ.டொ.100இற்கு | ரூபா இசுடேர்லிங் பவுணுடன் இணைக்கப்பட்டிருந்தது | 4.7615 | 4.7619 | 4.7640 | நிர்ணயிக்கப்பட்டது |
| 22 நவெ. 1967 | " | ரூபா 20%இனால் தேய்வடைந்தது | 5.9510 | 5.9524 | 5.9535 | நிர்ணயிக்கப்பட்டது |
| 06 மே 1968 | " | வெளிநாட்டுச் செலாவணி உரிமச் சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது | 5.9510 | 5.9524 | 5.9535 | இரட்டைச் செலாவணிவீத முறை |
| 01 ஓகத்து 1971 | " | ரூபா ஐ.அ.டொலருடன் இணைக்கப்பட்டது | 5.9510 | 5.9524 | 5.9535 | " |
| 10 யூலை 1972 | " | ரூபா இசுடேர்லிங் பவுணுடன் மீண்டும் இணைக்கப்பட்டது | 6.3940 | 6.3953 | 6.3965 | " |
| 11 யூலை 1972 | " | மாற்றத்தக்க ரூபாக் கணக்குமுறை அறிமுகப்படுத்தப்பட்டது | 6.3940 | 6.3953 | 6.3965 | " |
| 24 மே 1976 | " | ரூபா கூடை நாணயங்களின் நிறையேற்றப்பட்ட சராசரியுடன் இணைக்கப்பட்டது | 8.6440 | 8.6451 | 8.6465 | " |
| 09 மாச்சு 1977 | " | | 8.7140 | 8.7154 | 8.7165 | " |
| 12 மாச்சு 1977 | " | ரூபா 20%இனால் மீளமதிப்பிடப்பட்டது | 7.2805 | 7.2817 | 7.2830 | " |
| 15 நவெ. 1977 | " | இரட்டைச் செலாவணி வீதமுறை ஒழிக்கப்பட்டதுடன் | 8.5980 | 8.5990 | 8.6005 | " |
| 16 நவெ. 1977 | ரூ.6.00/ஐ.அ.டொ.100இற்கு | கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடப்பட்ட செலாவணிவீதமுறை அறிமுகப்படுத்தப்பட்டது | 15.9700 | 16.0000 | 16.0300 | ஒடுங்கிய பிரிவுடன் கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடல் |
| 24 ஒத். 1978 | " | | 15.6300 | 15.6600 | 15.6900 | " |
| 25 ஒத். 1978 | ரூ.3.00/ஐ.அ.டொ.100இற்கு | விரிவு குறைக்கப்பட்டது | 15.6300 | 15.6450 | 15.6600 | " |
| 09 நவெ. 1982 | " | | 20.9250 | 20.9400 | 20.9550 | " |
| 10 நவெ. 1982 | ரூ.1.50/ஐ.அ.டொ.100இற்கு | விரிவு குறைக்கப்பட்டது | 21.0225 | 21.0300 | 21.0375 | " |
| 06 மாச்சு 1987 | " | | 28.7325 | 28.7400 | 28.7475 | " |
| 09 மாச்சு 1987 | ரூ.3.00/ஐ.அ.டொ.100இற்கு | விரிவு குறைக்கப்பட்டது | 28.7350 | 28.7500 | 28.7650 | " |
| 28 பெப். 1992 | " | | 42.9650 | 42.9800 | 42.9950 | " |
| 23 மாச்சு 1992 | 1.0 சதவீதம் | விரிவு குறைக்கப்பட்டது | 42.9840 | 43.2000 | 43.4160 | " |
| 17 மாச்சு 1995 | " | | 49.6804 | 49.9300 | 50.1797 | " |
| 20 மாச்சு 1995 | 2.0 சதவீதம் | விரிவு குறைக்கப்பட்டது | 49.4109 | 49.9100 | 50.4091 | " |
| 19 யூன் 2000 | " | | 73.6907 | 74.4350 | 75.1794 | " |
| 20 யூன் 2000 | 5.0 சதவீதம் | விரிவு குறைக்கப்பட்டது | 75.6000 | 77.5400 | 79.4700 | கிடையான பிரிவுடன் கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடல் |
| 02 நவெ. 2000 | " | | 75.6000 | 77.5400 | 79.4700 | " |
| 03 நவெ. 2000 | 6.0 சதவீதம் | விரிவு குறைக்கப்பட்டது | 75.6000 | 77.8700 | 80.1400 | ஒடுங்கிய பிரிவுடன் கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடல் |
| 08 திசெ. 2000 | " | | 76.8700 | 79.1400 | 81.4100 | " |
| 11 திசெ. 2000 | 8.0 சதவீதம் | விரிவு குறைக்கப்பட்டது | 76.8700 | 79.9448 | 83.0196 | " |
| 11 சன. 2001 | " | | 77.2750 | 80.3498 | 83.4246 | " |
| 12 சன. 2001 | 10.0 சதவீதம் | விரிவு குறைக்கப்பட்டது | 77.2750 | 81.1388 | 85.0025 | " |
| 22 சன. 2001 | " | | 77.4050 | 81.2688 | 85.1325 | " |
| 23 சன. 2001 | " | மத்திய வங்கி முன்கூட்டிய அதன் வாங்கும் விற்கும் வீதங்களை அறிவிப்பதனை நிறுத்திக்கொண்டது | | | | சுதந்திரமான மிதக்கவிடல் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்புக்கள்:

1. 1977இற்கு முன்னர் விரிவு வீச்சு சம வீதத்திற்கு ஏறத்தாழ 0.12 சதம் கீழே நிர்ணயிக்கப்பட்டதெனினும், 0.05 சதவீத பெருக்கத்திற்கு அணித்தாக முழு இலக்கமாக்கப்பட்டதுடன் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை வீதம் வழங்கும் வீதத்தினைவிட 0.25 சதம் உயர்வாக இருந்தது.
2. 1982 நவெம்பர் 10ஆம் நாளிலிருந்து 2000 நவெம்பர் 23ஆம் நாள் வரையான காலப்பகுதியில் விரிவு வீச்சு ஏறத்தாழ நடுவீதமாக ஒரே வீதத்தில் காணப்பட்டது. 2000 நவெம்பா 5இன் பின் இது வாங்கும் வீதத்திலிருந்து கணிக்கப்பட்டது.

## சிறப்புக் குறிப்பு (தொடர்ச்சி)

இதன் முதற்படியாக, மத்திய வங்கி தனது மீள் கொள்வனவு மற்றும் ஓரளவிற்குரிய நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களை 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 26இல் 1 சதவீதப் புள்ளியாலும் 2001 ஏப்பிரல் 3இல் 50 அடிப்படைப் புள்ளிகளாலும் குறைத்தது.

சந்தையானது பெற்றோலியம் போன்ற பெருமளவான இறக்குமதி உண்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு, முன்னைய முறைமையின் கீழ் இருந்ததைப் போல் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளுக்கு மத்திய வங்கியைச் சார்ந்திருக்காமல், தனது சொந்த உபாயங்கள் மற்றும் கருவிகளை ஏற்கனவே விருத்தி செய்திருக்கின்றமை ஊக்கமளிக்கக் கூடியதொன்றாகக் காணப்படுகிறது. தற்போதைய செலாவணி வீத முறையின் கீழ், செலாவணி வீதமானது பெயரளவு பற்றுக்கோடு கணிக்கப்படாமையினால் செலாவணி வீதத்தைப் பாதுகாப்பதற்கு நாணயக் கொள்கையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் வங்கிக்கு ஏற்படவில்லை. வங்கி விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறையிலான உறுதிப்பாடு ஆசிய முதலாந்தர நோக்கங்களை அடைவதற்குத் தனது நாணயக்கொள்கையை சிறந்த முறையில் இலக்காகக் கொள்ளலாம். எனினும், மத்திய வங்கி செலாவணி வீதத்திலான மேலதிக தளம்பல்களைத் தடுப்பதற்காகத் தலையீட்டை மேற்கொள்ளுமெனினும், செலாவணி வீதத்தின் எந்த குறிப்பிட்ட மட்டத்தையும் பாதுகாக்கும் முயற்சியை மேற்கொள்ளாது. புதிய முறை, சந்தை நம்பிக்கைத் தன்மையையும் நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையையும் அதிகரிக்கச் செய்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் மற்றும் பொருளாதாரத்தின் இயலளவை ஊக்குவித்தல் ஆகியவற்றின் வாயிலாக உயர் வளர்ச்சியை அடையும். எதிர்காலத்தில் கூடிய தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கவும் கூடியதாயிருக்கும்.

பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக வட்டிவீதங்கள் செலாவணி வீதங்கள் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் என்பன மீது ஏற்பட்ட அழுத்தத்தினைக் கருத்திற்கொண்டு 2000ஆம் ஆண்டில் நாணயக் கொள்கை உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற வேளையில் பொருளாதார நடவடிக்கைக்கு வசதியளிக்கும் பொருட்டு போதுமான திரவத் தன்மையை வழங்குவதிலும், ஆனால் பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களுக்கு தூபமிடும் கேள்வி அதிகரிப்புக்களைத் தடுப்பதிலும் மிகுந்த கவனத்தைச் செலுத்தியது. நிதியியல் சந்தையின் நிலையான தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியின் குறுங்கால வட்டிவீதங்களை குறிப்பாக, 2000ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் உயர்த்தியதன் மூலம் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டது. இதன் விளைவாக, மத்திய வங்கியின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் 2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 9.25 சதவீதத்திலும் 13.48 சதவீதத்திலுமிருந்து ஆண்டின் இறுதியில் 17 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்கும் பல்வேறு நிலைகளில் உயர்த்தப்பட்டன. இறுக்கமாக்கப்பட்ட நாணயக் கொள்கை அதிகரித்த அரசதுறைக் கடன்பாடுகளுடன் சேர்ந்து மே மாதம் வரை வீழ்ச்சியடைந்திருந்த சந்தை வட்டிவீதங்கள் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மிகக் கூடுதலாக அதிகரிக்க காரணமாகியது. வட்டி வீதங்களில் ஏற்பட்ட மிகக்கூடிய அதிகரிப்புக்கள் தற்காலிகமான நிகழ்வாகக் கருதப்பட்டமையினால், குறுங்கால வீதங்கள் நடுத்தரகால மற்றும் நீண்டகால வீதங்களிலும் பார்க்க உயர்வாக இருந்தமையினால் அரச பிணையங்களுக்கான விளைவுவளைகோடு தட்டையாகக் காணப்பட்டது.

வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஊக்குவிப்பதனையும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையை மேம்படுத்துவதனையும் கருத்திற் கொண்டு வெளிநாடுகளில் வைத்திருக்கப்படாத வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் (11 சதவீதம்) 2000ஆம் ஆண்டு ஓகத்தில் நீக்கப்பட்டன. இவ்வழிமுறைகளின் அநுகூலங்களை பெறும் பொருட்டும் முக்கிய பன்னாட்டுச் சந்தைகளில் உயர்ந்து செல்லும் வட்டி வீதங்களுக்கு பதிலிறுக்கும் விதத்திலும் வைப்பாளர்களை ஊக்குவிப்பதற்காக வர்த்தக வங்கிகள் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான அவற்றின் வட்டிவீதங்களை உயர்த்தின.

வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைவடைந்தமையின் காரணமாக அரசதுறை வங்கிக்கடன்பாடுகளில் மிகக் கூடியளவு உயர்வு காணப்பட்டபோதும் 2000ஆம் ஆண்டில் நாணய விரிவாக்கம் ஏறத்தாழ 13 சதவீதத்தில் காணப்பட்டது. உயர்ந்த வட்டி வீதங்கள் உள்நாட்டுக் கொடுகடனின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தவும் இதன் மூலம் பெயரளவு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணய விரிவாக்கத்தினை கட்டுப்படுத்தவும் உதவியது.

மத்திய வங்கியிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் ஏறத்தாழ ரூ.45 பில்லியன் அல்லது 96 சதவீதத்தினால் அதிகரித்தபோதும் , 2000ஆம் ஆண்டில் ஒதுக்குப்பணம் 1999இன் 8.2 சதவீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 4.7 சதவீதத்தினால் மிதமான வீதத்தில் விரிவடைந்தமைக்கு நாணய மேலாண்மையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.31 பில்லியனாக வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

பணிகள், வர்த்தக மற்றும் தயாரிப்புத்துறையில் இருந்து ஏற்பட்ட கொடுகடனுக்கான அதிகரித்த கேள்விக்கு முக்கியமாக வசதியளிக்கும் பொருட்டு தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 12 சதவீதத்தினால் (ரூ. 38 பில்லியன்) அதிகரிக்கப்பட்டது. உண்மையான வரிவீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிப் போக்குகளின் காரணமாக அதிகரித்த கூட்டுறவுத் துறையின் திரவத்தன்மை, வர்த்தகப் பத்திரங்கள் போன்ற புதிய செலவு குறைந்த நிதியிடல் கருவிகளை நாடுகின்ற தன்மை, அபிவிருத்தி வங்கிகளிடமிருந்து கொடுகடன் வசதிகள் கிடைக்கக்கூடியதாகவுள்ள தன்மை என்பன வங்கிக் கொடுகடனுக்கான தனியார்துறையின் கேள்வியைக் குறைத்திருக்கக்கூடும். நிதி அளவீட்டின்படி, தனியார்துறைக்கான கொடுகடன் ரூ.48 பில்லியனால் (11 சதவீதம்) உயர்வடைந்துள்ளது. அரசுக்கான தேறிய கொடுகடன் ரூ. 53 பில்லியனால் (57 சதவீதம்) உயர்வடைந்ததுடன் இதில் ரூ.45 மில்லியன் (84 சதவீதம்) மத்திய வங்கியிலிருந்து கிடைத்தது. அதேவேளை அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் ரூ.25 பில்லியனால் உயர்வடைந்தமைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சபை மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் என்பனவற்றின் பாரிய கடன்பாடுகளே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக, மொத்த அரசதுறைக் கடன்பாடுகள் (அதாவது அரசினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் கடன்பாடுகள்) ரூ.78 பில்லியனால் (73 சதவீதம்) உயர்வடைந்து 2000ஆம் ஆண்டின் நாணய விரிவாக்கத்தில் ஏறத்தாழ 142 சதவீதத்திற்கு வகைகூறியது.

பட்டியலிடப்பட்ட பல கம்பனிகள் சிறப்பான வருவாய்களைப் பெற்றதுடன் வலுவான பொருளாதார மீட்சியும் காணப்பட்டபோதும் பங்குச் சந்தை விலைகளும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் புரள்வும் மந்தமாகவே காணப்பட்டன. 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 1999 இறுதியின் பெறுமதியைவிட 22 சதவீதம் குறைவாக இருந்தது. இவ்வீழ்ச்சிக்கு, 2000ஆம் ஆண்டு ஒத்தோபரில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலுக்கு முன்னர் காணப்பட்ட அரசியல் நிச்சயமற்ற தன்மையும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய நிச்சயமற்ற தன்மையும் நிலையான வருமானப் பிணையங்களின்மீது காணப்பட்ட உயர்ந்த வட்டி வீதங்களுமே முக்கிய காரணங்களாகும். பொருளாதாரத்தில் மீட்சியும் கம்பனித்துறைச் செயலாற்றங்களில் மேம்பாடும் காணப்பட்ட போதும், 3 ஆண்டுகளுக்கு மேலாக பங்குச் சந்தை நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு காணப்படுவதானது நீண்ட காலத்தில் தனியார் துறையினால் வழிநடத்தப்படும் பொருாதார வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாக இருக்கும் சந்தை அமைப்பினையும் மூலதனச் சந்தையின் நிறுவன ரீதியான வரைச் சட்ட அமைப்பினையும் மீளாய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றது.

போட்டிச் சூழலொன்றில் நிதியியல் துறை வசதிகளும் பணிகளும் தொடர்ந்தும் மேம்பட்டன. வங்கிக் கிளைகள் விரிவாக்கப்பட்டமையின் காரணமாக வங்கித் தொழில் அடர்த்தி மேம்பட்ட வேளையில், தன்னியக்கக் கூற்றுப் பொறிகள், கொடுகடன் அட்டைகள், மற்றும் தொலைபேசியூடான வங்கித் தொழில் வசதிகள் போன்ற நவீன பணிகளின் கிடைக்கும் தன்மை விரிவடைந்தமை, ஊக்கமளிக்கின்ற நிதியியல் இடையீடுகள் என்பன பொருளாதாரத்தில் நிதியியல் விரிவாக்கத்தினை அதிகரிக்கின்றன. கிராமிய வங்கித் தொழில் மற்றும் கொடுகடன் வசதிகளை மேம்படுத்துவதற்கும் 1999இல் அறிமுகப்படுத்தப்பட்ட வேளாண்மை உற்பத்திகளுக்கான தனியார் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த வசதிகளை விரிவாக்குவதற்கும் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வங்கிகள் உயர்ந்த வட்டிவீத வீச்சினைத் தொடர்ச்சியாகக் கொண்டிருப்பதானது நிதியியல் துறையில் வினைத்திறனையும் சீர்திருத்தங்களையும் மேலும் முன்னேற்றுவதற்கான தேவையைக் காட்டுகின்றன.

அமைப்பியல் சீர்திருத்தங்கள் கடினமான சூழ்நிலையிலும் கூட தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதெனினும், முக்கியமான பல துறைகளின் செயலாற்றம் மெதுவாகவே இருந்தது. 2000ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகள் மற்றும் காப்புறுதி வாணிபத்தில் உள்ள வெளிநாட்டுச் சொத்துடைமையை அவற்றின் மூலதன தளத்தினை மேலும் மேம்படுததும் நோக்குடனும் நிதியியல் பணிகளை நவீனமயப்படுத்துவதனை ஊக்குவிப்பதற்காகவும் முறையே 60 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் உயர்த்துவதற்கு அனுமதிக்கப்பட்டது. மத்திய வங்கி நிதியியல் துறை நடவடிக்கைகளை கண்காணித்து மேற்பார்வை செய்வதனை தொடர்ந்தும் வலுப்படுத்தியது. தகைமை பெற்ற மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையையும் வங்கிகளிலிருந்துசேகரிக்கப்பட்ட தரவுகளை விரைவாகவும் பயனுள்ள முறையிலும் செய்முறைப்படுத்தி பகுப்பாய்வு செய்யும் அவர்களின்

MAY 2001 LIBRARY

இயலாற்றலையும் உயர்த்தியதன் மூலம் மத்திய வங்கியின் மேற்பார்வை இயலளவு மேம்பட்டது. வங்கித் தொழில்முறையின் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு இடர் நேர்வுக்கு சீராக்கப்பட்ட மூலதன போதுமை விகிதமானது 2002 சனவரியிலிருந்து ஆகக் குறைந்தது 10 சதவீதத்திற்காவது உயர்த்தப்படும் என்ற நேரத்துடன் திட்டமிடப்பட்ட முன்கூட்டிய அறிவித்தலுடன் 2001 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து ஆகக் குறைந்தது 9 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. வர்த்தக வங்கிகள் அவற்றின் கொடுகடன் மதிப்பிடல்கள், மீளப்பெறல் நடவடிக்கைகள் மற்றும் கடன் வழங்கல் நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொண்டுள்ளன. எனினும் அண்மையில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் மொத்த முற்பணங்களுக்கான செயற்படாக்கடன்களின் விகிதம் இன்னமும் உயர்வாகவே (15 சதவீதம்) விளங்கி இதனை மேலும் குறைப்பதற்கான வழிமுறைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றது. இரு அரச வங்கிகளினதும் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதில் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளதுடன் நிதியமைச்சினை மீளமைப்பதற்கும் மத்திய வங்கியை நவீன மயப்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

இவ்வாண்டில், அரச படுகடன் பிணையங்கள் சந்தையை மேம்படுத்துவதற்கு மேலும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. முதனிலை வணிகர்களின் எண்ணிக்கையைக் குறைத்து எட்டு வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட பொதுக் கம்பனிகளை அதற்கேயென ஒதுக்கப்பட்ட மூலதனத்துடன் முதனிலை வணிகர்களாக நியமித்தமையின் மூலம் முதனிலை வணிகர்களின் வலையமைப்பு வலுவாக்கப்பட்டது. இது முதனிலை வணிகர்களுக்கு ஒரே மாதிரியான வாய்ப்புக்களை வழங்குமெனவும் வணிகர்களின் கண்காணிப்பிற்கு வசதிகளை ஏற்படுத்துமெனவும் அரசபடுகடன் முகாமைத்துவத்தினை வலுப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. வணிகர் கண்காணிப்பு முறைக்கு அவசியமான உட்கட்டமைப்பும் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இந்நிறுவனங்கள் சிறப்பாகவும் வினைத்திறன்மிக்க முறையிலும் தொழிற்படுவதனை கண்காணிப்பு உறுதிப்படுத்தும்.

மூலதனச் சந்தை சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில், நிருவாக மாற்றங்களின் நியதிகளில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுவது தொடர்பாக பட்டியலிடுகின்ற ஒழுங்கு விதிகளுக்கும் உள்ளகமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கும் 2000ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் சில இடம் பெற்றன. நடைமுறைக்கிடப்பட்ட முக்கியமானதொரு மாற்றம் என்னவெனில் பட்டியலிடுகின்ற விண்ணப்பங்களை மதிப்பிடுவதற்கான வெளிப்படுத்துகையை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்குச் சாதகமாக, தகுதியை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கு விதிகளை அகற்றுவதுடன் தொடர்பானதாக இருந்தது. பட்டியலிடல் செலவுகளைக் குறிப்பிடத்தக்களவில் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையை கூடியளவிற்கு வினைத்திறனுடையதாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்வி மற்றும் நலப்பணிகளின் சீர்திருத்தங்கள் தொடக்கப்பட்டிருக்கின்றன. நலத்துறை தொடர்பான சனாதிபதி செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட நலத்துறையின் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் 1998இல் தொடங்கப்பட்டு 2000ஆம் ஆண்டில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. அதேவேளை, நலத்துறைக் கவனிப்புப் பணிகளை வழங்குவதில் தனியார்துறையின் ஈடுபாடுகள் 2000ஆம் ஆண்டில் தொடர்ந்தும் விரிவடைந்தன. முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டிருந்த 17 வைத்தியசாலைச் செயற்றிட்டங்களில் 3 முக்கிய வைத்திய சாலைச் செயற்றிட்டங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைபெற்றுவருவதுடன் அவை பல்வேறுபட்ட அபிவிருத்தி நிலைகளில் காணப்படுகின்றன. கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் தொழிற் சந்தையின் புதிதாகத் தோற்றம் பெற்றுவரும் கேள்விகளுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்குமாக முதனிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை கல்வி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றன.

ஏனைய பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினைப் போன்றே இலங்கையும் வர்த்தகம் மற்றும் முதலீடுகளுடன் தொடர்பான தடைகளை படிப்படியாக அகற்றுவதன் மூலம் உலகமயமாக்கல் பாதையில் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகின்ற வேளையில், தேவையான ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு முறைகளை நிறுவிவருவதுடன் உறுதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. உற்பத்திகளையும் காரணிச் சந்தைகளையும் உலகளாவிய முறையில் ஒருங்கிணைக்கும் செயற்பாடு புதியதொன்றல்ல என்பதுடன் பொருளாதார அபிவிருத்தியில் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாகவும் மாறியுள்ளது. இலங்கையின் வரலாற்றில் பெரும் பகுதியிலும் இது பன்னாட்டு வர்த்தக வலையமைப்பில் முக்கியமானதொரு பங்கினைக் கொண்டிருக்கிறது. உலகளாவிய நுகர்வோர் தளத்தையும் மூலவளங்களையும் அடைவதற்கு அனுமதிப்பதன் மூலம் உலகமயமாக்கல்

சிறப்புக்குறிப்பு 2

## இலங்கை மத்திய வங்கியின் ஐம்பதாண்டுகள்

1948இல் சுதந்திரம் அடையப்பட்டதுடன், இலங்கையில் உறுதிப்பாட்டினையும் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் பேணி வளர்க்கக்கூடிய நாணய அமைப்பொன்றின் அவசியம் உணரப்பட்டது. இத்தேவையை பூர்த்திசெய்யும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டு 1950 ஓகத்து 28ஆம் நாளன்று தொழிற்படத் தொடங்கியது. கடந்த ஐம்பதாண்டு காலப்பகுதியில் மத்திய வங்கி வளர்ச்சியுற்றிருப்பதுடன், மக்களினதும் மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி விசைகளினதும் தேவைகளின் அடிப்படையில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டது.

இலங்கை மத்திய வங்கி நிறுவப்படுவதற்கு முன்னர், 1884ஆம் ஆண்டின் தாள் நாணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1884இல் நிறுவப்பட்ட பணச்சபை முறையே இலங்கையில் காணப்பட்ட நாணய அமைப்பாக இருந்தது. பணச்சபை ஓரளவு பலத்தைக் கொண்டிருந்ததுடன் உறுதியான சென்மதி-நிலுவைச் சூழலொன்றில் நன்கு தொழிற்பட்டது. எனினும் அதிகாரிகளின் கருத்துப்படி இது பல குறைபாடுகளைக் கொண்டிருந்ததுடன், சுதந்திரமடைந்த அதன் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவிழைகின்ற நாடொன்றிற்கு இது பொருத்தமற்றதாக இருந்தது. குறைபாடுகளிடையே 100 சதவீத ஒதுக்கு அடிப்படைத் தேவைப்பாடு, பன்னாட்டு ஒதுக்குகளுக்கும் பணநிரம்பலுக்குமிடையிலான தன்னியக்கமான இணைப்பு, செலாவணி வீதம் தீர்மானிக்கப்படும்முறை என்பன முக்கியமானவை. எனவே மாற்றமொன்று அவசியமெனக் கருதப்பட்டது.

1949இல், இலங்கை அரசின் அழைப்பின் பேரில் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் சிஸ்டத்தைச் சேர்ந்த பொருளியலாளரான திரு.ஜோன் எக்ஸ்டர் இலங்கையின் நிதியியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் மீதான அறிக்கையையும் மத்திய வங்கி ஒன்றை நிறுவுவது தொடர்பான சாத்தியங்களையும் தயாரிக்கத் தொடங்கினார். அவர் புதிய சுதந்திரமான நாணய முறையொன்றினை உருவாக்க விதந்துரைத்ததுடன் இலங்கை மத்திய வங்கியை ஏற்படுத்துவதற்கான சட்டவாக்கத்தினை உள்ளடக்கிய நாணயச் சட்ட மசோதாவின் வரைவு ஒன்றையும் சமர்ப்பித்தார். 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாயணவிதிச்சட்டம் என நடைமுறைக்கு வந்ததுடன் இச்சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டது. புதிதாக நிறுவப்பட்ட மத்திய வங்கி இலங்கையில் நாணய மற்றும் வங்கித் தொழில் முறையின் நிருவாகம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் பொறுப்பான அதிகார நிறுவனமாக மாறியது. பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இயலுமானவரையில் பணத்தின் வழங்கல், கிடைப்பனவு, செலவு மற்றும் பன்னாட்டு செலாவணி என்பனவற்றை ஒழுங்குபடுத்தும் கடமை வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது.

(அ). உள்நாட்டு நாணயப் பெறுமதிகளை உறுதிப்படுத்தல்

(ஆ) இலங்கை ரூபாவின் முகப்புப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதனைப் பாதுகாப்பதும் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான ரூபாவின் கட்டுப்பாடற்ற பயன்பாடும், இலங்கை ரூபாவின் முகப்புப் பெறுமதி நிர்ணயிக்கப்படாதிருக்குமாயின் வெளிநாட்டு நாணயங்கள் தொடர்பான இலங்கை ரூபாவின் செலாவணி வீத உறுதிப்பாட்டினை பாதுகாத்தல்

(இ). இலங்கையில் உற்பத்திகளின் உயர்பெறுமதி, தொழில்நிலை மற்றும் உண்மை வருமானத்தினை ஊக்குவித்தலும் பேணுதலும்

(ஈ). இலங்கையின் உற்பத்தி மூலவளங்களின் முழு அபிவிருத்தியையும் ஊக்குவித்தல் மற்றும் பேணல்

வடிவமைப்பு ரீதியில் மத்திய வங்கியின் நடவடிக்கைகள் தனித்துவமானவையாகும். இக் குறிக்கோள்களை அடைவதற்காக பொருளாதாரத்தின் பண நிரம்பலிலும் நிதியியல் அமைப்புமுறையிலும் தனித்துவமான செல்வாக்கினைச் செலுத்துவதற்கு நாணயக் கொள்கை பயன்படுத்தப்படுகின்றது. நாணயக்கொள்கையில் முதலாவது குறிக்கோள் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கமாகும். இரண்டாவது குறிக்கோளாக உறுதியான செலாவணி வீதம் உட்கிடையாகக் காணப்பட்டவேளையில், மூன்றாவது மற்றும் நான்காவது குறிக்கோள்கள் பொருளாதார வளர்ச்சியினையும் அபிவிருத்தியையும் உறுதி செய்தன.

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

மத்திய வங்கி நிறுவப்படுவது வங்கித்தொழில் முறையை பெருமளவிற்கு வலுப்படுத்தும் என எக்ஸ்டர் (1949) மேலும் நம்பினார். வங்கிகள் முறிந்து போவதனைத் தடுப்பதற்கு வங்கித்தொழில் நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி அதிகாரங்களைக் கொண்டிருந்ததுடன் "இறுதிக்கடன் ஈவோன்" ஆக முற்பணக் கொடுகடன்கள் வழங்கவும் ஆயத்தமாக இருந்ததன் மூலம் நெருக்கடியான காலங்களில் கூட "பெரும்பாலும் பாதிக்கப்படாத" முறையாக வங்கித்தொழில் முறை மாற்றப்பட்டது. வங்கித்தொழில் முறையை வலுப்படுத்தியமையானது பொதுமக்கள் அவர்களின் சேமிப்புக்களை வைப்புச் செய்வதற்காக நிதியியல் சந்தைகளை பெருமளவிற்கு பயன்படுத்திக் கொள்ள அவர்களை ஊக்குவித்தமையின் மூலம் பணத்தினை கடனாக வழங்க வங்கிகளை இயலச் செய்தது.

அடிப்படைக் குறிக்கோள்களை நிறைவுசெய்வது, தவிர மத்திய வங்கியினால் அரச படுகடனின் பயன்தரு முகாமைத்துவத்தினை அறிமுகப்படுத்தக் கூடியதாக நிதியியல் மதியுரையாளர் என்ற ரீதியில் அரச நிதிகளைக் கூடியளவு வினைத்திறன் மிக்க முறையில் கையாளக்கூடியதாக இருக்குமெனவும் எக்ஸ்டர் நம்பினார். மத்திய வங்கியானது பெருமளவு கொடுகடன் கிடைக்கத்தக்கதாக இருந்த வர்த்தக வங்கிகள் தவிர்ந்த ஈட்டுக்கடன் வழங்கல் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு கொடுகடன் இயக்கங்கள் போன்ற நிறுவன ரீதியான நிறுவனங்களுக்கு கடன் வழங்குகின்ற அதிகாரத்தினைக் கொண்டிருக்கவேண்டுமென வாதிட்டதன் மூலம் அபிவிருத்தி நிதிக்கான தேவையையும் எக்ஸ்டர் வலியுறுத்தியதுடன் மத்திய வங்கி கடன் காப்புறுதி மற்றும் கடன் உத்தரவாதங்களில் ஈடுபட வேண்டும் என்றும் வாதிட்டார். நேரடிச் சேமிப்புக்களுக்கும் வேளாண்மை அபிவிருத்தி மற்றும் புதிய கைத்தொழில்களுக்கான கொடுகடன் மற்றும் வெளிநாட்டு மூலவளங்களுக்கும் உதவுகின்றமையானது பொருளாதாரத்தின் பன்முகப்படுத்தலைத் தூண்டுவிக்கும் எனவும் அது மாற்றமடையும் பொருளாதார நிலைமைகளைத் தாங்கும் ஆற்றலை வழங்குமெனவும் அவர் நம்பினார். கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக, இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை மத்திய வங்கித் தொழிற்பாடுகளின் உள்ளார்ந்த பாகங்களாக மாறியுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களது வளர்ச்சியானதுஅதன் நாணயக் கொள்கை மற்றும் மற்றைய நடவடிக்கைகளின் விரிவாக்கம் என்பவற்றுடன் இணைந்து செல்வதாக இருந்தது. (அட்டவணை 1) அதன் தொடக்கத்தில், இலங்கை மத்திய வங்கி ஒரு சில திணைக்களங்களை மட்டுமே கொண்டிருந்தது. அவற்றுள் வங்கித்தொழில், பொருளாதார ஆராய்ச்சி மற்றும் செயலகம் என்பன காணப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆராய்ச்சி உள்ளீடுகளை வழங்கிய வேளையில் வங்கித்தொழில் திணைக்களம் அரசிற்கான வங்கியாளராகவும் வங்கிகளுக்கான வங்கியாகவும் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்குப் புறம்பாக., நாணயக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதனையும் மேற்கொண்டது. இலங்கை மத்திய வங்கி அரசின் முகவராகப் பல தொழிற்பாடுகளை மரபு வழியாகப் பெற்றிருக்கிறது. செலாவணிக் கட்டுப்பாடு மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவம் ஆகிய இரு திணைக்களங்கள் இந் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டன.

1951இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிறுவப்பட்டதுடன் நிதியியல்துறை அபிவிருத்தியும் உறுதிப்பாடும் இலங்கை மத்திய வங்கியின் முக்கிய தொழிற்பாடுகளாக மாறின. அதன் பின்னர், இக் குறிக்கோளை எய்துவது 1988இல் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத் தினையும் 1997இல் நிதியியல் சந்தைத் திணைக்களத்தினையும் நிறுவியதன் மூலம் மேலும் வலுவாக்கப்பட்டது. ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் பாதுகாவலனாக இலங்கை மத்திய வங்கியைத் தேவைப்படுத்திய 1958ஆம் ஆண்டின் ஊழியர் சேமநிதியச் சட்டம் இயற்றப்பட்டதுடன் 1958இல் ஊ.சே.நிதியத் திணைக்களம் நிறுவப்பட்டது.

அறுபதுகளிலும் எழுபதுகளிலும் பொருளாதார மையப்பகுதியை நோக்கிக் குவிந்து அரச தலையீடுகள் காணப்பட்டமையினால் அபிவிருத்திக் குறிக்கோள்கள் அதிகளவு வலியுறுத்தல்களைப் பெற்றன. அரசினால் தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமைத் துறைகளுக்கு கொடுகடனையும் மூலவளங்களையும் நெறிப் படுத்துவதற்கு கட்டுப்பாடுகளும், சலுகைகளும் பயன்படுத்தப்பட்டன. 1970களின் நடுப்பகுதியில், இலங்கை மத்திய வங்கி பொருளாதார அபிவிருத்தியில் கூடியளவிற்கு நேரடியான பங்கினை ஆற்றியது. இவ்விடயத்தில் உதவி வழங்கும் பொருட்டு, கைத்தொழில் மற்றும் வேளாண்மைத் துறைகளுக்கும் பணிக்கப்பட்டதும் உதவிக் கொடுப்பனவுகளை கொண்டதுமான கொடுகடன்களை வழங்குவதற்காக 1974இல் அபிவிருத்தி நிதித் திணைக்களம் நிறுவப்பட்டது. பொருளாதாரத்தில் அபிவிருத்தி நிதி தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்குத் தேவைப்பட்ட நிறுவன ரீதியான அமைப்பினை நிறுவுவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் இலங்கை

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

மத்திய வங்கி முதன்மையான பங்கினை வகித்தது. இதனைப் பொறுத்தவரையில் இது இ.அ.நி.கூ.வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி போன்ற சுதந்திரமான நிறுவனங்கள் பலவற்றை நிறுவுவதற்கு உதவியது. கிராமியக் கொடுகடன் துறையில் வங்கியின் நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கில் 1981இல் கிராமியக் கொடுகடன் திணைக்களம் நிறுவப்பட்டது. இத் திணைக்களம் அபிவிருத்தி நிதித்திணைக்களத்துடன் சேர்ந்து, பல்வேறுபட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய மட்ட இணைப்புச் சபையாகப் பணியாற்றியது. கிராமியப் பகுதிகளில் அபிவிருத்தி நிதி வசதிகளை வழங்குவதற்காகவும் பிரதேச வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் 1981-1985 காலப்பகுதியில் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டன. இது செயற்பாட்டின் ஒரு பகுதியாக, 1985 இலிருந்து பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை ஏற்படுத்துவதற்கான ஒரு கருவியாகவும் மத்திய வங்கி விளங்கியது.

**அட்டவணை 1**

**திணைக்களங்களும் அவற்றின் தொழிற்பாடுகளும்**

| நிறுவப்பட்ட ஆண்டு | திணைக்களம் | தொழிற்பாடு |
|---|---|---|
| 1950 | வங்கித் தொழில் திணைக்களம் | விலை உறுதிப்பாடு |
| 1950 | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் | விலை உறுதிப்பாடு |
| 1950 | செலாவணிக்கட்டுப்பாடு | ஏனையவை |
| 1950 | பொதுப்படுகடன் திணைக்களம் | ஏனையவை |
| 1950 | செயலகத் திணைக்களம் | அனுசரணை |
| 1951 | வங்கி மேற்பார்வைத் திணைக்களம் | நிதியியல்துறை உறுதிப்பாடு |
| 1958 | ஊழியர் சேமநிதியத் திணைக்களம் | ஏனையவை |
| 1964 | முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் | அனுசரணை |
| 1967 | நிறுவனத் திணைக்களம் | அனுசரணை |
| 1974 | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | அபிவிருத்தி நிதி |
| 1977 | நாணயத் திணைக்களம் | ஏனையவை |
| 1978 | புள்ளிவிபரவியல் திணைக்களம் | விலை உறுதிப்பாடு |
| 1979 | பணிமனைத் திணைக்களம் | அனுசரணை |
| 1980 | தகவல் திணைக்களம் | அனுசரணை |
| 1981 | கிராமிய கொடுகடன் திணைக்களம் | அபிவிருத்தி நிதி |
| 1981 | வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் | அனுசரணை |
| 1981 | தகவல் தொழில் நுட்பத்திணைக்களம் | அனுசரணை |
| 1981-85 | பிராந்திய அலுவலகங்கள் | அபிவிருத்தி நிதி |
| 1986 | பயிற்சித் திணைக்ளம் | அனுசரணை |
| 1987 | இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம் | ஏனையவை |
| 1988 | வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் | நிதியியல்துறை உறுதிப்பாடு |
| 1988 | வங்கித் தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | அனுசரணை |
| 1990 | நலன்புரித் திணைக்களம் | அனுசரணை |
| 1992 | பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் | அனுசரணை |
| 1997 | நிதியியல் சந்தை அபிவிருத்தித் திணைக்களம் | அபிவிருத்தி நிதி |
| 1997 | புதிய கட்டடங்கள் திணைக்களம் | அனுசரணை |
| 1999 | சட்டத் திணைக்களம் | அனுசரணை |

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

நேரடிக்கட்டுப்பாடுகளிலிருந்து சந்தை அடிப்படையான கருவிகளாகக் கொண்ட 1977இல் இடம்பெற்ற பொருளாதார தாராளமயமாக்கலுக்குப் பின்னர் அடிப்படை மாற்றங்கள் காணப்பட்டன. அதுவரை காணப்பட்ட நிலைப்படுத்தப்பட்ட முறைக்கு செலாவணித்துறை 1977இல் முகாமைப்படுத்தப்பட்ட மிதக்கும் முறைக்கு மாற்றப்பட்டது. பல ஆண்டுகளாக சந்தைக்கு பெருமளவு நெகிழ்ச்சித்தன்மை வழங்கப்பட்டதுடன், 2001ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கை ரூபா கட்டுப்பாடற்ற மிதத்தலுக்கு மாறியது. செலாவணி வீத முகாமைத்துவம் படிப்படியான செலாவணி வீதங்களை அடைவதற்கு உதவியதுடன் இது இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக போட்டித்தன்மையைப் பேணியதுடன் செலாவணி நெருக்கடியையும் தவிர்த்தது.

மத்திய வங்கி, நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் நேரடிக் கட்டுப்பாடுகளையும் தலையீடுகளையும் படிப்படியாகக் குறைக்கத் தொடங்கியதுடன் நாணயக்கொள்கையின் மறைமுகக் கருவியான சந்தையை அடிப்படையாகக் கொண்ட முறைக்கு மாறியது. நிதியியல் சந்தைகள் மற்றும் சந்தைக் கருவிகளில் குறிப்பாக அரச பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதில் மத்திய வங்கி தானாகவே ஈடுபடுவதனை இது தேவைப்படுத்தியது.

1980களின் பிற்பகுதியிலும் 1990களிலும் அபிவிருத்தி நிதிகளிலும் கிராமியக் கொடுகடனிலும் வங்கியின் ஈடுபாடுகள் வீழ்ச்சியடைந்தமைக்கு இத்துறைகளை அபிவிருத்தி செய்ய மற்றைய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டமையே காரணமாகும். கொடுகடன்களை நெறிப்படுத்துவதில் காணப்பட்ட ஈடுபாடுகளும் கட்டம் கட்டமாக அகற்றப்பட்டதுடன் வர்த்தக வங்கிகளும் அபிவிருத்தி வங்கிகளும் தமது கொடுகடன் கொள்கைகளை நிர்ணயிப்பதற்கு பெருமளவு நெகிழ்ச்சி வழங்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் பெருமளவு மூலவளங்களை பயன்படுத்துகின்ற மீள் நிதியிடல் வழங்கல்களும் அத்தகைய மீள்நிதியிடல்களின் சந்தை ஒழுங்கீனங்களைக் கருத்திற்கொண்டு நிறுத்தப்பட்டன.

வலுவான பொருளாதார அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு உறுதியான நிதியியல் துறை மிக முக்கியமானது என்பது கடந்த பல ஆண்டுகளில் நிதர்சனமாகியிருக்கிறது. ஆகவே நிதியியல் துறையின் உறுதிப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனம் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி அதன் தொழிற்பாடுகளை உறுதியாக்கியுள்ளது. இதனைப் பொறுத்தவரையில் இரு முனை அணுகு முறைகள் பின்பற்றப்பட்டன. ஒரு புறத்தில் வங்கி அதன் நேரடிக் கட்டுப்பாடுகளைக் குறைத்துக் கொண்டு சந்தை வளர்ச்சியை ஊக்குவிப்பது, மற்றும் புதிய நிறுவனங்களினதும் கருவிகளினதும் அபிவிருத்தியில் நெருக்கமாக ஈடுபடுவது. மறுபுறத்தில், மத்திய வங்கி இத்துறைகளில் அதன் சொந்த மேலாதிக்கத்தினை உயர்த்துதல் மற்றும் நிதியியல் சந்தையின் ஒழுங்கு முறையிலான அபிவிருத்திக்கு தூண்டுதலாக அமையக்கூடிய சட்ட கட்டமைப்பினை உருவாக்குவதற்கு உதவுதல் ஆகிய இரு வழிகளின் மூலம் அது அதன் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாட்டினை வலுப்படுத்தியது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக, இலங்கை மத்திய வங்கி இலங்கையின் நிதி மற்றும் பொருளாதார அமைப்பில் மிக இன்றியமையாததொரு இடத்தினைப் பெற்றிருக்கிறது. இதன் பங்கு வளர்ச்சியடைந்திருப்பதுடன் நாட்டின் தேவைகளுக்கும் உலகளாவிய முறையில் மாற்றமடைந்துள்ள பொருளாதார நிலைகளுக்கேற்ப மாற்றமடைந்துள்ளது. எதிர்கால நடவடிக்கையைப் பொறுத்தவரை மேலும் மாற்றங்கள் நிகழலாம். கடந்த சில தசாப்தங்களாக உலகளாவிய முறையில் காணப்படும் நிகழ்வுகள் பல உறுதிப்பாட்டினைப் பேணுவதில் மிகுந்த கவனத்தைச் செலுத்துவதன் மூலம் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதன் மூலமும் மத்திய வங்கிகள் தத்தமது நாடுகளுக்கு சிறந்த பணியினை ஆற்றியுள்ளன. எனவே, மத்திய வங்கியின் குறிக்கோள்கள் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினையும், நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினையும் பேணுவதன் மீதும் நெருங்கிய கவனத்தைக் கொண்டிருந்ததாலும் பொதுவான பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதையும் புறக்கணிக்கவில்லை. சந்தையை அடிப்படையாகக் கொண்ட கருவிகளினூடாக அதிகளவில் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் நாணயக் கொள்கை செயல்திறன் மிக்கதாகும். செலாவணி வீதம் மிதக்கவிடப்பட்டிருப்பதனால், நாணயக்கொள்கை உள்நாட்டு விலை உறுதிப்பாட்டின் மீது கவனம் செலுத்தக்கூடிய சிறந்த நிலையில் இருக்கும் நிதியியல்துறை உறுதிப்பாடு பாதுகாக்கப்பட்டுள்ளது. என்பதனையும், இலங்கையின் நிதியியல் நிறுவனங்கள் பன்னாட்டு முன்மதியுடைய தரங்களுக்கு ஈடுகொடுக்கத்தக்களவிற்கு உலகளாவிய மட்டத்தில் போட்டியிடக்கூடிய தன்மையில் உள்ளமையும் உறுதிப்படுத்தும் விதத்தில் மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பு வலுவாக்கப்படும்.

நாடுகளுக்கு நன்மை பயக்கிறது. இலங்கை போன்ற சிறிய நாடுகள் பாரிய சந்தைகளை அடைவதன் மூலம் உற்பத்திகளில் பொருளாதார அளவுத்திட்ட சிக்கனங்களிலிருந்து அவை இலாபங்களை அடைய வசதியளிப்பதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றன. இது செயல்திறன்மிக்க பொருளாதார நடவடிக்கைகளை இனங்கண்டு கொள்ளவும் மிகக்கூடியளவு உற்பத்தியாற்றல் மிக்க நடவடிக்கைகளின் மூலம் அவற்றைப் பதிலீடு செய்து கொள்ளவும் நாடுகளை அனுமதிக்கிறது. எனினும் உலகமயமாக்கலின் முழு நன்மைகளையும் பெற்றுக் கொள்ளவும் தீங்கு பயக்கும் விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் நாடொன்று நிதியியல்துறை ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை, தேவையற்ற பொருட்களைக் குவித்தல் மற்றும் கொள்ளை இலாபம் பெறும் விலையிடல் என்பனவற்றுக்கு எதிரான வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் நம்பிக்கைக்கு எதிரான சட்டவாக்கம் மற்றும் சட்டத்திற்கு மாறாகப் பெற்ற பணத்தினை சட்டரீதியாக மாற்றுவதற்கு எதிரான நடவடிக்கைகள் போன்ற பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகள் போன்ற ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையிடல் வழிமுறைகளை பரந்தளவில் நடைமுறைப்படுத்த வேண்டும். அதேநேரம் உலகமயமாக்கல் நடவடிக்கைகளை மிகையாக எதிர்த்தல் நாடுகளை ஒடுக்கி மிகப்பெரிய பக்கவிளைவுகளைத் தோற்றுவித்து தம்மை உலகமயமாக்கலுடன் ஒருங்கிணைத்து வெற்றி கண்ட நாடுகளைவிட பின் தங்கிவிடும்.

## 1.2 வெளியீடு

உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) 1998இலும், 1999இன் முற்பகுதியிலும் மெதுவடைந்த பின்பு 2000ஆம் ஆண்டில் 6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து பொருளாதாரத்தின் முன்னேற்றமடைந்த ஆற்றலினால் நன்மையடைந்தது. மதிநுட்பமான பேரண்டப் பொருளாதார முகாமைத்துவம், அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மற்றும் சாதகமான வெளிநாட்டு பொருளாதாரச் சூழல் என்பனவற்றினாலேயே இந்த ஆற்றல் பெறப்பட்டது. வெளிநாட்டில் இருந்தான தேறிய காரணி வருவாய்க்குச் சீராக்கம் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி வரைவிலக்கணப்படுத்தப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி (மொதேஉ) 1999இன் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி வீதம் பொருளாதார தொழிற்பாட்டைக் கடுமையாகப் பாதித்த பல பாதகமான நிகழ்வுகளுக்கு மத்தியிலும் எய்தப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். முதலாவதாக, மசகெண்ணெய் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதிச் செலவை ஏறத்தாழ ரூ.30 பில்லியனால் (ஐ.அ.டொலர் 400 மில்லியன்) உயர்த்திய பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பு விளங்கியதுடன் இது மொத்த இறக்குமதிச் செலவின் 12 சதவீதமாக அல்லது மொத்த ஏற்றுமதி வருவாய்களின் 17 சதவீதமாகக் காணப்பட்டது. இரண்டாவதாக, ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து தீவிரமடைந்த யுத்தத்தின் காரணமாக பாதுகாப்புச் செலவு 2000ஆம் ஆண்டுக்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டைவிட ரூ.21.9 பில்லியனால் விஞ்சியமையாகும். இது பாதுகாப்பு சார்ந்த இறக்குமதிகளை ரூ.15 பில்லியனினால் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) விரிவடையச் செய்தது. மூன்றவதாக, நீரேந்து பகுதிகளில் வழமைக்கு மாறான குறைந்த மழை வீழ்ச்சியானது நீர்மின்வலு உருவாக்கத்தைக் குறைத்ததுடன் செலவு கூடிய வெப்பவலு உருவாக்கத்தில் தங்கியிருத்தலை அதிகரித்தது. நான்காவதாக, தொடர்பூட்டல் கைத்தொழிலுக்கான மந்தமான பன்னாட்டு சந்தை நிலைமை காரணமாக தனியார் மயமாக்கல் நடைமுறையில் ஏற்பட்ட தாமதம், எதிர்பார்த்ததைவிட கூடிய உள்நாட்டுக் கடன்பாடுகளுக்கு அரசைத் தூண்டச் செய்தது.

2000ஆம் ஆண்டில் நடைமுறைச் சந்தைவிலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.1,256 பில்லியனுக்கு 13.5 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் மொத்தத் தேசிய உற்பத்தி ரூ.1,234 பில்லியனுக்கு அதிகரித்தது. நடுவாண்டுக் குடித்தொகையான 19.6 மில்லியனுடன் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 1999இன் ரூ.57,256இலிருந்து (ஐ.அ.டொலர் 813) 2000இல் ரூ.63,752 இற்கு (ஐ.அ.டொலர் 841) 11.3 சதவீதத்தால் அதிகரித்தமையை இது எடுத்துக் காட்டுகிறது. விலை அதிகரிப்புக்களுக்காக சீராக்கங்கள் செய்யப்படுமிடத்து 2000ஆம் ஆண்டில் தலைக்குரிய தேசிய வருமானம் உண்மை நியதிகளில் 4.6 சதவீதத்தால் அதிகரித்து இலங்கை மக்களின் சராசரி வாழ்க்கைத் தரங்களை மேலும் முன்னேற்றியது.

பொருளாதார மீட்சி, அனைத்து முக்கிய துறைகளிலும், முக்கியமாக ஏற்றுமதி சார்ந்த வேளாண்மை மற்றும் தயாரிப்புத் துறைகளிலும் வர்த்தகம், போக்குவரத்து, வெளியிலிருந்து பெறும் பணிகள் போன்ற சார்புரீதியிலான துணைப் பணிகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. உற்பத்திப் பக்கத்தில் மிகப்பெரிய வளர்ச்சிப் பங்களிப்பு பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து (61 சதவீதம்) பெறப்பட்டதுடன், இதனைத் தொடர்ந்து தயாரிப்புத்துறை (26சதவீதம்), வேளாண்மை ( 6 சதவீதம்), என்பன விளங்கின. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியிலான பணிகள் மற்றும் தயாரிப்புத் துறைகளின் பங்குகள் முறையே 54 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் அதிகரித்திருக்கையில் வேளாண்மைத் துறையின் பங்கு 21 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## வேளாண்மை

2000ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறையின் வெளியீட்டுச் செயலாற்றம் கலப்பாக விளங்கியது. தேயிலை மற்றும் தெங்கு உற்பத்தி புதிய சாதனையான உயர் மட்டங்களுக்கு அதிகரித்திருக்கையில் இறப்பர், நெல், மற்றும் சில களப்பயிர்களின் வெளியீடு வீழ்ச்சியடைந்தது. பல்வேறுபட்ட இந்த நிகழ்வுகளின் தேறிய தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வேளாண்மைத்துறையின் மொத்த வளர்ச்சி வீதம் 1999இன் 4.5 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 1.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 1996 இற்குப் பின்னரான குறைந்த வளர்ச்சி வீதமாக விளங்கியது.

1993ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து காணப்பட்ட மேல் நோக்கிய போக்கைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி 306 மில்லியன் கிலோக்கிறாமுக்கு அதிகரித்து சாதனை படைத்ததுடன், முதற் தடவையாக 300 மில்லியன் கி.கிறாம் மட்டத்தை விஞ்சியது. இது முக்கியமாக சாதகமான வானிலை நிலைமைகள், அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடு, கென்யாவின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியால் உருவான சாதகமான தேயிலை விலைகள் மற்றும் ருசியா/சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் மற்றும் மத்திய கிழக்குச் சந்தைகளிலிருந்தான கேள்வியில் ஏற்பட்ட மீட்சியால் ஏற்பட்டதாகும். தேயிலை விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் பெறுபேறுகள் ஊக்கப்படுத்தப்பட்டன. கொழும்பு ஏலங்களில் தேயிலையின் ஆண்டுச் சராசரி விலை கிலோக் கிறாமொன்றிற்கு ரூ.135.53 இற்கு 18 சதவீதத்தால் முன்னேற்றமடைந்து, 1999இன் நடுப்பகுதியில் ஆரம்பமான மேல் நோக்கிய போக்கைத் தொடர்ந்தது.

மூன்று நிலவகைத் தேயிலைகளும் உற்பத்தி அதிகரிப்புக்களுக்குப் பங்களிப்புச் செய்த போதிலும், முக்கிய பங்களிப்பு தாழ் நில வகைகளிலிருந்தே கிடைத்தது. மொத்த வெளியீட்டில் 60 சதவீதத்திற்கு வகைகூறிய சிறு உடமையாளர்கள்துறை, பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் 2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1999ஐவிட 12 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. சிறு உடைமைகள் துறையில் எக்டேயருக்கான சராசரி விளைச்சல் (2,216 கிகி.) முகாமைத்துவக் கம்பனிகளின் கீழான பாரிய அளவிலான பெருந்தோட்டத்துறையின் சராசரி விளைச்சலின் இருமடங்கிற்கு அண்மித்ததாகும். இக் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள், தனியார்மயமாக்கப்பட்ட பிராந்திய முகாமைத்துக் கம்பனிகளின் கீழான பெருந்தோட்டங்களின் உற்பத்தித் திறனை முன்னேற்றுவதற்கான உள்ளார்ந்த ஆற்றலை எடுத்துக்காட்டுவதுடன் முக்கியமாக, பன்னாட்டுச் சந்தையில் உயர்ந்த விலைகளின் சூழற்சியினால் வெளிப்படையாக உருவாக்கப்பட்ட நடைமுறை மிகைகளை மீள்முதலிடுவதன்மூலம் உற்பத்தித்திறனை முன்னேற்ற முடியும்.

2000ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 288 மில்லியன் கிலோக் கிறாம்களுக்கு 7 சதவீதத்தால் அதிகரித்து தொடர்ச்சியான நான்காவது ஆண்டாக உலகின் மிகப்பெரிய தேயிலை ஏற்றுமதியாளராக இலங்கையை ஆக்கியது. இலங்கைத் தேயிலையின் மிகப்பெரிய கொள்வனவாளராக ருசியா தொடர்ந்து விளங்குகையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிரியா மற்றும் துருக்கி ஆகியன ஏனைய முன்னணிக் கொள்வனவாளர்களாக விளங்கின. தொகை வடிவிலான தேயிலை ஏற்றுமதிகள் மொத்தத் தேயிலை ஏற்றுமதிகள் 63 சதவீதத்திற்கு வகை கூறுகையில் பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் பங்கு 37 சதவிதமாக விளங்கி பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களை மேலும் முன்னேற்றத்திற்கான உள்ளார்ந்த ஆற்றலை எடுத்துக்காட்டுகின்றன.

2000ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் முன்னேற்றமான விலைகளின் மத்தியிலும், இறப்பர் வெளியீடு 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து கடந்த 50 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட தாழ்ந்த உற்பத்தி மட்டத்தை அடைந்தது. அண்மைய காலப்பகுதியில் நிலவிய மந்தமான விலைகள், பேணல் மற்றும் வளமாக்கிப் பயன்பாட்டில் எதிர்க்கணியத் தாக்கமொன்றைக் கொண்டிருந்ததுடன் இறப்பர் பால் எடுக்கும் செலவைக்கூட திருப்பி எடுக்கமுடியாத சிறிய தோட்டங்களில் பாலெடுத்தலைக் கைவிடுமளவுக்கு இட்டுச் சென்றது. இதே வேளை பலகைகளின் வடிவில் இறப்பர் மரங்களுக்கான கேள்வி மற்றும் உண்மைச் சொத்து அபிவிருத்திக்கான நிலங்களுக்கான வளர்ச்சியடைந்து வரும் கேள்வி என்பன, இறப்பர் பயிர்ச் செய்கையின் கீழ்வரும் பரப்பளவைக் குறைவடையச் செய்துள்ளன. எனினும் கைத்தொழில்துறையிலான இறப்பரின் உள்நாட்டு நுகர்வு அதன் மேல் நோக்கிய போக்கைத் தொடர்ந்ததுடன் 2000ஆம் ஆண்டில் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியில் 63 சதவீதத்திற்கு வகைகூறியது. உற்பத்தி வீழ்ச்சி மற்றும் இறப்பரை அடிப்படையாகக்கொண்ட தயாரிப்புத் துறையிலிருந்தான உள்நாட்டுக் கேள்வி ஆகிய இரண்டாலும் இயற்கை இறப்பர் ஏற்றுமதிகள் 23 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் குறைந்த கேள்வியின் காரணமாக பன்னாட்டு இறப்பர் விலைகள் குறைந்தே காணப்பட்டன. மோசமடைந்து செல்லும் பன்னாட்டு இறப்பர் விலைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு இவ்வாண்டில், தாய்லாந்து, மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளினால் சில முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

2000ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்தி 8 சதவீதத்தால் அதிகரித்து 3,055 மில்லியன் காய்களை அடைந்ததுடன் முன்பு ஒருபோதும் இல்லாத சாதனையான சிறந்த வெளியீடாகவும் விளங்கியது. சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் 1999இல் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டிற்கு இட்டுச் சென்ற கூடிய விலைகள் என்பன சாதனை மிக்க இந்த விளைச்சலுக்குக் காரணமாகின. எனினும் எதிர்பார்த்தவாறு அதிகரித்த வழங்கல் மற்றும் உண்ணத்தகு எண்ணெய்களுக்கான உலக விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி உள்நாட்டுத் தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய்த் துருவலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட இயலளவு என்பன விலைகளில் பெருமளவு வீழ்ச்சியொன்றை விளைவித்தன. பெரும்பாலும் அனைத்து தேங்காய்த்துருவல் ஆலைகளும் அவற்றின் முழு இயலளவில் தொழிற்பட்டு உற்பத்தியில் 32 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்திருக்கையில், 2000ஆம் ஆண்டில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 27 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் டொலர் நியதிகளிலான ஏற்றுமதி வருவாய்கள், ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட 31 சதவீதம் கொண்ட பொதுவான அதிகரிப்புக்கு மத்தியிலும் 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

2000ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி விளைச்சலில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. சராசரி நெல் விளைச்சலில் அதிகரித்துச் செல்லும் போக்கு, சராசரி விளைச்சல் வீதம் உயர்வாகக் காணப்பட்ட நீர்ப்பாசன நிலங்களில் விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக தொடர்ச்சியான நாலாவது ஆண்டிலும் தொடர்ந்து பருவகால விலை வீழ்ச்சிகளால் மட்டுமன்றி 1999இன் பின்னைய பகுதிகளில் நிலவிய குறைந்த தீர்வையின் கீழான அரிசி இறக்குமதிகளின் காரணமாகவும் வேளாண்மையாளர்கள் அவர்களின் நெல்லை சந்தைப்படுத்துவதில் இடையூறுகளை தொடர்ந்து எதிர் கொண்டனர். பருவகால நெல் விலைகள் பெருமளவில் வீழ்ச்சியடையும் அபாயத்தைக் காட்டியதுடன், சந்தையில் அரசுசார் கூட்டுறவு நிறுவனங்கள் கொள்வனவு செய்யும் வகையில் அரசைக் கட்டாயப்படுத்தியது. பெரும்போகத்தில் (1999இன் ஆரம்பத்தில்) நிலவிய பாதகமான விலைகள் வளமாக்கிப் பயன்பாட்டை தெளிவாகவே ஊக்கமிழக்கச் செய்தன.

ஏனைய வேளாண்மைப் பயிர்கள் கலப்பான செயலாற்றத்தை வெளிக்காட்டின. ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட பயிர்களில் மிளகு, கொக்கோ கறுவா என்பன 2000ஆம் ஆண்டின் வெளியீட்டில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்திருக்கையில் கோப்பி கராம்பு போன்ற ஏனையவை உற்பத்திகள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. இந்த ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி அண்மைய ஆண்டுகளில் கணிசமானளவு அதிகரித்ததுடன், அவற்றின் ஏற்றுமதி வருவாய்கள், 1999இலிருந்து தெங்கு இறப்பரிலிருந்தான இணைந்த வருவாய்களை விஞ்சியிருந்தன.

இதேவேளை, துணை உணவுப் பயிர்களிடையே, உருளைக்கிழங்கும் நிலக்கடலையும் அதிகரித்த வெளியீட்டு மட்டங்களை வெளிப்படுத்துகையில் பெரிய வெங்காயம், மிளகாய், உழுந்து, பாசிப்பயறு, எள்ளு மற்றும் சோளத்தின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. எனினும் 2000ஆம் ஆண்டில் மரக்கறி மற்றும் பழ உற்பத்தி, வாழ்க்கைச் செலவின் அழுத்தத்தில் குறிப்பிடத்தக்க மிதமாக்கத்தை ஏற்படுத்தி 5 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. அண்மைக் காலத்தில் மரக்கறிகளினதும் பழங்களினதும் விரிவடைந்துவரும் ஏற்றுமதிகள், கூடிய பயன்தரு விலைகளைப் பெறுவதற்கு உற்பத்தியாளர்களை இயலச்செய்தன. தோற்றம் பெற்றுவரும் மொத்த விற்பனைச் சந்தைகளாலும், பரந்த விலைப் பரம்பலாலும் இது ஊக்கப்படுத்தப்பட்டது. தற்போது, வர்த்தக அளவுல் பயிர்ச்செய்கை வெள்ளரிக்காய், அன்னாசி, வாழைப்பழம், ரம்புட்டான் போன்ற ஒரு சில வகைகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. வினைத்திறனுடனான முன்நோக்கிய ஒப்பந்தங்களின் மூலம் ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்தலாம். உற்பத்திப் பொருட்களின் முன்னோக்கிய விற்பனைக்கான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இவை மிகவும் பிரபல்யம் அடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய பிரச்சனையாக அறுவடைக்குப் பின்னரான கையாளலிலான (மரக்கறிகள், பழங்களைப் பொறுத்த மட்டில் உயர்ந்தளவிலான 40 - 50 சதவீதம்) கூடிய சதவீத இழப்புக்கள் விளங்கியதுடன், அவ்வாறான இழப்புக்களைக் குறைப்பதற்கும் ஆராய்ச்சி மற்றும் புதிய தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்குமாக அரசு அநுராதபுரத்தில் அறுவடையின் பின்னான ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தியது. எனினும் உற்பத்தியின் அறுவடைக்குப் பின்னான சிறந்த கையாளலை அபிவிருத்தி செய்வதில் தனியார்துறையை ஊக்குவிப்பது பயனுடையதாக இருக்கும். மற்றைய முக்கிய பிரச்சனையாக பெரும்பாலும் அனைத்துப் பயிர்களுக்குமான உயர்தரமான விதைகளின் சார்புரீதியிலான பற்றாக்குறை விளங்கியது. விதைக் கைத்தொழிலின் அரசதுறை விதிமுறைகள் நீக்கப்பட்டதும், அரச விதைப் பண்ணைகள் தனியார்மயமாக்கப்பட்டதும் வரவேற்கத்தக்கது. ஆனால் முழு வளர்ச்சி எய்தாத தனியார் நடவடிக்கைகள் வர்த்தக ரீதியிலான விதை உற்பத்தியில் உயர்ந்த

செலவைக் கொண்ட நவீன தொழில்நுட்பத்தினை பெற்றுக் கொள்ளவேண்டிய தேவை காணப்படுகின்றது.

## தயாரிப்பு

2000ஆம் ஆண்டில் கைத்தொழில்துறையின் வெளியீடு 1999இன் 4.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, சாதகமான வெளிநாட்டுக்கேள்வி, சாதகமான உள்நாட்டுப் பொருளாதார நிலைமைகள் மற்றும் கொள்கைகள், நவீன தொழில்நுட்பத்தின் பிரயோகம் என்பனவற்றால் முன்னேற்றமடைந்த முகாமைத்துவ நுட்பங்களால் நன்மையடைந்தன. இவ்வாண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சி 12.5 சதவீதத்.தில் உயர்வாகக் காணப்பட்டதுடன், இறுதிக் காலாண்டில் 6.7 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு 11 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, தயாரிப்புத்துறை வெளியீட்டின் 81 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டின்பொதுவான பொருளாதார வளர்ச்சியின் 23 சதவீதத்திற்கும் வகை கூறியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பதனிடல் கைத்தொழில் தேயிலை, மற்றும் தெங்கின் சாதனை வெளியீட்டிற்கு மத்தியிலும் இறப்பர் பதனிடலில் ஏற்பட்ட சுருக்கம் காரணமாகவும் தெங்குப் பதனிடலிலான இயலளவின் மட்டுப்படுத்தலின காரணமாக 4.2 சதவீத மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் சிறு கைத்தொழில்கள்துறை 5.5 சதவீத விரிவாக்கத்தைப் பதிவு செய்துள்ளதாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கைத்தொழில்துறையின் இச்செழிப்பான வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்பு 2000ஆம் ஆண்டில் அளவு நியதிகளில் 16.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து கைத்தொழில்துறை வளர்ச்சியின் 59 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிலால் வழிநடத்தப்பட்ட ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கைத்தொழில்களில் இருந்து பெறப்பட்டது. சராசரி சுங்கப் பெறுமதிகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு ஆடைகளின் ஏற்றுமதி விலைகள் 5.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து உயர்ந்த பெறுமதி கூட்டப்பட்ட அனுமதிப்பங்கற்ற ஏற்றுமதிகளின் அதிகரித்துவரும் பங்கினைப் பிரதிபலிக்கின்றது. ஏற்றுமதியாளர்கள் பன்னாட்டுச் சந்தைகளில் அவர்களின் வாடிக்கையாளர்கள் தளத்தை விரிவாக்கக் கூடியவர்களாகக் காணப்பட்டதுடன் தகவல் தொழில்நுட்பம் நவீன உபகரணங்கள் மற்றும் அனுமதிப்பங்கு சீரமைப்பு என்பனவற்றினால் அதனை எய்தக் கூடியதாக இருந்தது.

முக்கியமாக உள்நாட்டு சந்தைக்கு பொருட்களை வழங்கும் கைத்தொழில்களான, மென்பானங்கள், பால் உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட இறைச்சி, விசுக்கோத்துக்கள், வெறியக்குடிவகை, பெற்றோலியம், இரசாயனங்கள், உருவாக்கப்பட்ட உலோகங்கள், கட்டடப் பொருட்கள், சவர்க்காரம் மற்றும் தூய்மையாக்கும் பொருட்கள் என்பனவற்றிலான அதிகரித்த வெளியீட்டு மட்டத்துடன் கலப்பான செயலாற்றமொன்றைக் காட்டின. இதேவேளை தீவிரமான விளம்பரம், கவர்ச்சியான பொதியிடல், மேம்பட்ட தரம், மற்றும் முன்னேற்றமான பகிர்ந்தளிப்பு மற்றும் சந்தைப்படுத்தலுடனான அதிகரித்த நுகர்வோர் செலவழிப்பு என்பன இவ்வுற்பத்திகளுக்கான உந்நாட்டுக் கேள்வியை அதிகரித்தன. எனினும் சீமெந்து, சீனி, பியர், புகையிலை உற்பத்திகள், பிவிசி உற்பத்திகள், மின்கலங்கள் மற்றும் உலோக உற்பத்திகளின் வெளியீடு பலதரப்பட்ட காரணங்களால் வீழ்ச்சியடைந்தன. உயர்ந்த வரிவிதிப்பு மற்றும் அனுமதியற்ற போட்டிச் சந்தைகளின் வளர்ச்சி என்பன பியர், புகையிலை உற்பத்திகளுக்கான எதிர்கால வாய்ப்புக்களை தளர்ச்சியடையச்செய்தன. ஏனைய பல கைத்தொழில்கள் அதிகரித்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு போட்டிக்கு தம்மை சரிபடுத்திக் கொண்டன.

அதிகரித்து வரும் போட்டிச் சூழலில் நவீன தொழில்நுட்பத்தைப் பின்பற்றியமை, பல உள்நாட்டுக் கைத்தொழில்களின் போட்டி விளிம்பை முன்னேற்றியதாகக் காணப்படுகின்றது. முன்னேற்றமான தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அரசிறை ஊக்குவிப்புக்கள் கைத்தொழில் முயற்சியாளர்கள் அவர்களின் உற்பத்திச் செயல்முறையை நவீனமயமாக்க ஊக்கப்படுத்தியது. குறைந்த அளவிலான வேலை நிறுத்தம் மற்றும் வேலை இடைநிறுத்தம் இடையூறுகளுக்குட்படாத மின் வழங்கல் மற்றும் கைத்தொழில் உட்கட்டமைப்பில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பன உற்பத்தியாளர்களை அவர்களின் வெளியீட்டை அதிகரிப்பதற்கும் செலவைக் குறைப்பதற்கும் உதவின. துணை ஒப்பந்தம், உற்பத்தியின் பகுதிகளை வெளிச்சேவைக்கு விடுதல், கூடிய வட்டிச் செலவுகளின் கீழ் தொழிற்படு மூலதனத்தின் முன்னேற்றமான முகாமைத்துவம், தேவையற்ற செலவைக்குறைத்தல், விரயப் பொருட்களின் மீள் பாவனை மற்றும் வலு சேமிப்பு முறைகளின் பாவனை என்பனவற்றினாலும் அவர்கள் நன்மையடைந்தனர்.

கொள்கைப் பக்கத்தில், அரசு வெளிநாட்டுச் சந்தைகளுக்கான வாய்ப்பை அதிகரிப்பதன் மூலமும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலமும் ஏற்றுமதி சார்ந்த தனியார்துறைக் கைத்தொழில்களுக்கு தொடர்ந்து ஊக்கமளித்தது.

2001ஆம் ஆண்டு சனவரியிலிருந்து ஐரோப்பிய சந்தைக்கான ஆடை ஏற்றுமதிகளுக்கான அனுமதிப்பங்குக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையும் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் விசாலமான சந்தைகளைத் திறந்து விட்டன.

## உட்கட்டமைப்பும் பணிகளும்

பாதுகாப்புத் தொடர்பான அதிகரித்த செலவை உள்ளடக்குவதற்காக மூலதன செலவில் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாடு காரணமாக 2000ஆம் ஆண்டில் எதிர்பார்ப்புக்களைவிட முதலீடுகள் வீழ்ச்சியடைந்தபோதும் போக்குவரத்து, வலு மற்றும் தொடர்பூட்டல் போன்ற பொருளாதார உட்கட்டமைப்பில் அரசு தொடர்ந்து பெருமளவில் முதலிட்டது. இதேவேளை, உட்கட்டமைப்பு செயற்றிடங்களில் தனியார்துறையின் பங்கேற்பையும் அரசாங்கம் ஊக்குவித்தது. விசேடமாக வலு உருவாக்கம், துறைமுக அபிவிருத்தி, தொலைத் தொடர்பூட்டல்கள், போக்குவரத்து, நலத்துறை மற்றும் வீடமைப்பு நிருமானம் போன்ற துறைகளில் தனியார்துறை அதன் ஈடுபாட்டை விரிவாக்கி சாதகமாக பதிலிறுத்தது. நீர் வழங்கல்துறையில் தனியார்துறையின் பங்கேற்புக்கான சாத்தியமும் ஆலோசனையின் கீழ் இருக்கிறது.

ஒரே தொகுதிப் பேருந்துகள் மற்றும் புகையிரதப்பகுதிக்கான 15 புதிய டீசல் இரட்டை இயந்திரங்களுடன் அதன் ஊர்தித் தொகுதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் உதவியுடன் பயணிகள் போக்குவரத்து மைல் அளவும் அதிகரித்தது. மூன்று புதிய வானூர்திகளின் கொள்வனவுடன், சிறிலங்கன் எயர்லைன்சின் செயலாற்றம், சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட மெதுவடைவுக்கு மத்தியிலும் தொடர்ந்து முன்னேறியது. இலங்கைப் புகையிரதப்பகுதி அதன் தொழிற்பாட்டு அளவை முன்னேற்றியபோதிலும், தொடர்ந்தும் பெருமளவு இழப்புக்களுடன் அறிவித்து, நிதியியற் பற்றாக்குறையை அதிகரிக்கச் செய்தது. பணிகளின் முன்னேற்றத்துடன் இணைந்த, கட்டண அதிகரிப்புடனான நீண்டகாலத் தேவையான புகையிரத சீர்திருத்தங்களை அமுலாக்குவதற்கான தேவையை இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. தனியார்துறையின் பங்கேற்பினால் வசதி பெறக்கூடிய நீண்டகாலச் சீர்திருத்தங்கள் இப் பணிகளின் நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய தன்மையை கருத்திற் கொள்ள வேண்டும். நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கொழும்பு - கட்டுநாயக்கா விரைவூர்திப்பாதை 2000ஆம் ஆண்டில் ஆரம்பமானது. தென்பகுதி விரைவூர்திப்பாதை (கொழும்பு- மாத்தறை) கொழும்பு கண்டி, விரைவூர்திப் பாதைகள் போன்ற பல முக்கிய விரைவூர்திப் பாதைகளின் அமைப்பு வேலையை ஆரம்பிப்பதற்கு அரசு ஆவலாகவுள்ளது. கொழும்பைச் சுற்றி விரைவூர்திப் பாதைகளை இணைக்கும் சுற்றுப் பாதை பூர்த்தி செய்யப்படும். இதனால் கொழும்பைச்சுற்றி, அதிகரித்துவரும் வாகன நெரிசல் பெருமளவு குறைவடையும்.

மின்வலு உற்பத்தி 11 சதவீதத்தால் அதிகரித்த முதலீட்டையும் கேள்வியில் வருடாந்த சராசரியாக 10 சதவீத அதிகரிப்பையும் பிரதிபலிக்கின்றது. வலு உருவாக்கத்தின் இயலளவு, 60 மெவா கொண்ட கப்பலில் பொருத்திய முதலாவது மின் பொறியாலும் 21 மெவா கொண்ட லக்தனாவி 11 வெப்பவலுப் பொறியாலும் 1,779 மெவா இற்கு 5 சதவீதத்தால் விரிவடைந்தது. இதன் விளைவாக நீர்மின்வலுவில் தங்கியிருத்தல் 65 சதவீதத்துக்கு மேலும் வீழ்ச்சியடைந்து வானிலை மாற்றங்களினால் மின்உற்பத்தி குறையக்கூடிய ஆபத்து குறைந்ததுடன் உற்பத்திச் செலவு அதிகரித்தது. தற்போது 22 சதவீதத்தில் உயர்ந்து விளங்கும். அதிகரித்துச் செல்லும் தொழிற்படு இழப்புக்கள், இலங்கை மின்சபையின் பெரும் இழப்புக்கள், குறைவான மழை வீழ்ச்சியால் ஏற்படும் மின்தடைகளின் இடர்நேர்வுகள், திரிபுகளைக் கொண்ட குறுக்கு விலை உதவிக்கொடுப்பனவுகள் என்பன விரைந்த வலுத்துறைச் சீர்திருத்தங்களுக்கான தேவையை எடுத்துக் காட்டியது. இதன்படி எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்கள், மின் உருவாக்கம் மின்கடத்தலும் விநியோகமும் ஆகியவற்றை வெவ்வேறாக்கல் கொள்வனவு முறைகளிலான முன்னேற்றங்கள், தன்னியக்க விலை (தீர்வை) சீராக்க முறை, திறன்மிக்க ஒழுங்கு முறைப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியிருப்பது நன்மையளிப்பதாக இருக்கும். வலு உருவாக்கத்திற்கும் சுற்றாடல் பாதுகாப்புக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு, சூழல் மாசடைதலின் ஏற்கத்தக்க மட்டத்தில் தீர்வு காண்பதானது வலுப் பற்றாக்குறையைத் தவிர்க்கவும் உதவும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெருமளவு இழப்புக்கள் அதன் வெளிநின்ற படுகடனை 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.25 பில்லியனுக்கு அதிகரித்தது. இது காலத்திற்கேற்றவாறு பன்னாட்டு எண்ணெய் விலை மாற்றங்களுக்கு இசைந்து செல்லும் வகையிலான தன்னியக்க விலைச் சீர்திருத்த முறையின் அறிமுகப்படுத்தல் உட்பட பெற்றோலியத்துறைச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கான தேவையை எடுத்துக்காட்டுகிறது. போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கும் வீண்விரயம் மற்றும் செலவைக் குறைப்பதற்குமாக பெற்றோலியக் கைத்தொழிலை தாராளமயமாக்கல் நுகர்வோருக்கு உதவி புரிவது மட்டுமன்றி கடற்கல எரிபொருள் போன்ற துறைகளில் புதிய முதலீட்டையும் ஊக்குவிக்கும்.

தொடர்பூட்டல்துறை தாராளமயமாக்கப் பட்டதிலிருந்து தொடர்பூட்டல் பணிகளில் பாரிய மேம்பாடு காணப்படுகிறது. தனியார் தொழிற்படுநர்களிடமிருந்தான போட்டி மற்றும் யப்பானின் நிப்போன் ரெலிகிறாப் பங்கேற்பு உடனான சிறீலங்கா ரெலிகொம்மின் என்பவற்றுடன் தொடர்பூட்டல் துறையில் வலுவான வளர்ச்சி காணப்படுகிறது. கைத் தொலைபேசிகளை உள்ளடக்கிய தொலைபேசிப் பணிகளுக்கான வாடிக்கையாளர்களின் தளம் 2000ஆம் ஆண்டில் ஒரு மில்லியனுக்கு மேலாக அதிகரித்து நாட்டில் தொலைபேசி அடர்த்தியை 100 ஆட்களுக்கு 6.3 ஆக அதிகரித்தது. இதே வேளை தொடர்பூட்டல் தொழில் நுட்பங்களின் மேம்பாடும் நவீனமயமாக்கலும், மின் அஞ்சல், வீடியோ உரையாடல் வசதிகள் போன்ற புதிய பணிகளின் அறிமுகப்படுத்தலும் விரிவாக்கமும் வடிக்கையாளர்களுக்கு கிடைக்கத்தக்க வசதிகளை அதிகரித்தது மட்டுமன்றி தொடர்பூட்டல் பணிகளின் தரத்தையும் மேம்படுத்தியது. 2000ஆம் ஆண்டு இறுதியில், நிலையான வசதியுடனான தொலைபேசிகளை வழங்கும் 3 கம்பனிகள், நடமாடும் பணிகளை வழங்கும் 4 கம்பனிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கிய 37 தொலைத்தொடர்பூட்டல் தொழிற்பாட்டாளர்கள் காணப்பட்டதுடன் இத்துறையில் போட்டியையும் அதிகரிக்கச் செய்தனர்.

அண்மைய ஆண்டுகளில் பன்னாட்டுத் தொடர்பூட்டல்களிலான வியக்கத்தக்க அபிவிருத்திகளின் நோக்கில், நாட்டில் இப் பிராந்தியத்துக்கான பணி நிலையமொன்றை அபிவிருத்தி செய்ய அது விரும்பினால் பன்னாட்டுத் தரங்களுக்கு ஏற்றவகையில் அதன் முறைகளை நவீனப்படுத்துவது இலங்கைக்கு அதி முக்கியம் வாய்ந்ததாகும். இதன்படி, தேசிய தொழிற்பாட்டாளர்கள் இத்துறையிலுள்ள பாரிய பன்னாட்டு நிறுவனங்களுடன் பங்குடமையொன்றை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஒழுங்குபடுத்தல் முறைத்தல் முறையினை முதலீட்டாளர்களுக்கும் பயன்பாட்டாளர்களுக்கும் ஒரே மாதிரியாகப் பிரயோகிக்க வேண்டியதோடு நுகர்வோரையும் பாதுகாத்தல் வேண்டும்.

தேசிய நீர் வழங்கல் வடிகால்சபையால் (தேநீவவ) வழங்கப்பட்ட குழாய் நீர் 2000ஆம் ஆண்டில் மேலும் விரிவடைந்தது. இவ்வாண்டில் புதிய நீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் புதிய இணைப்புக்கள் 77,574ஆல் (29 சதவீதம்) 582,600இற்கு அதிகரித்ததுடன், உற்பத்தி செய்யப்பட்ட நீரின் மொத்த அளவை 331 மில்லியன் கனமீற்றருக்கு 5 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் சனத்தொகை அதிகரிப்புடன் கேள்வி அதிகரிப்பதனாலும், நகரமயப்படுத்தல் மற்றும் கைத்தொழில் விரிவாக்கம், வர்த்தகத் தொழிற்பாடுகள் என்பனவற்றின் காரணமாகவும் குழாய் நீருக்கான எதிர்கொள்ள முடியாத பெருமளவு கேள்வி தொடர்ந்தும் இருந்துவருகிறது. நீர் வழங்கல் மீதான தேசிய கொள்கையின் முக்கிய நோக்கமாக, தற்போது குடித்தொகையின் மூன்றிலொரு பங்கிற்கு மட்டும் கிடைக்கத்தக்கதாகவுள்ள தூயகுடிநீரை, 2010 அளவில் சகல வாசிகளுக்கும் கிடைக்கச் செய்வதை உறுதி செய்தலாகும். இதற்கு ரூ. 85 பில்லியன் கொண்ட முதலீடு தேவைப்படுகிறது. எனவே, போதுமான நிதியியல் மூலவளங்களைத் திரட்டுவதற்கு நீண்டகால பல்புடை நிதியங்களைக் கவருதல், நீர் வழங்கல் துறையில் தனியார் முதலீட்டை ஊக்குவித்தல், தற்போது 35 சதவீதமளவில் உயர்ந்து காணப்படும் வருமானத்தை உருவாக்காத விகிதாசாரத்தைக் குறைத்தல் ஆகிய நடவடிக்கைகள் அத்தியாவசியமாகின்றன.

அஞ்சல் அலுவலக வலையமைப்பு, பெருந் தோட்டத்துறையில் புதிய பணிகளை வழங்கல் மற்றும் பணிகளின் அபிவிருத்திகளிலான விசேட கவனத்துடன் 2000ஆம் ஆண்டில் மேலும் விரிவடைந்தது. 1999இல் அஞ்சல் நிலையங்களில் ஏனைய நுகர்வுப் பொருட்களையும் விற்பதற்கான முன்னோடிச் செயற்றிட்டமாக ஆரம்பித்த அஞ்சல் விற்பனை என்ற எண்ணக்கரு வெற்றியடைந்துள்ளதாகத் தோன்றுவதோடு, இது நிதியியல் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்காக இதனை மேலும் விரிவாக்கலாம். அஞ்சற் பணியை தொடர்ந்து வரும் தொழிற்பாட்டு இழப்புக்கள் தொடர்பூட்டல்களிலான புதிய அபிவிருத்திகளிலிருந்து எழும் போட்டி, அஞ்சற் பணிகளிலான வெளிப்படையான திறமையின்மைகள் என்பன ஆரம்ப சீர்திருத்தங்களுக்கான தேவையை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

அண்மைய துறைமுகங்களிலிருந்தான கடுமையான போட்டியின் காரணமாக துறைமுகப் பணிகளிலான வளர்ச்சி 2000ஆம் ஆண்டில் தளர்வடைந்ததுடன், கொழும்புத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கையிலும் மாற்றுக் கப்பலேற்றல் தொழிற்பாடுகளிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. கொழும்பு, காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு 2000ஆம் ஆண்டில் வருகைதந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 4,232இற்கு 2சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் மாற்றுக் கப்பலேற்றல் கையாளல்களும் அதே வீதத்தில் வீழ்ச்சியடைந்தன. எனினும், கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் கையாளல், அதிகரித்த வெளிநாட்டு வர்த்தகத்துடனான உள்நாட்டுக் கொள்கலன் கையாளலில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரணமாக, சிறிதளவால் அதிகரித்தன. கொழும்பு காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களில் இயலளவையும் வசதிகளையும் அதிகரிப்பதற்கு 2000ஆம் ஆண்டில் அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பல துறைமுக

சிறப்புக்குறிப்பு 3

## இலங்கையில் மூன்றாம் நிலைக்கல்வி : பிரச்சனைகள், சீர்திருத்தங்கள், மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள்

பொருளாதார வளர்ச்சி, தொழில் நிலை வாய்ப்புக்கள், உயர்ந்த வருமானம், வாழ்க்கைத் தரத்தின் அனைத்து விடயங்களிலும் முன்னேற்றம் போன்ற நீண்ட கால அபிவிருத்தியையும் சமூக குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதில் தொழிலாளர் சந்தைத் தேவைப்பாடுகளுக்குப் பொருந்தக்கூடிய புதிய திசைகளில் கல்வி அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு மூன்றாம் நிலைக் கல்வியை மேம்படுத்துவது இன்றியமையாததாகும். கடந்த பல ஆண்டுகளாக மூன்றாம் நிலைக் கல்வியின் போக்குகளும் விளைவுகளும் 1970இன் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளுடன் இணைந்து செல்வதாக இருக்கவில்லை. விரைவடைந்துவரும் உலகமயமாக்கலின் பின்னணியில் இலக்கற்ற கல்விமுறை நாட்டின் தொழிற் சந்தையின் போட்டித் தன்மையை மேலும் குன்றச் செய்தது. இதன் காரணமாக எதிர்காலப் பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அறிவுசார்ந்த சவால்களை எதிர்கொள்ளத்தக்க விதத்தில் இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வியை மீள மாற்றியமைக்க வேண்டியிருந்தது. அறிவு, தேர்ச்சி, திறமை என்பன எதிர்கால வளர்ச்சிக்கு மிக இன்றியமையாக் காரணிகளாக இருக்கின்ற வேளையில் புதுமைகளும் மாற்றங்களுக்குமான விருப்புக்களும் உந்து சக்திகளாக விளங்கும். ஆகவே தொழிற் சந்தைத் தேவைப்பாடுகளுக்கேற்ப நவீன தரமிக்க தகுதிகளை ஒருங்கிணைக்கத்தக்க விதத்திலும் மீளமைப்பதும் நவீன தொழில்நுட்பங்களைப் பழகிக்கொள்வதற்கான வழிவகைகளை மேம்படுத்துவதும் சந்தை சார்ந்த கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் கிடைக்கத்தக்க சந்தர்ப்பங்களை விரைவுபடுத்திக் கொள்வதும் மூன்றாம் நிலைக் கல்விக்குத் தேவையானவையாகவுள்ளன.

இலங்கையில் மூன்றாம் நிலைக்கல்வித்துறை பல்கலைக்கழகக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. அரசின் தனியுரிமையாகவுள்ள பல்கலைக்கழகக் கல்விமுறை திறந்த பல்கலைக்கழகமொன்று உட்பட 13 பல்கலக்கலைக் கழகங்களை உள்ளடக்கியுள்ளது. அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபையான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் நுழையும் மாணவர்களை தெரிவு செய்ததுடன் நாட்டின் பல்கலைக்கழகக் கல்வி தொடர்பான கல்விசார் நியமங்களையும் கொள்கைகளையும் உருவாக்குகிறது. பல்கலைக் கழகக் கல்விக்கான அனுமதி கடுமையான போட்டியைக் கொண்டதாகும். க.பொ.த (உயர்தர) பரீட்சை எழுதிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் (ஏறத்தாழ 180,000) ஏறத்தாழ 50 சதவீதத்தினர் பல்கலைக் கழகத்திற்கு நுழைவதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர். எனினும் க.பொ.த (உயர்தர) பரீட்சை எழுதிய மாணவர்களில் 16 சதவீதத்திற்கும் குறைவான மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கபபடுகின்ற வேளையில் பாலர் கல்வியிலிருந்து பள்ளிக் கூடத்திற்கு நுழையும் எந்தவொரு வயதுத் தொகுதியினரிலும் 2 சதவீதத்திற்கும் குறைவானவர்களே பின்னாளில் பல்கலைக் கழகங்களுக்குள் நுழைகின்றனர். போட்டிகள் சராசரி மாணவர்களின் எதிர்பார்ப்புக்களை மோசமாகப் பாதித்தன.

தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற்பயிற்சி என்பன அரசிற்குச் சொந்தமான அரசினால் தொழிற்படுத்தப்படுகின்ற தொழில் நுட்பக் கல்லூரிகளையும், தொழில் பயிற்சி நிலையங்களையும் தனியார் துறையினால் கட்டணம் அறிவிடப்படும் பயிற்சி நிறுவனங்களையும் உள்ளடக்கியுள்ளன. அரசின் அதிகாரத்தின்கீழ் வரும் பயிற்சி நிறுவனங்கள் குறிக்கப்பட்ட துறைகளில் தேர்ச்சியையும் சிறப்பியல்பு வாய்ந்த பயிற்சிகளை வழங்கியவேளையில், தனியார்துறை நிறுவனங்கள் கேள்வி நிரம்பிய துறைகளில் பயிற்சித் தேவைப்பாடுகளை நிறைவுசெய்ததன் மூலம் சந்தைத் தேவைப்பாடுகளுக்கு பயிற்சி பெற்றோரை வழங்கின. நேரத்துடன் பள்ளிக் கூடங்களைவிட்டு விலகியோர் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறாத மாணவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சித்துறையினால் நடத்தப்படும் பயிற்சிகளை எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழக கல்வி முறையானது இயக்க ஆற்றல்மிக்க சந்தை சார்ந்த பொருளாதாரத்தின் அறைகூவல்களை எதிர்நோக்கத் தயாராகவுள்ளதொரு தொழிற்படையை நாட்டிற்கு வழங்க முடியாமல் இருக்கின்றது. பொருளாதார மற்றும் கைத்தொழில் அபிவிருத்திகளில் காணப்படும் நவீன கைத்தொழில் தேர்ச்சி மற்றும் போக்குகளுக்கு பொருந்திச் செல்லமுடியாமல் இருப்பது கணிசமான எண்ணிக்கை கொண்ட ஆட்களின் தொழில் மற்றும் வருமான வாய்ப்புக்களுக்கு தடையாக விளங்குகின்றது.

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

தற்பொழுது குறைக்கப்பட்ட அளவில் காணப்படும் அரசின் தொழில் வாய்ப்பினை நோக்கி பாடநெறிகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் அமைக்கப்பட்டமை பிரச்சனையை பெரிதாக்கியிருக்கிறது. பல்கலைக்கழகப் பட்டதாரிகளிடையே காணப்படும் உயர்ந்த தொழிலின்மை வீதம் பட்டதாரிகள் தொழில் வாய்ப்பிற்கான நிரம்பல் மற்றும் கேள்விக்கிடையே உள்ள பொருத்தமின்மையை சுட்டிக்காட்டி தொழிற்சந்தை நிலைமையுடன் சிறிதளவே பொருந்தக்கூடிய நிரம்பலை அடிப்படையாக்கொண்ட கல்வி முறையைப் பிரதிபலித்தது.

தற்போதைய மூன்றாம் நிலைக்கல்வி முறையில் காணப்படும் குறைபாடுகளுக்கு பல காரணங்களை எடுத்துக்காட்ட முடியும். பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையில், முழுநேர பட்டப்பாட நெறிகள் இன்னமும் பெருமளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டு மையப்படுத்தப்பட்ட அரசதுறை தனியுரிமையைக் கொண்டு விளங்குகிறது. அறிவு ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவுவது முக்கியமாகப் பாரம்பரிய கல்வி முறைகள் மற்றும் பாடநெறிகள் மூலமாகவே இருந்தது. பயன்படுத்தப்பட்ட ஒருமுகப்படுத்தப்பட்ட பாடவிதானங்கள், பாடத் திட்டங்கள், கற்பித்தல் பொருட்கள் என்பன இன்றைய கைத்தொழில் தேவைப்பாடுகளை வழங்கமுடியாமல் இருந்தவேளையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியில் பெருமளவிற்கு பின்தங்கியிருக்க வைத்தது. கைத்தொழிலினால் தேவைப்படுத்தப்பட்ட தரங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டன. மேலும் மூன்றாம் நிலை அரச கல்விப் பணிகளை வழங்குவதில் பணம் மிகக் குறைந்தளவுப் பங்கினையே கொண்டிருப்பதனால் நிதியிடல்களைப் பெறும் பல்கலைக்கழக கல்வி என்ற ரீதியில் வரவு செலவுத்திட்டநிதியிடலை நாடுவது கட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன், வழங்கப்பட்ட பணிகளின் தரத்தினையும் குறைக்கிறது. பற்றாக்குறையான அரச மூலவளங்களுக்கான தீவிரமான போட்டி இத்துறையின் குறை நிதியிடலுக்கு வழிவகுத்தது. தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழில் பயிற்சி கல்வித்துறையின் தரமும் கேள்வியை அடிப்படையாகக் கொண்ட பாடநெறிகளுக்கான பாடவிதானத்தினைப் பொறுத்தவரையில் கேள்விக்குரியதாகவே இருந்துவருகின்றது.

தற்போதுள்ள அரசதுறை மூன்றாம் நிலைக்கல்வி முறையை மீளமைத்து, அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அரசாங்கம் பாரிய செயல் விளைவுகளைக் கொண்ட சீர்திருத்தங்களை பல்கலைக்கழகக் கல்வி முறையில் தொடங்கியுள்ளது. பாடவிதான சீர்திருத்தத்தையும் அலுவலர் அபிவிருத்தியையும் உள்ளடக்கிய கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளின் தரத்தினை மேம்படுத்துவதனை தற்போதைய சீர்திருத்தங்கள் இலக்காகக் கொண்டிருந்தன. பாடவிதான சீர்திருத்தங்கள் பாடநெறிகளைத் தெரிவு செய்வதில் மாணவர்களுக்குக் கூடிய நெகிழ்ச்சியை வழங்குவதனையும் கேள்விசார்ந்த புதிய பட்டப்பாடநெறிகளை அறிமுகப் படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு பாடநெறிப் பிரிவுகளின் அறிமுகத்தையும் தேவைக்கேற்ப மாறக்கூடிய முறைகளையும் உள்ளடக்கியிருந்தன. மேலும் மதிப்பீட்டு முறையும் ஆண்டு இறுதிப் பரீட்சைகளிலிருந்து தொடர்ச்சியான மதிப்பீடுகளுக்கு மாற்றப்பட்டன. தகுதிகாண் நிலையிலுள்ள விரிவுரையாளர்களுக்கான கற்பித்தல் மற்றும் கற்கும் முறையியல்களில் சார்ந்த பாடநெறிகள் மற்றும் மற்றைய ஆசியர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட பாடநெறிகள் என்பனவற்றை ஏற்பாடுசெய்தன் மூலம் அலுவலர் அபிவிருத்தியை மேம்படுத்துவது பூர்த்தி செய்யப்பட்டது. அதவேளை பல்கலைக்கழகம் - கைத்தொழில்களிடையே இணைப்புக்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வசதிகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக நிதியிடல் நிலைமை தொடர்பான சீர்திருத்தங்கள் நிதி திரட்டும் நடவடிக்கைகள் மற்றும் அரசல்லா மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டல் என்பனவற்றைச் சுற்றிக் காணப்பட்டன. பல்கலைக்கழகக் கல்வியை விரிவாக்குவது தொடர்பான சீர்திருத்தங்கள் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதிலும் பல்கலைக் கழங்களுக்கு அனுமதிக்கும் தொகையை விரிவாக்குவதிலும் முழுக் கவனத்தைச் செலுத்தின. கூட்டுத் திட்டங்களுடன் பல்கலைக் கழகங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரும் என எதிர்பார்க்கப்படுவது முன்னேற்றமான ஒரு நிலையை எடுத்துக்காட்டுகின்றது. பாடநெறிகளினதும் வழங்கப்படும் பயிற்சிகளினதும் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சித் துறையிலும் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சீர்திருத்த செய்முறையில் அனைத்துப் பங்காளர்களினதும் பங்கேற்புடன் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சித்துறையில் தனியார்துறையின் பங்கேற்பு சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தில் வலியுறுத்தப் பட்டிருக்கின்ற இச் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலின் முக்கியத்துவத்தினை அங்கீகரிப்பதாகவுள்ளது.

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

மிக அண்மையில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட அதன் முன் மொழிவிலுள்ள முயற்சிகளில் "மூன்றாம் நிலைக்கல்வி உபாயம்" மூன்றாம் நிலைக் கல்வி முறையின்[1] சீர்திருத்தங்களுக்கு மேலும் தூண்டுதலை வழங்கியது. கொள்கைச் சீர்திருத்தத்திற்கான இறுதியாக்கப்படாத நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக புதிய பல்கலைக் கழகங்கள் சட்டத்திற்கு புதிய சட்ட விதியொன்றினை வழங்கவும் எதிர்பார்த்துள்ளது. இதன் விரிவான நியதிகளில், புதிய பல்கலைக்கழகச் சட்டம் மாறிவரும் சூழ்நிலைகளுக்கும் புதிய தேர்ச்சி[2]களுக்கும் தேவைப்படும் நல்ல தகவல்களைக் கொண்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு காணக்கூடிய இயலாற்றல்களுடன் கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதனை அதனது இறுதி இலக்காகக் கொண்டுள்ளது. மிக முக்கியமாக, உத்தேச புதிய பல்கலைகழகச் சட்டத்தின் குறிக்கோள்கள் கல்வியின் தரத்தினை முன்னேற்றுதல், அனுமதிக் கொள்கைகளைப் பன்முகப்படுத்தல், தகவல் தொழில்நுட்பத்தினை பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை அதிகரித்தல், அரச நிதியில் தங்கியிருப்பதனை ஏனைய அரச கல்வி நிதியங்களின் மூலங்களுக்கு மாற்றுதல் மற்றும் இரண்டாந்தர கல்வியில் தனியார்துறையின் பங்கேற்பு மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியின் அனைத்துச் செயற்பரப்பிலும் கைத்தொழில் பங்கேற்பினை ஊக்குவித்தல் என்பனவற்றில் ஊக்குவிப்புக்களை மேலும் வலுப்படுத்தல் என்பனவற்றைச் சுற்றிக் காணப்படுகின்றன. மூன்றாம் நிலைக் கல்விச் சீர்திருத்தங்களுக்கான பங்காளர்களுக்கும் அதாவது மாணவர்கள் பீடங்கள் நிருவாகங்கள், அரசாங்கம் மற்றும் கைத்தொழில் என்பனவற்றிற்கும் பேராளர்களுக்குமிடையில் பகிர்ந்து கொள்ளப்பட்ட எதிர்கால நோக்கினை உள்ளடக்குகின்ற பல்கலைக் கழகச் சீர்திருத்தங்களுக்கான முதன்மைத் திட்டமொன்றினை அபிவிருத்தி செய்வதற்கும் இது உத்தேசித்துள்ளது.

எதிர்காலத்தில் வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடுகள் மூன்றாம் நிலைக் கல்வி முறையில் பெரும் மாற்றங்களை அவசியமாக்கும். செலவினை மீளப்பெறும் அடிப்படையிலமைந்த பல்கலைக்கழகக் கல்விக்கு நிதியிடுகின்ற புதிய வழிவகைகளை நிதியிடலுக்கான பாரம்பரிய மூலகங்களுக்குப் பதிலாக பின்பற்ற வேண்டும். இவ்விடயத்தினைப் பொறுத்தவரையில் முக்கியமானதொரு விடயமாக மூன்றாம் நிலைக் கல்வி முறையினை அபிவிருத்தி செய்வதற்கான மூலவளங்களைத் திரட்டுவதற்கு தனியார்துறையைப் பயன்படுத்தி ஊக்குவிக்கலாம் என்னும் பல்கலைக்கழகக் கல்வியில் தனியார்துறையின் பங்கேற்பு இன்னமும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. தனியார்துறை நிறுவனங்களினால் நடத்தப்பட்ட பாடநெறிகளை அங்கீகரிப்பதற்கு தற்போதைய 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் ஏற்பாடுகள் இருந்தபோதும், இது தொடர்பான முன்னேற்றங்கள் ஊக்கமளிப்பதாக இல்லாததுடன் நடைமுறைகளும் தெளிவாக இல்லை. இதுவரை, சில தனியார் நிறுவனங்களுக்கு மட்டுமே குறிப்பிட்ட சில பாடநெறிகளை நடத்துவதற்கான பட்டமளிக்கும் தகுதி வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில், தற்பொழுது பல தனியார் நிறுவனங்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டங்களைப் பெறும் மாணவர்களுக்காக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் ஒத்துழைப்புடன் பாடநெறிகளை நடத்துகின்றன. அத்தகைய இரண்டாம் நிலைக்கல்விக்கு பின்னைய நிறுவனங்கள் தெளிவான கொள்கைகள் எதுவுமில்லாமல் அல்லது அரசிடமிருந்தான ஊக்குவிப்புக்கள் எதுவுமின்றி விரைந்த வேகத்தில் வளர்ந்து வருகின்றன. இந்நிலைமையானது தனியார்துறை மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களுக்கான நிறைவேற்றப்படாத கட்டாயக் கேள்வி காணப்படுவதனை உணர்த்துகிறது.

மூன்றாம் நிலைக் கல்வியில் தனியார்துறை நிறுவனங்களை அனுமதிப்பதன் மூலம் அடையப்படும் நன்மைகள் பல. பல்கலைக்கழகக் கல்வியுடன் பன்னாட்டு அனுபவங்கள், அரச மற்றும் தனியார்துறைப் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டியின் காரணமாக கல்வியினதும் பயிற்சியினதும் தரம் மேம்படும். கேள்வியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையினூடாக தொழிலாளர் சந்தைத் தேவைப்பாடுகள் நிறைவு செய்யப்படும். வசதி குறைந்த தொகுதியினருக்கான வாய்ப்புக்களை தனியார்துறைப் பங்கேற்பிலிருந்து உருவாக்கப்படும் சேமிப்புக்களை பயன்படுத்தப்படுவதன் மூலம் உண்மையில் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கான வழங்கலை அதிகரித்துக் கொள்ளமுடியும். அரசாங்கம், அரசதுறையில் இருக்கவேண்டிய பல்கலைக் கழகங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கையை

1. அபிவிருத்திக்கும் போட்டித் தன்மைக்குமாக அறிவையும் தேர்ச்சியையும் மேம்படுத்தல், மூன்றாம் நிலைக்கல்வி உபாய அபிவிருத்திக் கருத்தரங்கு பாரிஸ் 2000.

2. பல்கலக்கழக கல்வி மீதான சனாதிபதி செயலணிக்குழு

**சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)**

தீர்மானிக்க வேண்டியதுடன் அத்தகைய நிறுவனங்களை உச்சமட்டத்தில் பேணுவதற்குத் தேவையான மூலவளங்களையும் ஒதுக்கவேண்டும். மேலும் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் உதவிகளை தென்னாசியாவில் இலங்கையை ஒரு முக்கிய கல்வி மையமாகச் செய்வதற்காக அத்தகைய நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பன்னாட்டு நிதியிடல் முகவராண்மை களிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

மூன்றாம் நிலைக் கல்வி முறையில் அரசுடமையை மாற்றுவது அவ்வளவிற்கு இலகுவான கருமமல்ல. தனியார்துறைப் பல்கலைக் கழகங்கள் அரசிற்கும் மற்றைய பல ஈடுபாடுகளைக் கொண்ட குழுவினருக்குமிடையில் பரந்த வீச்சிலான தகராறுகளுக்கு காரணமாகவுள்ளன. இவ் வேறுபாடுகளை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் என்பனவற்றின் மூலம் குறைத்துக் கொண்டு இணக்கப்பாட்டிற்கு வரலாம் இவ்விடயம் தொடர்பாக தற்பொழுது ஊடகங்களில் நடைபெற்றுவரும் கலந்துரையாடல்கள் நாட்டின் மூன்றாம் நிலைக் கல்வியை வழங்குவதில் தனியார்துறை நிறுவனங்களின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்வதற்கான மிகச் சிறந்த நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது. பொதுமக்களின் கலந்துரையாடல்களுக்காக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் புதிய கொள்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். அத்தகைய திறந்த விவாதங்கள் இவ்விடயத்தில் பொது மக்களின் கருத்துக்களை உருவாக்கவும் உத்தேசிக்கப்பட்ட மாற்றங்களின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தவும் உதவும்.

ஆகவே, தற்போதுள்ள கடுமையான ஒழுங்கு விதிகளை படிப்படியாக தளர்த்துவதன் மூலம் பொருத்தமான ஊக்குவிப்புத் தொகுதிகளை வழங்குவதன் மூலமும் மூன்றாம் தரக் கல்வியைத் தனியார்துறைக்கு அரசு திறந்துவிடும் பாதையில் முன்னேற்றம் ஏற்படும். அதே நேரம் புதிய முயற்சிகளின் தரங்கள், தகைமை மற்றும் கணக்கீடு என்பனவற்றை உறுதிப்படுத்தவும் அரசிற்கும் தனியார்துறை நிறுவனங்களுக்குமிடையே போட்டிச் சூழலை மேம்படுத்தவும், ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும். தற்போதுள்ள அரச மூன்றாம் நிலைக் கல்வி முறையின் தரத்தினை முன்னேற்றுதல், உயர்கல்விக்காக கிடைக்கத்தக்க தாகவுள்ள வாய்ப்புக்களை விரிவாக்குதல் மற்றும் கல்வி முறையின் மூலம் தொழிலாளர் சந்தைக் கேள்விகளை உறுதிப்படுத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட தற்போதைய சீர்திருத்தங்கள் மேலும் முன்னேற்றப்பட வேண்டும்.

---

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்பாட்டில் இருந்தன. இதேவேளை சவுத் ஏசியா கேற்வே ரேமினல் பிறைவேட் லிமிட்டெட்டால் குயின் எலிசபெத் இறங்குதுறையின் புத்தாக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்ததுடன், இரு மேடைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. வினைத்திறனிலான முன்னேற்றம் மற்றும் துறைமுகப் பணிகளின் தரம் என்பன ஏற்கனவே இருக்கும் வாடிக்கையாளர்களைத் தக்க வைப்பதற்கும் கூடிய கப்பல்களை கவர்வதற்கு மட்டுமல்லாது உற்பத்தியாளருக்கும் ஏற்றுமதியாளருக்கும் தாமதத்தையும் செலவையும் குறைக்கிறது.

கல்வி மற்றும் நலத்துறைத் தொழிற்பாடுகள் 2000ஆம் ஆண்டில் மேலும் விரிவடைந்திருக்கையில், துறைவாரியான சீர்திருத்தங்கள் தொடர்ந்தன. அரச மருத்துவமனைகளின் எண்ணிக்கை, இவ்வாண்டில் பெருந்தோட்ட மருத்துவமனைகள் பொறுப் பேற்கப்பட்டதால் 20ஆல் 578இற்கு அதிகரித்திருக்கையில், பிராந்திய மருத்துவமனை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மேலும் 12 மருத்துவ மனைகள் மேம்படுத்தப்பட்டன. மருத்துவர்கள் மற்றும் தாதி அலுவலர்களின் புதிய ஆட்சேர்ப்புடன் அரசதுறை மேலும் வலுவடைந்தது. நலத்துறை கவனிப்பு வசதிகளை வழங்குவதிலான தனியார்துறையின் ஈடுபாடு தொடர்ந்து விரிவடைந்தது. முதலீட்டுச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்டு நிருமாணிக்கப்பட்டு வரும் 17 மருத்துவச் செயற்றிட்டங்களில் 3 தனியார் மருத்துவமனை நிகழ்ச்சித் திட்டங்கள் 2000ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்டமை தனியார்துறை நல வசதிகளை மேலும் அதிகரிக்கும்.

கட்டடவாக்கத்துறை 2000ஆம் ஆண்டில், 1999இல் பதிவு செய்யப்பட்ட அதே வீதமான 4.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக விளங்கியது. அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் மெதுவானதாக காணப்பட்டவேளையில், தனியார் துறையால் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புக் கட்டடவாக்கம் விரிவடைந்தது. கட்டடவாக்கத் தொழிற்பாடுகளினால் தூண்டப்பட்ட கேள்வியால் நன்மையடைந்த கல்லுடைத்தல் துறை 5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

துறையின் வளர்ச்சி வீதத்தை 1999இன் 4.1 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## 1.3. முதலீடுகளும் சேமிப்புக்களும்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக 1998 இன் 1.8 சதவீதத்தித்திலிருந்து 1999இல் 3.8 சதவீதத்திற்கு அதிகரித்த சேமிப்பு- முதலீட்டு பற்றாக்குறை 2000ஆம் ஆண்டின் 6.6 சதவீதத்திற்கு மேலும் விரிவடைந்தது. இது தனியார்துறையின் முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.8 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் அரசின் நடைமுறைச் செலவினம் நடைமுறை வருமானத்தை விட அதிகரித்திருந்ததன் காரணமாக தேசிய சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் தேறிய விளைவினால் ஏற்பட்டதாகும்.


1999 இல் உண்மை நியதிகளில் 6.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 2000 இல் 9.5 சதவீதத்தினால் (1996 விலைகளில்) மேலும் அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முதலீட்டினை 28 சதவீதத்திற்கு உயர்த்தியது. அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட தனியார் துறையின் முதலீடு மொத்த முதலீட்டில் 89 சதவீதத்திற்கு வகைகூறி 2000ஆம் ஆண்டில் 2.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அரச முதலீட்டுடன் ஒப்பிடுகையில் 11 சதவீத உயர் வளர்ச்சியொன்றினை (உண்மை நியதிகளில்) பதிவு செய்தது. தனியார் துறை மற்றும் அரச துறை ஆகிய இரண்டினதும் பாரிய முதலீட்டு செயற்றிட்டங்கள் மின்வலு, தொலைத்தொடர்பூட்டல், துறைமுகம், போக்குவரத்து ஆகிய உட்கட்டமைப்புக்களின் விரிவாக்கத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் உள்நாட்டு முதலீடுகளின் விரிவாக்கத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளித்தன.


சேமிப்புக்களிலான அபிவிருத்திகள் 2000 ஆம்ஆண்டில் கலப்புடையதாக காணப்பட்டன. செலவிடத்தக்க வருமானத்தின் அதிகரிப்பு கவர்ச்சிகரமான உண்மை வட்டி வீதங்கள் என்பவற்றின் பயனாக தனியார் சேமிப்புக்கள் அதிகரித்தன. எனினும் அரசிறை நழுவல்கள் மற்றும் பாரிய அரச கூட்டுத்தாபனங்களின் உற்பத்தி பொருட் செலவை ஈடு செய்வதற்காக நிருவகிக்கப்பட்ட விலைகளை காலம் தாழ்த்தி சீராக்கம் செய்தமை என்பவற்றின் காரணமாக அரசதுறையின் குறைச்சேமிப்பு அதிகரித்தது. இதன் விளைவாக உள்நாட்டு சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக 1999 இன் 19.5 சதவீதத்திலிருந்து 2000 இல் 17.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. தனியார் பணஅனுப்பல்களின் உட்பாய்ச்சல் அதிகரித்தன் முக்கிய காரணத்தினால் தேசிய சேமிப்புக்கள் 2000ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 21.4 சதவீதமாக காணப்பட்டன. பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற அதிகரித்த முதலீட்டை நிதியிடுவதற்கான மொத்த உள்நாட்டு சேமிப்புக்களை அதிகரிப்பதற்கு அரசதுறை குறை சேமிப்பை சேமிப்பாக மாற்றுவது அத்தியாவசியமானதாகும்.

## 1.4 விலைகள்

பலவகையான உணவுப்பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தற்கு மத்தியிலும் 1998 இலும் 1999 இலும் வீழ்ச்சியுற்ற பணவீக்க வீதம் 2000ஆம் ஆண்டில் அதிகரித்தமைக்கான முக்கிய காரணமாக உயர்வடைந்த இறக்குமதி விலைகள் மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகளின் அதிகரிப்பு என்பன விளங்குகின்றன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி ஆகியவிரண்டும் 1999இனைவிட 2000ஆம் ஆண்டில் உயர்ந்த

வரைபடம் 1.3
முதலீடும் சேமிப்புக்களும்



அதிகரிப்புக்களை பதிவு செய்தன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 1999 இன் 4.7 சதவீதத்திலிருந்து 2000 இல் 6.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தவேளையில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையிலான 12 மாத அதிகரிப்பு 2000 திசெம்பரில் 10.8 சதவீதத்திற்கு உயர்வடைந்து ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் விலை அதிகரிப்புக்கள் மிக உயர்வாக இருந்தமையை பிரதிபலித்தன. இதைப்போன்றே மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கியின் மாற்றமும் 1999 இன் 4.4 சதவீதத்திலிருந்து 2000 ஆம் ஆண்டில் 6.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

நாணய விரிவாக்கமானது 1999 மற்றும் 2000ஆம் ஆண்டில் பெயரளவு வருமானத்திலேற்பட்ட அதிகரிப்பிற்கு ஏற்புடையதான மட்டமொன்றில் கட்டுப்படுத்தப் பட்டமையினால் கேள்வியால் உந்தப்பட்ட கணிசமான பணவீக்கத்திற்கான அழுத்தம் எதுவுமிருக்கவில்லை. பன்னாட்டு விலைகள் அதிகரித்ததன் விளைவாக உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரித்ததையும் இதனைத்தொடர்ந்து மின்வலு, போக்குவரத்து கட்டணங்கள் என்பன மேல்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டமையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் உயர்ந்த அதிகரிப்பிற்குபங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகும். பெற்றோல் தவிர்ந்த அனைத்து பெற்றோலியப் பொருட்களினதும் உள்நாட்டு விலைகள் 2000ஆம் ஆண்டில் அதிகரித்த பன்னாட்டு விலைகளுக்கிணங்க உள்நாட்டு விலைகளை சீராக்கம் செய்யும் பொருட்டு பல தடவைகளில் அதிகரிக்கப்பட்டன. டீசல் 86 சதவீதத்தினாலும், மண்ணெண்ணெய் 77 சதவீதத்தினாலும் உலை எண்ணெய் 100 சதவீதத்தினாலும் திரவப் பெற்றோலிய வாயு 52 சதவீதத்தினாலும் உயர்த்தப்பட்டன. இதன் விளைவாக அதிகரித்த எரிபொருள் செலவுகளை ஈடு செய்யும் பொருட்டு பேருந்து கட்டணங்களும் மின்வலு கட்டணங்களும் முறையே 15 சதவீதத்தினாலும் 6 சதவீதத்தினாலும் உயர்த்தப்பட்டன.

### 1.5 கூலிகள்

பணவீக்க வீதம் அதிகரித்ததன் பகுதியளவுக் காரணத்தினால் அரசு மற்றும் தனியார் துறைகளின் கூலிகள் 2000ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்டன. அரச துறையில் மாதமொன்றிற்கு ரூ 12,000 இற்கும் குறைந்த வருமானத்தைப் பெறும் ஊழியர்கள் 2000ஆம் ஆண்டு ஒகத்திலிருந்து மாதமொன்றிற்கு ரூ 600 இடைக்கால கொடுப்பனவொன்றைப் பெற்றனர். ஆகக்குறைந்து ரூ. 1000 என்ற நியதிக்குட்பட்டு அனைத்து அரசு அலுவலர்களுக்கும் சம்பளத்தில் 10 சதவீதமான ஒய்வுதியத்திற்குட்படாத இடைக்கால படியொன்று 2000 ஒத்தோபரிலிருந்து வழங்கப்பட்டது. இடைக்கால படியான ரூ.600 இந்த 10 சதவீத அதிகரிப்பில் உள்ளடக்கப்பட்டது. இத்திருத்தங்கள் 2000ஆம் ஆண்டு அரசதுறையின் பெயரளவு கூலியில் கிட்டத்தட்ட 7.4 - 9.4 சதவீதம் வரையான அதிகரிப்புக்களையும் உண்மைக் கூலியில் 1.0 - 2.8 சதவீதத்திற்கிடையிலான அதிகரிப்புக்களையும் விளைவித்தன.


2000ஆம் ஆண்டில் முறைசார்ந்த தனியார் துறையின் பெயரளவுக் கூலிகள் பல்வேறுபட்ட ஊழியர் வகைகளுக்கு பல்வேறுபட்ட வீதங்களில் மேல்நோக்கி திருத்தியமைக்கப்பட்டன. இதன் விளைவாக கூலிச் சபைகளின் கீழான தனியார்துறை ஊழியர்களுக்கான ஆகக்குறைந்த கூலிகளிலேற்படும் மாற்றங்களினால் அளவிடப்படும் பெயரளவு கூலிகள் ஆண்டுச் சராசரி பணவீக்க வீதமான 6.2 சதவீதத்திற்குக் குறைவான 2.3 சதவீதத்தினால் அதிகரித்தன. இதனால் கூலிச் சபைகளின் கீழான பல தரப்பட்ட வகைகளுக்கான உண்மைக் கூலிகள் 2000ஆம் ஆண்டில் 2.7- 5.7 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீதத்தில் மோசமடைந்தன. ஆகக்குறைந்த கூலிகளிலேற்படும் மாற்றங்கள் தனித்து மொத்த கூலிகளில் மாற்றங்களை அத்தியாவசியமாக சரியாக பிரதிநிதித்துவ படுத்துமென்பதில்லை. ஏனைய படிகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றமையே இதற்கான காரணமாகும். இதற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் முறைசாரா துறையின் பெயரளவுக் கூலிகள் பணவீக்க வீதத்தை விட உயர்ந்த வீதங்களில் அதிகரித்தமையினால் உண்மை நியதிகளில் கூலிகள் அதிகரித்தன.

அதிகரிக்கும் பணவீக்கத்துடன் இணைந்ததாக குறிப்பிட்ட சில அத்தியாவசிய உணவு மற்றும் உணவல்லாத நுகர்வுப் பொருட்களின் விலைகள் அண்மையில் மேல்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டமையானது தொழிற்சங்கங்களை கூலி உயர்வை கோருவதற்கு ஊக்கிவிக்கலாம். எனினும் கூலி-விலை சுற்றோட்ட அதிகரிப்புக்கு நிலைமை ஒன்றுக்கு உள்ளாவதனை தடுக்கும் பொருட்டு விலை அதிகரிப்புக்களின் முழுமையான சீராக்கத்துக்கான அனுமதியை கட்டுப்படுத்துவது முக்கியமானதாகும்.

### 1.6 குடித்தொகை, தொழிற்படை, தொழில் நிலை

2000ஆம் ஆண்டின் நடுவாண்டுக் குடித்தொகை 1999 இன் 1.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1.7 சதவீத அதிகரிப்பினை காட்டி 19.36 மில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டது. 2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு இயற்கை அதிகரிப்பு மற்றும் தேறிய குடிவரவு என்பன காரணமாக அமைந்தன. எனினும் 2000ஆம் ஆண்டிற்கான உலக அபிவிருத்தி அறிக்கையின் படி இலங்கையின் ஆண்டு சராசரி குடித்தொகை வளர்ச்சியானது, வயது மற்றும் பரம்பலிலேற்பட்ட மாற்றங்கள் மற்றும் அண்மைய ஆண்டுகளில் ஏனைய சமூக - பொருளாதார

வரைபடம் 1.4
தொழிற்படைப் பங்கேற்பும் தொழில் வாய்ப்பின்மை வீதமும்




நிலைமைகளிலேற்பட்ட மேம்பாடுகள் என்பன காரணமாக தென் ஆசிய பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான நாடுகளினதை விட பெருமளவு கீழானதாகக் காணப்பட்டது.

எனினும் நாட்டின் குடித்தொகை ஆண்டு தோறும் 200,000 தொடக்கம் 300,000 வரையில் அதிகரித்து நாட்டின் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களில் தொடர்ந்து சுமையினை ஏற்படுத்துகின்றது. சனத்தொகையில் வயது முதிர்ந்தோரின் பங்கு அதிகரிப்பதனால் இந்நிலைமை மேலும் மோசமடையும். தங்கியிருந்தல் விகிதத்தில் அதிகரிப்பு, நிலம்துண்டாடப்படல், கல்வி, நலம் ஆகிய சமூக நலன்புரிகளில் அதிகரித்த செலவு, முதிர்வடையும் குடித்தொகையுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் என்பன குடித்தொகையின் தற்போதைய உள்ளமைப்பு மற்றும் போக்குகளுடன் தொடர்புபட்ட கொள்கை வகுப்பாளர்களின் அவதானத்தினை வேண்டி நிற்கும் சமூக பொருளாதார பிரச்சினைகள் சிலவாகும்.

குடித்தொகை புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி 2000ஆம் ஆண்டின் மூன்றாம் காலண்டினிறுதியில் தொழிற்படை 6.7 மில்லியனாக அமைந்து 49 சதவீத தொழிற்பாட்டுப் பங்கேற்பினைக் காட்டியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தொழிற்படையில் தொழில் வாய்ப்பினை பெற்றுள்ளோரின் பங்கு 2000ஆம் ஆண்டில் தொடர்ந்து அதிகரித்து 1990 இன் 84 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 92 சதவீதத்தையடைந்து காணப்பட்டது. தனியார்துறை செயற்பாடு விரைந்து வளர்ச்சியடைந்து தொழில்வாய்ப்பு உருவாக்கத்திற்கு பாரிய பங்களிப்பினை வழங்கியது. தயாரிப்பு வேளாண்மை, வர்த்தகம், சுற்றுலா விடுதிகள், நிதி, காப்புறுதி, உண்மைச் சொத்து, நிருமாணம் என்பன தொழில்வாய்ப்பினை உருவாக்கிய முக்கிய துறைகளாக விளங்கின. இலங்கை முதலீட்டுச் சபையின் தகவலின்படி 2000ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட புதிய முதலீட்டுச் சபை செயற்றிட்டங்களினூடாக ஏறத்தாழ 41,000 புதிய தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டில் அரசதுறையின் தொழில்நிலை ஏறத்தாழ 36,000 இனால் (3.2 சதவீதம்) அதிகரித்தமைக்கு முக்கிய காரணமாக பட்டதாரிகளின் ஆட்சேர்ப்பு, மற்றும் சமூர்த்தி ஊழியர்களின், பாதுகாப்புதுறை ஆளணியினர், ஆசிரியர்கள் ஆகியோரில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன விளங்கின. இதேவேளை அரசு சார்ந்த நிறுவனங்களின் தொழில் நிலை 2000ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 1 சதவீதத்தினால் ஏறத்தாழ 300,000 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. எனினும் மொத்த தொழில் நிலையில் அரசுதுறையின் பங்கு 1999 இன் 14.4 சதவீதத்திலிருந்து 2000 ஆம் ஆண்டில் 13.6 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்து. அரசதுறை தொழில் நிலையின் வீழ்ச்சியடையும் போக்கிற்கு தனியார்துறையின் தொழில்நிலை வாய்ப்புக்கள் விரைந்து வளர்ச்சியடைந்தமை மற்றும் அரசதுறை நிறுவனங்களில் செயற்பாட்டிலிருக்கும் மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன பொறுப்பாயமைந்தன.

1990 இன் 15.9 சதவீதத்திலிருந்து 1999 இல் 8.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்த தொழில் வாய்பின்மை வீதம் 2000 ஆம் ஆண்டில் 7.7 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியுற்றது. பெண்களின் தொழில் வாய்ப்பின்மை வீதம் ஆண்களின் தொழில்வாய்ப்பின்மை வீதத்தைவிட இன்னும் உயர்வாக காணப்பட்டதெனினும் அது ஒரளவு விரைந்த வீதத்தில் வீழ்ச்சியடைகின்றது. கல்வி சீர்திருத்தங்கள் அத்தியாவசியமானது என்பதை பிரதிபலிக்கும் வகையில் உயர்ந்த கல்வித் தரத்தைக் கொண்ட இளைஞர்களிடையே தொழில்வாய்பின்மை அதிகரித்துக் காணப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட மூலங்களினூடாகப் பெறப்பட்ட வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் 1999 இன் ஏறத்தாள 178,000 உடன் ஒப்பிடுகையில் 2000 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 166,000 ஆக விளங்கி 2000 இல் இரு ரம்ழான் பண்டிகை காலங்கள் வந்தமை காரணமாக தற்காலிக வீழ்ச்சி ஏற்பட்டதை பிரதிபலித்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்பு பணியகம் பதிவுசெய்யப்பட்ட வெளிநாடுகளில் பணிபுரியும் வேலையாட்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் தொடர்ந்து பல்வேறு வசதிகளை வழங்கியது. உரிமமளிக்கப்பட்ட முகவர்களினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் பங்கு 1999 இன் 68 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 76 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## 1.7 அரசிறைக் கொள்கை, வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகள், அரச படுகடன்

பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மேம்படுத்தல், பொருளாதாரத்தில் முதலீட்டினையும் சேமிப்பினையும் அதிகரித்தல், தொழில்வாய்ப்பை ஊக்குவித்தல், வறுமையை ஒழித்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்ட அண்மைய அரசிறைக் கொள்கை உபாயத்திற்கு இசைந்து செல்லும் விதத்தில் கடந்த அண்மைய காலங்களில் அடையப்பட்ட மேம்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் 2000ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வடிவமைக்கப்பட்டது. இதற்கமைய உள்நாட்டுக் கடன்பாடுகளை குறைவடையச் செய்யும் நோக்கில் வருமானங்களை அதிகரித்து செலவினங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை மிகையொன்றாகமாற்றி அரசிறை மொத்தப் பற்றாக்குறை கட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் எதிர்பாராத வகையில் யுத்தம் திவிரமடைந்தமையின் காரணமாக பாதுகாப்பு செலவினங்களிலேற்பட்ட அதிகரிப்பு, தொலைத்தொடர்பு தொழில்துறைக்கான பன்னாட்டு சந்தையின் சாதகமற்ற நிலைமைகள் மற்றும் பன்னாட்டு சந்தையில் எண்ணெய் விலைகள் அதிகரித்தமை என்பன 2000 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட அரசிறை இலக்குகள் அடையப்படுவதனை மிகவும் கடினமாக்கின. இதன் விளைவாக சில மேலதிக சீராக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மத்தியிலும் 2000ஆம் ஆண்டில் அரசிறை நிலைமையில் குறிப்பிடத்தக்க மோசமடையும் தன்மையொன்று அவதானிக்கப்பட்டது. வருவாய் பற்றாக்குறை, செலவுஅதிகரிப்பு, குறைந்த மூலதனச் செலவு, அதிகரித்த பற்றாக்குறை, குறைந்த வெளிநாட்டு நிதியிடல், அதிகரித்த உள்நாட்டு கடன்பாடு மற்றும் அரசபடுகடன் அதிகரிப்பு என்பன பதிவு செய்யப்பட்டன. அரசின் அதிகரித்த உள்நாட்டு நிதியிடலுக்கான கேள்வியுடன் எண்ணெய் விலைகளின் அதிகரிப்பினால் பாதிப்பிறகுள்ளாகிய அரச கூட்டுத்தாபனங்களின் அதிகரித்த கடன் தேவைப்பாடுகளும் இணைந்து உள்நாட்டு வட்டி வீதங்களில் அழுத்தத்தினை ஏற்படுத்தின. இதன் விளைவாக உயர்வடைந்த வட்டி வீதங்கள் நீண்ட காலப்

**அட்டவணை 1.4**

அரசிறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)

| விடயம் | 1980 | 1985 | 1990 | 1995 | 1998 | 1999 | 2000(அ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. அரசிறை | 19.6 | 22.3 | 21.1 | 20.4 | 17.2 | 17.6 | 16.8 |
| 2. செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலும் | 41.8 | 34.1 | 31 | 30.5 | 26.3 | 25.1 | 26.7 |
| 2.1நடைமுறைச் செலவினம் | 18.5 | 20.1 | 22.3 | 23.1 | 19.6 | 18.7 | 20.3 |
| 2.2.1 பாதுகாப்பு | 1.3 | 4.5 | 4.1 | 6.5 | 5.0 | 4.4 | 5.6 |
| 2.2.2 வட்டி | 3.4 | 4.6 | 6.4 | 5.7 | 5.4 | 5.6 | 5.6 |
| 2.2.3 கூலிகள் (ஆ) | 4.5 | 3.6 | 3.9 | 3.4 | 3.0 | 3.0 | 3.2 |
| 2.2.4 உதவுதொகைகளும் மாற்றல்களும் | 8.4 | 5.5 | 6.5 | 6.1 | 4.6 | 4.2 | 4.1 |
| 2.2.5 ஏனையவை | 0.9 | 1.9 | 1.4 | 1.4 | 1.6 | 1.4 | 1.6 |
| 2.2 மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 23.3 | 13.9 | 8.7 | 7.4 | 6.7 | 6.5 | 6.5 |
| 2.2.1 அரச முதலீடு | 18.5 | 13.8 | 8.3 | 7.9 | 6.7 | 6.4 | 6.4 |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 7.9 | 4.5 | 3.7 | 3.4 | 3.2 | 2.9 | 2.5 |
| மூலதன மாற்றல்கள் | 9.4 | 8.6 | 2.3 | 2.9 | 2.2 | 2.5 | 2.8 |
| கடன் வழங்கல் | 1.2 | 0.6 | 2.2 | 1.7 | 1.4 | 1.0 | 1.1 |
| 2.2.2 ஏனையவை | 4.7 | 0.2 | 0.4 | -0.5 | - | - | 0.1 |
| மீளமைத்தல் செலவு | 0.0 | 0.0 | 0.0 | 0.5 | 0.4 | 0.4 | 0.3 |
| ஏனையவை | 4.7 | 0.2 | 0.4 | -1.0 | -0.3 | -0.4 | -0.2 |
| 3. நடைமுறைக் கணக்கு நிலுவை | 1.1 | 2.2 | -1.2 | -2.7 | -2.4 | -1.0 | -3.4 |
| 4. கொடைகளுக்குமுன் மற்றும் தனியார் மயமாக்கல் நீங்கலான திரண்ட பற்றாக்குறை | -22.2 | -11.7 | -9.9 | -10.1 | -9.2 | -7.5 | -9.9 |
| 5. நிதியிடல் | 22.2 | 11.7 | 9.9 | 10.1 | 9.2 | 7.5 | 9.9 |
| 5.1வெளிநாட்டு நிதியிடல் | 9.2 | 6.4 | 5.7 | 4.5 | 1.7 | 0.7 | 0.4 |
| 5.1.1 கடன்கள் | 5.3 | 4.4 | 3.6 | 3.2 | 1.0 | 0.1 | 0.0 |
| 5.1.2 கொடைகள் | 3.9 | 2.0 | 2.1 | 1.4 | 0.7 | 0.6 | 0.4 |
| 5.2 உள்நாட்டு நிதியிடல் | 13.0 | 5.3 | 4.2 | 5.1 | 7.1 | 6.7 | 9.4 |
| 5.2.1 வங்கிகள் | 9.8 | 2.9 | 0.1 | 1.1 | 1.9 | 2.3 | 4.3 |
| 5.3 தனியார் மயப்படுத்தல் | 0.0 | 0.0 | 0.0 | 0.4 | 0.4 | - | - |
| முக்கிய குறிப்பு: | | | | | | | |
| மொத்த கூலிப் பட்டியல் | 5.0 | 4.2 | 4.9 | 5.2 | 5.3 | 5.3 | 5.5 |
| மொத்த பாதுகாப்புச் செலவினம் (இ) | 1.3 | 4.5 | 4.1 | 6.5 | 5.6 | 4.9 | 6.1 |

(அ) தற்காலிகமானவை.

(ஆ) பாதுகாப்பு அலுவலர்களுக்குச் செலுத்தப்பட்டவை நீங்கலாக.

(இ) பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகள் உட்பட.


மூலம்: நிதித் திட்டமிடல் அமைச்சு.

பகுதிக்கு நிலைத்திருக்குமாயின் அரசாங்க வட்டிச்செலவு அதிகரிப்பது மாத்திரமன்றி தனியார்துறை முதலீடுகளும் வாணிப நடவடிக்கைளும் மோசமாக பாதிக்கப்படலாம். வரவு செலவுத்திட்ட வெளிப்பாட்டை நடுந்தர கால இறை உறுதிப்பாட்டு வழியில் இட்டுச் செல்வதற்கான அரசின் உறுதியான கடப்பாட்டினை வெளிப்படுத்தி வருமானங்களை அதிகரித்து மீண்டெழும் செலவினங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் இறைப் பற்றாக்குறையையும் உள்நாட்டு கடன்பாட்டை கணிசமாக குறைவடையச் செய்யும் வகையில் 2001ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வடிவமைக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டில் கணிசமான அரசிறை நழுவல்கள் ஏற்பட்டமைக்கு வருவாயிலேற்பட்ட வீழ்ச்சி, அதிகரித்த பாதுகாப்பு செலவு, அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள், அரசதுறையின் கூலி அதிகரிப்பு, எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடலிலேற்பட்ட மற்றும் தனியார்மயமாக்கல் செயல்முறையிலேற்பட்ட தாமதங்கள் என்பன காரணமாக அமைந்தன. மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை முன்னைய ஆண்டில் எய்தப்பெற்ற மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சத வீழ்ச்சிக்கு மாறாக 1999இன் 7.5 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது வருவாய் 1999 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 17.7 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 16.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை மற்றும் நடைமுறைச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 18.7 சதவீதத்திலிருந்து 20.2 சதவீதத்திற்கு அதிகரித்தமை என்பனவற்றின் கூட்டு விளைவினால் ஏற்பட்டதாகும். மூலதனச் செலவினம் முன்னைய ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.5 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 6.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

வருவாய்ப் பக்கத்தில் வரி மற்றும் வரியல்லா மூலங்களிலிருந்தான சேமிப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைவாக காணப்பட்டது. பாரிய அரச தொழில் முயற்சிகளின் இலாபங்கள் குறைவடைந்ததன் காரணமாக கம்பனி வருமான வரி மூலமான வரி அரசிறையில் வீழ்ச்சிகள் பதிவு

**வரைபடம் 1.5**
**இறைத் துறைக் குறிகாட்டிகள்**



செய்யப்பட்ட வேளையில் குறைக்கப்பட்ட தீர்வை வீதங்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் மீதான இறக்குமதி தீர்வை உற்பத்தி வரியொன்றுக்கு மாற்றப்பட்டமை மற்றும் இறக்குமதிகளின் உள்ளடக்கம் பெறுமதி தாழ்ந்த தீர்வையுடைய பொருட்களை நோக்கி மாற்றமடைந்தமை என்பன காரணமாக இறக்குமதி மூலமான வருவாய் சேகரிப்புக்கள் குறைவடைந்து காணப்பட்டன. அதிகரித்த எண்ணெய் விலைகள் மற்றும் அரச தொழில் முயற்சிகளினது உற்பத்திப் பொருட்களின் விலைகளில் அத்தியாவசிய சீராக்கங்கள் தாமதமாக மேற்கொள்ளப்பட்டமை ஆகிய முக்கிய காரணங்களினால் அவற்றின் இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்து அரச தொழில்முயற்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளபபட்ட இலாபங்களும் பங்கிலாபங்களும் குறைவடைந்ததன் காரணமாக வரியல்லாத அரசிறை மோசமான செயலாற்றமொன்றினை பதிவு செய்தது.

செலவினப் பக்கத்தில் பாதுகாப்புடன் தொடர்புபட்ட செலவினம் படுகடன் இருப்பு அதிகரித்தமை என்பனவற்றின் விளைவாக வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமை, ஒகத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பளவுயர்வு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கூலிப்பட்டியல் அதிகரித்தமை என்பன காரணமாக நடைமுறைச் செலவினம் மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை கணிசமாக விஞ்சிக் காணப்பட்டது. எனினும் அத்தியாவசியமற்ற வழங்கல்கள் 5 சதவீதத்தினால் குறைக்கப்பட்டதனூடாக கூலியல்லாத மீண்டெழும் செலவில் எய்தப் பெற்ற சேமிப்புக்கள் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் பகுதியொன்றை எதிரீடு செய்தன. அரசும் அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை மெதுவடைய செய்வதன் வாயிலாக இறை அழுத்தத்தினை கணிப்பதற்கு முயற்சித்தது. இதன் விளைவாக அடையப்பட்ட அரச முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.4 சதவீதமாக விளங்கி மூலவரவு செலவுத்திட்ட மதிப்பீடான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.1 சதவீதத்தைவிட குறைவடைந்து காணப்பட்டது.

குறைந்த அரசிறை சேகரிப்பு மற்றும் அதிகரித்த நடைமுறை செலவினம் என்பவற்றின் கூட்டு விளைவாக நடைமுறைக் கணக்கு மூல வரவு செலவுத்திட்ட இலக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.6 சதவீத மிகையொன்றுடன் ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.4 சதவீத பற்றாக்குறையை விளைவித்தது 1999இனைவிட 2000ஆம் ஆண்டில் அரசின் குறைச் சேமிப்புக்கள் அதிகரித்துக் காணப்பட்டன. தொடக்கப் பற்றாக்குறை 1999 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவீதப் புள்ளிகளினால் மோசமடைந்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.2 சதவீதத்தில் காணப்பட்டது.

வெளிநாட்டு கொடைகள் மற்றும் கடன்கள் மூலமான பற்றாக்குறை நிதியிடலானது மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தியின் 0.4 சதவீதமாக மட்டுமே அமைந்து அரச முதலீட்டுச் செயற்பாடுகள் மெதுவடைந்தமையையும் தாமதமடைந்தமையையும் பகுதியளவிற்கு பிரதிபலித்தது. பற்றாக்குறையை நிதியிடுவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தனியார் மயமாக்கல் பணப்பெறுமதிகள் எதிர்பார்க்கப்பட்ட ரூ 30,000 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ 401 மில்லியனாக மட்டுமே காணப்பட்டன. இப்பற்றாக் குறையானது முக்கியமாக பன்னாட்டு சந்தையில் தொலைத்தொடர்பு துறை பங்குகளின் விலைகள் தாழ்வடைந்து காணப்பட்டதன் காரணமாக இலங்கை டெலிகொம்மின் பங்குகள் விற்பனை செய்யப்படாமையினால் ஏற்பட்டதாகும்.

அதிகரித்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையுடன் இணைந்ததாக தனியார் மயமாக்கல் மற்றும் வெளிநாட்டு நிதியிடல் பணப்பெறுகைகளில் ஏற்பட்ட பற்றாக்குறை யானது அரசால் உள்நாட்டு சந்தையிலிருந்தான அதன் கடன்பாடுகளை கணிசமாக அதிகரிப்பதற்கு நிர்ப்பந்தித்தது. இதன் விளைவாக பற்றாக்குறையின் உள்நாட்டு நிதியிடலானது மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1999 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.8 சதவீதத்திலிருந்து 2000 இல் 9.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. உள்நாட்டு வங்கியல்லா மூலவளங்களின் கிடைப்பனவு மட்டுப்படுத்தல்களை கொண்டிருப்பதனால் உள்நாட்டு கடன்பாடுகளினது அதிகரிப்பில் பெரும் பங்கொன்று வங்கி நிதியிடலில் பிரதிபலிக்கப்பட்டது. இது உள்நாட்டு வங்கியொன்றினூடாகப் பெறப்பட்ட வெளிநாட்டு வங்கி கூட்டுக் கடனான அமெரிக்க டொலர் 100 மில்லியன் கடன்பாட்டையும் உள்ளடக்குகின்றது. பற்றாக்குறையை நிதியிடுவதற்கான வங்கித்தொழில் துறையிலிருந்தான அரச கடன்பாடுகள் 1999 இன் 2.4 சதவீதத்திலிருந்து 2000 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

உள்நாட்டு சந்தை கடன்பாடுகளில் பெரும் பகுதி பெருமளவு சந்தை சார்ந்த கடன்பாட்டு கருவியான திறைசேரி முறிகளினூடாகத் திரட்டப்பட்டது. பற்றாக்குறை நிதியிடலுக்கு உள்நாட்டு மூலவளங்கள் அதிகரித்தளவில் நாடப்பட்டமையை பிரதிபலித்து மொத்த அரசபடுகடனில் உள்நாட்டுப் படுகடனின் பங்கு 1999 இன் 52 சதவீதத்திலிருந்து 2000 ஆம் ஆண்டில் 56 சதவீதத்திற்கு அதிகரித்தது. நடுத்தர நீண்டகால படுகடன் இருப்பு 2000 ஆம் ஆண்டில் விரைந்த வீதமொன்றால் அதிகரித்தமைக்கு அரசபடுகடனின்

சராசரி முதிர்ச்சியை நீடிக்கும் வகையில் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலப்பகுதியுடன் வழங்கல் செய்யப்பட்ட முந்திய கடன்பாட்டுக் கருவியான திறைசேரி முறிகளே காரணமாகும். அதிகரித்த வட்டி வீதங்கள் தற்காலிகமானதொரு நிகழ்வாக கருதப்பட்டமையினால் அரசு முதல் தடவையாக அழைக்கத்தக்க திறைசேரி முறிகளை (அழைக்கத்தக்க தேர்வு விருப்புமான இரு ஆண்டு முறிகள்) வழங்கியது.

## 1.8 செலாவணி வீதமும் வெளிநாட்டுத் துறையும்

### 1.8.1 இலங்கையைப் பாதிக்கும் பன்னாட்டு நிகழ்வுகள்

1999இன் நடுப்பகுதியிலிருந்து மீட்சிபெறத் தொடங்கிய பன்னாட்டு வர்த்தகம் 2000ஆம் ஆண்டில் மேலும் வலுப்பெற்றது. உலக வர்த்தகத்தின் அளவு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5.3 சதவீதத்திலிருந்து 2000 ஆம் ஆண்டில் 12.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டது. இது முக்கியமாக அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து ஏற்றுமதி அளவு 5.0 சதவீதத்திலிருந்து 11.4 சதவீதத்திற்கு அதிகரித்தமை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினது ஏற்றுமதி அளவு 4.1 சதவீதத்திலிருந்து 15.7 சதவீதத்திற்கு அதிகரித்தமை என்பவற்றின் விளைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் ஏற்றுமதி அளவு முனைப்பாக அதிகரித்தமையினால் ஏற்பட்டதாகும். ஐக்கிய அமெரிக்காவின் எற்றுமதி அளவு முன்னைய ஆண்டின் 2.9 சதவீதத்திற்கெதிராக 8.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் யப்பான் 1999 இன் 1.9 சதவீதத்திற்கெதிராக 9.7 சதவீத அதிகரிப்பை பதிவு செய்தது. இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதிகள் 4.5 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதத்திற்கு இரு மடங்கிற்கும் மேலாக வளர்ச்சியடைந்தன. இறக்குமதிகளின் வளர்ச்சிக்கான முக்கிய உந்து விசையானது 13.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட வேளையில் யப்பானும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் முறையே 6.8 சதவீத மற்றும் 8.7 சதவீத வளர்ச்சி வீதங்களுடன் இறக்குமதிகளின் வளர்ச்சிக்கான பங்கினை ஆற்றின. புதிதாக கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட ஆசிய நாடுகளினது எற்றுமதிகளும் இறக்குமதிகளும் முறையே 13.0 சதவீதத்தினாலும், 14.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்து பன்னாட்டு வர்த்தகத்திலான அந்நாடுகளின் உயர்ந்த வளர்ச்சிப் போக்கினை தொடர்ந்து பேணின. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வர்த்தக மாற்று வீதம் 5.7 சதவீத மேம்பாடொன்றினை பிரதிபலித்த வேளையில் அபிவிருத்தியடைந்த நாடுகளினது வர்த்தக மாற்று வீதம் 1 சதவீதத்தினால் மோசமடைந்தது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினது வர்த்தகமாற்று வீதத்தில் ஏற்பட்ட மேம்பாடு முக்கியமாக எண்ணெய் விலைகள் முனைப்பாக அதிகரித்தமையை பிரதிபலித்தது 2000ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தயாரிப்புப் பொருட்களினதும் (0.3 சதவீதம்) எரிபொருளல்லாத முதனிலைப் பொருட்களினதும் (0.7 சதவீதம்) ஏற்றுமதி விலைகள் சிறிதளவளவு மேம்பாட்டை மட்டுமே எடுத்துக் காட்டின. 2000ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை முழுமையாக நோக்குகையில் வளர்ச்சியடைந்த நாடுகளை விட அவை பன்னாட்டு வர்த்தகத்திலிருந்து பயனடைந்தமையினால் பத்தாண்டு காலத்தில் முதல் தடவையாக அவற்றின் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கு மிகையொன்றைக் காட்டியது.எனினும் எண்ணெயை இறக்குமதி செய்யும் நாடாகையால் இலங்கையின் வர்த்தக மாற்று வீதம் 6 சதவீதத்தினால் மோசமடைந்தது.

இவ்வாண்டில் முக்கிய நாணயங்களில் அடிக்கடி மாறுபடும் தன்மை சிறிது காணப்பட போதிலும் பன்னாட்டு செலாவணி சந்தைகள் சார்பளவில் உறுதியாயிருந்தமை. ஐக்கிய அமெரிக்காவின் தொடர்ச்சியான உறுதி வாய்ந்த பொருளாதார செயலாற்றம் முக்கிய நாணயங்களுக்கெதிராக டொலரினை பலப்படுத்தியது. பொருளாதார மீட்சி குறித்து எழுந்த சமிக்ஞைகளுக்கு பதிலளிக்கும் வகையில் 1999 இல் கிட்டத்தட்ட 9 சதவீதத்தினால் பெறுமான வளர்ச்சியடைந்து யப்பானிய யென், பொருளாதாரத்தில் அதிகரித்துவரும் பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடிகளின் காரணமாக தொடர்ந்து பெறுமானத் தேய்வடைந்தது. ஆண்டினிறுதியில் விரைந்த வீதமொன்றால் பெறுமானத் தேய்வடைந்த யென் 2000 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 11 சதவீத மொத்த பெறுமானத் தேய்வடைந்தது. இதேவேளை செலாவணி வீதத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவுடன் செலாவணி சந்தையில் தலையிடுவதற்கு ஐக்கிய அமெரிக்காவினதும் யப்பானினதும் ஆதரவுடன் ஐரோப்பிய மத்திய வங்கி மேற்கொண்ட பல முயற்சிகளுக்கு மத்தியிலும் யூரோ ஐக்கிய அமெரிக்கா டொலருக்கெதிராக 8 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்து ஆண்டு முழுவதும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. இதேவேளை இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் தவிர்ந்த கிழக்காசியாவிலுள்ள செலாவணி சந்தைகள் சார்பளவில் உறுதிப்பாட்டினை பிரதிபலித்தன. தொடரும் நிதித்துறை பிரச்சினைகள் மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் என்பவற்றை பிரதிபலித்து இந்தோனேசியாவின் ருபியா ஐக்கிய அமெரிக்கா டொலருக்கெதிராக 26 சதவீத பெறுமான தேய்வடைந்த வேளையில் அமைதியற்ற அரசியல் சூழலின் காரணமாக பிலிப்பைன்சின் பெசோ 20 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது.

தாய்லாந்தின் பாத் 14 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்து ஆண்டினிறுதி பகுதியில் விரைந்த பெறுமானத் தேய்வினைக் காட்டியவேளையில் கொரியாவின் வொன் முதலாம் அரையாண்டில் பெறுமான வளர்ச்சியடைந்த பின்னர் 10 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது. சிங்கப்பூர் டொலர் ஆண்டில் பின்னைய பகுதியில் உறுதியடைந்து காணப்பட்ட போதிலும் 2000 ஆம் ஆண்டில் அது 4 சத வீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது. இதேவேளை மலேசியா இவ்வாண்டில் தொடர்ந்தும் அதன் நிலையான செலவாணி வீத கொள்ளையை பின்பற்றியது. தமது போட்டித்தன்மையை மேம்படுத்தும் வகையில் இந்தப் போட்டி நாடுகளின் நாணயங்கள் சந்தையில் பெறுமானத் தேய்வடைந்துள்ளமையினால் உலக சந்தையில் தனது போட்டித் தன்மையைப் பேணுவதற்கு இலங்கை ரூபாவிலும் இத்தகைய பெறுமானத்தேய்வு ஒன்று அவசியமாகின்றது.

## இலங்கையின் வெளிநாட்டுத்துறை நிகழ்வுகள்

ஏற்றுமதிகள் வலுவாக மீட்சியடைந்தமை, தனியார் பணவனுப்பல் உட்பாய்ச்சல்கள் தொடர்ந்து அதிகரித்தமை என்பவற்றுக்கு மத்தியிலும் அதிகரித்த எண்ணெய் விலைகள், பாதுகாப்புடன் தொடர்புபட்ட இறக்குமதிகளின் அதிகரிப்பு, வீழ்ச்சியடைந்த சுற்றுலா வருகைகள், குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவி, கொழும்புப் பங்கு பரிவர்த்தனையிலான வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்கள் ஆகிய முக்கிய காரணங்களினால் சென்மதி நிலுவை நிலைமை 2000ஆம் ஆண்டில் மோசமடைந்தது. இதன் விளைவாக வெளிநாட்டு நடைமுறை கணக்கு மற்றும் திரண்ட சென்மதி நிலுவை ஆகியவற்றின் பற்றாக்குறைகள் அதிகரித்து வெளிநாட்டு ஒதுக்குகளில் குறைப்பினை ஏற்படுத்தி செலாவணி வீதத்தின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியது. இந்நிலைமையினை கட்டுப்படுத்துவதற்காக வீச்சு பல தடவைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு செலாவணி வீத அமைப்பில் பல மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனைப் போன்றே செலாவணி வீதம் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் மீதான அழுத்தத்தினை தணிப்பதற்காக நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டது.

உறுதியாக மீட்சியடைந்த உள்நாட்டுப் பொருளாதார மற்றும் சாதாரணமான வெளிநாட்டு சூழல் என்பனவற்றக்கு இசைந்து செல்லும் விதத்தில் 2000ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் விரைந்த வீதங்களினால் வளர்ச்சியடைந்து இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக ஏற்றுமதிகள் 1999 இன் 4 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 2000ஆம் ஆண்டில் 20 சதவீத உயர்வளர்ச்சியினை பதிவு செய்து குறிப்பாக ஏற்றுமதிகளின் அளவு 18 சதவீதத்தினால் முனைப்பாக அதிகரித்தமையை பிரதிபலித்தன. இதேவேளை விலைச் சுட்டெண் 2 சதவீதத்தினால் மட்டுமே உயர்வடைந்தது. இவ் அதிகரித்த வளர்ச்சியானது குறிப்பாக புடவைகளும் ஆடைகளும், தேயிலை, பொறிகருவிகள், மின் உபகரணங்கள், இறப்பரை அடிப்படையாக கொண்ட உற்பத்திப் பொருட்கள், இரத்தினக் கற்கள், வைரங்களும் மற்றும் ஆபரணங்களும் என்பன தொடர்ந்து விரிவடைந்தமையினால் தோற்றுவிக்கப்பட்டதாகும். ஏற்றுமதிகளின் பல்லினப்படுத்தல் தொடர்ந்து இடம் பெற்று பெருந்தோட்ட வேளாண்மை பண்டங்களின் சார்பளவு பங்கு 2000ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதிகளின் 15 சதவீதத்றிற்கு குறைவடைந்த


**அட்டவணை 1.5**
வெளிநாட்டுத்துறைக் குறிகாட்டிகள்

| | 1996 | 1997 | 1998 | 1999 | 2000(அ) |
|---|---|---|---|---|---|
| ஆண்டு மாற்றங்கள் (%) | | | | | |
| ஏற்றுமதி அளவுகள் | 4.1 | 10.6 | 0.1 | 5.0 | 18.3 |
| இறக்குமதி அளவுகள் | 0.4 | 12.3 | 12.4 | 0.2 | 12.9 |
| ஏற்றுமதி அலகுப் பெறுமதி | 11.6 | 9.3 | 11.6 | -8.5 | 1.5 |
| இறக்குமதி அலகுப் பெறுமதி | 12 | 2.4 | -2.2 | -3.5 | 8.1 |
| வர்த்தக மாற்று விகிதம் | -0.5 | 6.8 | 14.2 | -5.2 | -6.1 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | | | | | |
| வர்த்தகப் பற்றாக்குறை/ மொ.உ.உ | -9.7 | -8.1 | -6.9 | -8.7 | -10.8 |
| நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை/ மொ.உ.உ | -4.9 | -2.6 | -1.4 | -3.6 | -6.4 |
| திரண்ட சென்மதி நிலுவை / மொ.உ.உ | -0.5 | 1.1 | 0.2 | -1.7 | 3.1 |
| வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | 1,957 | 2,029 | 1,984 | 1,639 | 1,043 |
| மொத்த ஒதுக்குகள் | 2,717 | 3,132 | 2,907 | 2,582 | 2,126 |
| செலாவணிவீத சுட்டெண் (காலமுடிவில்) (ஆ) | | | | | |
| பெயரளவு தாக்குமுள்ள செலாவணிவீதம் | 111.3 | 126.1 | 111.5 | 110.2 | 111.6 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) 24 கூடை நாணயங்கள், 1995=100

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வரைபடம் 1.6
தெரிந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டுத்துறைக் குறிகாட்டிகள்




வேளையில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 78 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளினுள் புடவைகளும் ஆடைகளும் ஏறத்தாள 70 சதவீத பெரும் பங்கிற்கு வகை கூறின.

மொத்த இறக்குமதிப் பட்டியல் 2000ஆம் ஆண்டில் அதியுயர்ந்த 22 சதவீதத்தினால் அதிகரித்து அதிகரித்த அளவுகள் மற்றும் உயர்வடைந்த பன்னாட்டு விலைகள் ஆகிய இரண்டையும் பிரதிபலித்தன. இதன் விளைவாக வர்த்தக பற்றாக்குறை 1999 இன் 8.7 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10.8 சதவீதத்திற்கு விரிவடைந்தது. இடை நிலைப்பொருட்களின் இறக்குமதிகள் 24 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து அதியுயர்ந்த அதிகரிப்பினை பதிவு செய்த வேளையில் முதலீட்டுப் பொருட்களும் நுகர்வுப் பொருட்களும் முறையே 12 சதவீதத்தினாலும், 11 சதவீதத்தினாலும் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டில் இறக்குமதி விலைகள் 8 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் ஏற்றுமதி விலைகள் 2 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தமையினால் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் வர்த்தக நிலுவை மோசமடைந்தது. சுற்றுலாத்துறை மெதுவடைந்தமை மற்றும் சரக்கு மாற்றுக் கப்பலேற்றலின் கையாளால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமை என்பன காரணமாக பணிகள் கணக்கின் மிகை வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் படுகடன் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளின் முக்கிய காரணத்தினால், வட்டி வருமானத்தின் பற்றாக்குறை மேலும் விரிவடைந்தது. 2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 974 மில்லியன் தொகை கொண்ட அதிகரித்த தனியார் மாற்றல்களின் காரணமாக மொத்த தேறிய நடைமுறை மாற்றல்கள் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்றினை பதிவு செய்து சென்மதி நிலுவை மீதான அழுத்தத்தினை குறைவடையச் செய்தன.

இந்நிகழ்வுகளின் விளைவாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1,065மில்லியன் அல்லது மொ.உ.உற்பத்தியின் 6.4 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. இது நீண்ட காலத்தில் தாக்குப்பிடிக்க முடியாதவொரு உயர்ந்த பற்றாக்குறையாக அமைந்து அதனை

கட்டுப்படுத்துவதற்கு உறுதியான சீராக்கம் அவசியமென்பதை எடுத்துக்காட்டியது. மூலதனக் கணக்கில் அரசின் நீண்டகால பகிர்ந்தளிப்புக்கள் குறைவடைந்து காணப்பட்டமைக்கு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலான காலதாமதமே காரணமாக அமைந்ததுடன் இது உரிய கவனத்தையும் வேண்டி நின்றது. தேறிய மூலதனம் மற்றும் நிதியியல் பாய்ச்சல்களிலேற்பட்ட அதிகரிப்பு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையிலேற்பட்ட கணிசமான அதிகரிப்பினை ஈடுசெய்வதற்கு போதுமானதாக இல்லாமையினால் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 516 மில்லியனிற்கு அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.1 சதவீதத்திற்கு அதிகரித்து சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை மேலும் மோசமடைந்ததை பிரதிபலித்தது.

வெளிநாட்டுக் கடன்கள் மெதுவாக பகிர்ந்தளிக்கப்பட்டமை, அதிகரித்த படுகடன் மீள் கொடுப்பனவுகள், வெளிநாட்டு நாணயங்களது போக்குளின் தாக்கம் என்பனவற்றைப் பிரதிபலித்த நாட்டின் மொத்த வெளிநாட்டுப்படுகடன் இருப்பு 2000ஆம் ஆண்டில் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வெளிநாட்டுப்படுகடன் விகிதம் 1999இன் 57.8 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 53.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் நாட்டின் படுகடன் மீள் கொடுப்பனவு இயலளவினை மேம்படுத்தியதனை பிரதிபலித்து வெளிநாட்டுப்படுகடன் பணிவிகிதமானது 12.4 சதவீதத்திலிருந்து 12.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2000ஆம் ஆண்டு இறுதியில் 18 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 2,126 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்து 3.5 மாதங்களுக்கான இறக்குமதிகளை நிதியிடுவதற்கு போதுமானதாக இருந்தது. இதேவேளை மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 36 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,043 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்து 2000ஆம் ஆண்டிற்கான 1.7 மாத இறக்குமதிகளை நிதியிடுவதற்கு போதுமானதாக இருந்தது.

2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் மேலும் வலுவடைந்த போதிலும் பன்னாட்டுச் செலாவணிச் சந்தைகள் தொடர்ந்து உறுதியடைந்து காணப்பட்டன. எனினும் உள்நாட்டுப் பணவீக்கவீதம் சார்பளவில் குறைவடைந்து காணப்பட்டதற்கு மத்தியிலும் மோசமடைந்து சென்ற சென்மதி நிலுவை இலங்கை ரூபாவின் மீது தொடர்ந்து அழுத்தத்தினை ஏற்படுத்தியது. வாங்கும் விற்கும் வீதங்களுக்கிடையிலான வீச்சினை விரிவாக்குவதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் நெகிழ்ச்சித் தன்மை அதிகரிக்கப்பட்டது. வீச்சினை விரிவாக்கல் மற்றும் நகரும் முகாமைப்படுத்தப்பட்ட முறையின் கீழ் சந்தை நிகழ்வுகளுக்காக கிரமமாக சீராக்கங்களை மேற்கொள்ளல் என்பன வெளிநாட்டுச் செலாவணிச்சந்தையில் அழுத்தத்தினை தணித்தன. இதன் விளைவாக ரூபா 2000ஆம் ஆண்டில் 12.5 சதவீத விரைந்த வீதமொன்றினால் பெறுமானம் தேய்வடைந்தது.

நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மை பேணப்படுவதனை பிரதிபலிக்கும் வகையில் 24 வெளிநாட்டு நாணயங்கள் கொண்ட தொகுதியொன்றுக்கெதிராக ரூபாவின் உண்மைப் பயன்தரு செலாவணி வீதம் 2000ஆம் ஆண்டில் 0.6 சதவீத சிறிதளவு பெறுமான வளர்ச்சியினை பிரதிபலித்தது.

## 1.9 நிதியியற்துறை

### நாணயக் கொள்கை

பொருளாதார செயற்பாடுகளின் மீட்சி அதிகரித்த உள்நாட்டுத் திரவத்தன்மையை வேண்டி நின்ற வேளையில் அரசதுறையின் அதிகரித்த உள்நாட்டுக் கடன்பாடுகள், வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் ரூபா மீதான அழுத்தம், அதிகரிக்கும் பணவீக்க வீதம் என்பன காரணமாக 2000ஆம் ஆண்டில் நாணயக் கொள்கையை இறுக்கமாக்க வேண்டிய தேவை எழுந்து நாணய முகாமைத்துவம் அறை கூவலுக்கு உட்பட்டது. பண மற்றும் வெளிநாட்டு செலாவணி சந்தைகளில் உறுதிப்பாட்டினை பேணுகின்றவேளையில் கேள்வியால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தம் பொருளாதாரத்தில் உருவாவதனை தடுப்பதில் 2000ஆம் ஆண்டில் நாணயக் கொள்கை முக்கிய கவனம் செலுத்தியது.

அதிகரித்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையையும் எண்ணெய் விலை உயர்வினால் பாதிப்பிற்குள்ளான அரச தொழில் முயற்சி நிறுவனங்களின் தொழிற்பாட்டு இழப்புக்களையும் நிதியிடுவதற்கான அரசதுறையின் கடன்பாட்டு தேவைப்பாடுகள் அதிகரித்து உள்நாட்டு நிதியியல் மூலங்களுக்காக தனியார் துறையுடன் போட்டியிட்டமையினால் சந்தை வட்டிவீதங்கள் மேல்நோக்கி உயர்ந்தன. இதேவேளை அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளிலும் வெளிநாட்டுச் செலாவணிச்சந்தையில் ரூபாவிலும் அழுத்தத்தினை ஏற்படுத்திய அதிகரித்த சென்மதி நிலுவைப் பற்றாக்குறையானது 2000ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் நாணய முகாமைத்துவத்தின் மீது கணிசமான செல்வாக்கினை கொண்டிருந்தது. இதன் விளைவாக குறிப்பாக பின்னரையாண்டுப் பகுதியில்

**அட்டவணை 1.6**

## நிதியியல் புள்ளி விபரங்கள்

| விடயம் | 2000 முடிவில் ரூ.பில் | 1999 தொகை ரூ.பில் | ] | 2000 தொகை ரூ.பில் | ] |
|---|---|---|---|---|---|
| நாணயக் கூட்டுக்கள் | | | | | |
| குறுகிய பணநிரம்பல் □$M_1$' | 118.5 | 12.3 | 12.8 | 9.9 | 9.1 |
| விரிந்த பணநிரம்பல் □$M_2$' | 404.7 | 41.9 | 13.3 | 46.6 | 13.0 |
| திரட்டப்பட்டவிரிந்த பணநிரம்பல் □$M_{2b}$' | 483.4 | 50.6 | 13.4 | 55.1 | 12.9 |
| ஏதுக்காரணிகள் (அ) | | | | | |
| உள்நாட்டுக் கொடுகடன் | 549.9 | 63.4 | 17.1 | 117.0 | 27.0 |
| அரசிற்கு (தேறிய) | 147.3 | 29.3 | 45.3 | 53.4 | 56.8 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 38.3 | 3.0 | 30.1 | 25.2 | 193.2 |
| தனியார் துறைக்கு | 364.4 | 31.1 | 10.5 | 38.4 | 11.8 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) | 69.5 | -3.6 | -3.4 | -32.6 | -31.9 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -136.0 | -9.2 | -9.5 | -29.4 | -27.5 |
| ஒதுக்குப் பணம் | 105.2 | 7.6 | 8.2 | 4.7 | 4.7 |
| அரசிற்கு (தேறிய) | 0.5 | -0.4 | -33.3 | -0.2 | -30.5 |
| வர்த்தக வங்கிகள் (தேறிய) | 91.6 | 20.8 | 80.3 | 44.8 | 96.1 |
| வெளிநாட்டு சொத்துக்கள் (தேறிய) | 51.9 | -12.5 | -12.2 | -31.4 | -35.2 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -44.9 | -0.4 | -1.1 | -8.6 | -23.7 |
| | **1999 முடிவில்** | **2000 முடிவில்** | | | |
| **வட்டி வீதங்கள் (ஆண்டு முடிவில்)** | | | | | |
| 3 மாத திறைசேரி உண்டியல்கள் | 11.79 | 17.77 | | | |
| வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி முதற் கடன் வழங்கல்□]' | 15.90 | 21.46 | | | |
| பங்குச் சந்தை | | | | | |
| அனைத்து பங்குவிலைச் சுட்டெண் □1985=100' | 572.5 | 447.6 | | | |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ.பில்லியன்) | 112.8 | 88.8 | | | |

(அ) □$M_2$' உடன் தொடர்பானது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நாணயக் கொள்கை அமைப்பு இறுக்கமாக்கப்பட்டது. இது வங்கிவீதம், மீள் கொள்வனவு வீதம், நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பன பல தடவைகளில் அதிகரிக்கப்பட்டதன் மூலம் எய்தப்பெற்றது. இவ்வாறாக மத்திய வங்கி வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதங்களினதும் விரிந்த பணத்தின் வளர்ச்சியிலும் செல்வாக்கினைச் செலுத்துவதற்காக நேரடியல்லாத (மறைமுக) பலதரப்பட்ட நாணயக் கொள்கைக் கருவிகளை பயன்படுத்தியது.

நாணய முகாமைத்துவமானது ஒதுக்குப் பணத்தை இடைநிலை இலக்காகக் கொண்ட நாணய இலக்கிடல் அமைப்பொன்றினை கொண்டமைந்துள்ளது. நாணய நிலைமைகளை மதிப்பிடுவதற்காக மத்திய வங்கி நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சி, நாணய நிலைமைகள் சுட்டெண், சந்தை வட்டிவீதங்களிலான மாற்றங்கள் என்பன உள்ளிட்ட பல வழிமுறைகளில் தொடர்ந்து தங்கியிருந்தது. மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களினூடான திறந்த சந்தை தொழிற்பாடுகள் தொடர்ந்தும் முக்கிய கொள்கைக் கருவியாக விளங்கின.

பணவீக்கம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தமை, சந்தைத் திரவத் தன்மை மேம்பாடடைந்தமை மற்றும் பணவீக்க அழுத்தங்களின்றி பொருளாதார செயற்பாடுகள் உறுதியாக மீட்சியடைந்தமை என்பனவற்றின் காரணமாக மீள் கொள்வனவு வீதம் 25 அடிப்படைப் புள்ளிகளினால் 9 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதன் வாயிலாக 2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நாணயக் கொள்கை அமைப்பு தளர்த்தப்பட்டது. எனினும் அதிகரிக்கும் பணவீக்க வீதம், அதிகரித்த அரசதுறைக் கடன்பாடுகள் உள்நாட்டு வட்டிவீதங்களில் ஏற்படுத்திய அதிகரித்த அழுத்தம் மற்றும் மோசமடையும் வெளிநாட்டுத்துறை நிலைமைகள் செலாவணிச் சந்தையில் ஏற்படுத்திய அழுத்தம் என்பவற்றை கருத்திற்கொண்டு நாணயக் கொள்கை பின்னரையாண்டில் இறுக்கமாக்கப்பட்டது. இது மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் 2000ஆம் ஆண்டு இறுதியளவில் முறையே 17 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்கும் ஆறு தடவைகள் உயர்த்தப்பட்டதன் மூலமும் வங்கி வீதம் 16 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு மூன்று கட்டங்களில் உயர்த்தப்பட்டதன் மூலம் எய்தப்பெற்றது.

எனினும் மத்திய வங்கி அதன் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியினூடாக சந்தைக்கு தொடர்ந்து திரவத் தன்மையை கிடைக்கச் செய்ததன் மூலம் திரவத் தன்மை பற்றாக்குறையை தடுத்தது.

ரூபா வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பிலான நியதி ஒதுக்கு விகிதம் 11 சதவீதத்தில் பேணப்பட்டது. எனினும் வெளிநாட்டில் வைப்பிலிடப்படாத வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடானது வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய திரவத்தன்மையை மேம்படுத்தல் மற்றும் வங்கிகள் கவர்ச்சிகரமான வட்டிவீதங்களை செலுத்துவதனை இயலச் செய்வதன் மூலம் வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஊக்குவித்தல் என்பனவற்றை கருத்திற்கொணடு ஒகத்தில் நீக்கப்பட்டது.


## பண நிரம்பல்

அரசதுறைக்கான வங்கிக் கொடுகடன் முனைப்பாக அதிகரித்ததற்கு மத்தியிலும் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைவடைந்ததன் காரணமாக 2000ஆம் ஆண்டில் நாணய வளர்ச்சி ஏறத்தாழ 13 சதவீதத்தில் உறுதியடைந்து காணப்பட்டது. உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளினதும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளினதும் தொழிற்பாடுகளை உள்ளடக்குகின்ற ஒன்று திரண்ட விரிந்த பண நிரம்பலின் ($M_{2b}$) ஆண்டு வளர்ச்சியானது பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய கேள்வியால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தத்தினை கட்டுப்படுத்தி 1999 திசெம்பரின் 13.4 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டு திசெம்பரில் 12.9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. குறுகிய பணத்தின் வளர்ச்சி ($M_1$) 4.0 –11.7 சதவீத பரந்த வீச்சொன்றில் நகர்ந்ததெனினும் 2000ஆம் ஆண்டு இறுதியில் 9.1 சதவீத தாழ்ந்த வளர்ச்சியை பதிவு செய்தது. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் முனைப்பாக வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ஒதுக்குப்பணம் இதனைவிடவும் குறைந்த 4.7 சதவீதத்தினால் விரிவடைந்தது. வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்கு தேவைப்பாடு நீக்கப்பட்டமை மற்றும் வைப்புக்களுக்கான நாணய விகிதம் வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. நாணய பெருக்கி 1999இன் 4.26 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 4.60 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. நாணய சுற்றுவேகம் ஏறத்தாழ 2.6 சதவீதமாக விளங்கி பணவீக்கம் தொடர்பான பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நிகழவில்லையென சுட்டிக்காட்டியது.


நாணய விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்த முக்கிய காரணியாக வங்கித் தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி விளங்குகின்றது. 2000ஆம் ஆண்டில் வங்கித் தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 32 சதவீதத்தினால் ரூ.69.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து சென்மதி நிலுவையிலேற்பட்ட கணிசமான பற்றாக் குறையைப் பிரதிபலித்தது. இதில் ஏறத்தாழ 96 சதவீதம் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்களினது வீழ்ச்சியில் பதிவு செய்யப்பட்டமைக்கு வர்த்தக

**வரைபடம் 1.7**
**நிதியியல் துறைக் குறிகாட்டிகள்**


வரைபடம் 1.7.1
விரிந்த பண வளர்ச்சிக்கான பங்களிப்பு




வரைபடம் 1.7.2
வட்டி வீதங்கள்




வரைபடம் 1.7.3
பங்குச் சந்தைச் சுட்டெண்கள்



வங்கிகளுக்கு வெளிநாட்டுச் செலாவணி விற்பனை செய்யப்பட்டமை மற்றும் வெளிநாட்டுப் பொதுப்படுகடன் தீர்ப்பனவு செய்யப்பட்டமை என்பன விளங்குகின்றன. வர்த்தக வங்கிகளினது தேறிய வெளிநாட்டு சொத்துக்களின் வீழ்ச்சி சிறிதளவானதாக காணப்பட்டது. (ஏறத்தாழ ரூ.1.2 பில்லியன்)

அரச துறைக்கான கொடுகடனிலேற்பட்ட முனைப்பான அதிகரிப்புடன் தனியார் துறைக்கான மிதமான கொடுகடன் விரிவாக்கமும் இணைந்து மொத்த உள்நாட்டுக் கொடுகடனில் 27 சதவீத விரிவாக்கத்தினை விளைவித்தன. அதிகரித்த வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை, மற்றும் வெளிநாட்டு நிதியிடலிலும் தனியார் மயமாக்கல் பணப் பெறுகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன காரணமாக உள்நாட்டு வங்கிகளிலிருந்தான அரச கடன்பாடு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. அரசிற்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பில் பெரும்பகுதி (ஏறத்தாழ 84 சதவீதம்) மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்டது. இது வர்த்தக வங்கிகள் அவற்றின் திரவத் தன்மை தேவையை ஈடுசெய்வதற்கென நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியின் கீழ் திரவத் தன்மையை பெற்றுக் கொள்வதற்கு அவற்றின் சொத்துப்பட்டியலிலுள்ள அரச பிணையங்களைப் பயன்படுத்தியமையினால் அதிகரித்த மத்திய வங்கியின் அரச பிணையங்களின் உடைமையில் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது.

அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் 1999இன் அதிகுறைந்த அதிகரிப்பான ரூ.3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் ரூ.25 பில்லியனால் (193 சதவீதம்) உயர்வடைந்தது. மூன்று முக்கிய அரச நிறுவனங்களான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சபை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், ஆகியன கொடுகடன் அதிகரிப்பின் பெரும்பங்கிற்கு (97 சதவீதம்) வகைகூறின. எண்ணெய் மற்றும் கோதுமையின் பன்னாட்டு விலைகள் முனைப்பாக அதிகரித்தமை, இவற்றின் உள்நாட்டு விலைகளிலான சீராக்கங்கள் காலதாமதமாகவும் தேவையானளவிற்கு குறைந்த அளவிலும் மேற்கொள்ளப்பட்டமை, போதிய மழைவீழ்ச்சி இன்மையின் காரணமாக அதிகரித்தளவில் வெப்பமின்வலு பயன்படுத்தப்பட்டமை என்பன அரச கூட்டுத்தாபனங்களது வங்கிக் கடன்பாடுகளை அதிகரிக்கச் செய்தன.

தனியார் துறைக்கான கொடுகடன் 2000ஆம் ஆண்டில் 12 சதவீதத்தினால் அல்லது ரூ.38 பில்லியனால் அதிகரித்தன. பொருளாதார மீட்சி அதிகரித்ததற்கு மத்தியிலும் தனியார் துறையின் கொடுகடன் கேள்வி மிதமாக அமைந்தமைக்கு கம்பனித்துறையின் இலாபங்கள் அதிகரித்தளவில் கம்பனிகளினால் பகிரப்படாமல் வைத்திருக்கப்பட்டமையும் வர்த்தகப் பத்திரம் போன்ற புதிய கடன்பாட்டு கருவிகளை நோக்கி கம்பனிகள் நகர்ந்தமையுமே காரணங்களாகக் கொள்ளப்படலாம். வர்த்தக வங்கிகளுடன் அபிவிருத்தி வங்கிகளும் நிதிக் கம்பனிகளும் தனியார்துறைக்கு நிதியியல் வசதிகளை வழங்கின. நிதியியல் முறைமையினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் வசதிகள் 2000ஆம் ஆண்டில் ரூ.47.7 பில்லியனால் அல்லது 11.1 சதவீதத்தினால் அதிகரித்தன.

## வட்டி வீதங்கள்

2000ஆம் ஆண்டில் குறிப்பாக பின்னரையாண்டுப் பகுதியில் வட்டி அமைப்பில் பொதுவான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இது அதிகரித்த அரசதுறைக்கடன்பாடுகள், பாரிய சென்மதி நிலுவை பற்றாக்குறையின் விளைவாக திரவத் தன்மை குறைவடைந்தமை மற்றும் இறுக்கமாக்கப்பட்ட நாணயக் கொள்கை அமைப்பு என்பனவற்றின் விளைவால் ஏற்பட்டதாகும். பணவீக்க வீதம் பின்னரையாண்டுப் பகுதியில் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காட்டியதற்கு மத்தியிலும் பெயரளவு வட்டிவீதங்களின் அதிகரிப்பு உயர்வடைந்து காணப்பட்டமையினால் உண்மை வட்டிவீதங்கள் அதிகரித்தன. எனினும் நடுத்தர நீண்டகால வீதங்களைவிட குறுங்கால வீதங்கள் பாரியளவில் அதிகரித்ததனால் விளைவு வளைகோடு கிடையாக அமைந்து அதிகரித்த வட்டிவீதங்கள் ஒரு குறுங்கால நிகழ்வு என்ற சந்தை தோற்றப்பாட்டினை பிரதிபலித்தது.

வங்கிகளுக்கிடையேயான அழைப்புச் சந்தை வீதங்கள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களிலேற்பட்ட முனைப்பான மாற்றங்கள் மற்றும் வெளிநாட்டு செலாவணி சந்தையில் இடம்பெற்ற நிகழ்வுகள் என்பவற்றை பிரதிபலித்து குறிப்பிடப்பட்ட தளம்பல்களை வெளிக்காட்டின. வட்டிவீதங்கள் அதிகரித்ததைத்தொடர்ந்து வர்த்தக வங்கிகள் அவற்றின் வைப்பு வீதங்களையும், கடன் வழங்கல் வீதங்களையும் அதிகரித்தன. எனினும் கடன் வழங்கல் வீதங்களின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் அவற்றின் வைப்பு வீதங்கள் மெதுவாக சீராக்கம் செய்யப்பட்டமையினால் வட்டிவீச்சை மேலும் அதிகரித்தது.

பொருளாதாரம் மீட்சியடைந்து கம்பனித் துறைச்செயலாற்றம் மேம்பட்டதற்கு மத்தியிலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேறிய விற்பனையாளர்களாக அமைந்து காணப்பட்டமையினால் கொழும்புப் பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகளும் மொத்தப் புரள்வும் 2000ஆம் ஆண்டில் தாழ்வடைந்து

காணப்பட்டன. அனைத்துப் பங்குவிலைச்சுட்டெண் 22 சதவீதத்தினாலும், சந்தை மூலதனமாக்கல் 21 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. தாழ்வடைந்த சந்தை நிலைமையின் காரணமாக பெரும்பாலான கம்பனிகள் வழங்கலைப் பின்போட்டமையினால் ஒருசில புதிய பங்கு வழங்கல்கள் மட்டுமே 2000ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

## 1.10 2001ஆம் ஆண்டுக்கான பொரளாதாரத் தோற்றப்பாடும் நடுத்தரகால வாய்ப்புக்களும்

### 2001ஆம் ஆண்டுக்கான உலகளாவிய வாய்ப்புக்கள்

உலகளாவிய பொருளாதாரமானது, 2000ஆம் ஆண்டில் காணப்பட்ட 4.8 சதவீத உயர் வளர்ச்சியின் பின், 2001ஆம் ஆண்டில் ஓரளவுக்கு மெதுவான போக்கினையடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலைமைக்கு, 2000ஆம் ஆண்டில் காணப்பட்ட எண்ணெயின் உயர்விலைகளின் தாக்கம், முக்கியமான பன்னாட்டுச் சந்தைகளில் பங்குவிலைகளில் ஏற்பட்ட பெருமளவான வீழ்ச்சி மற்றும், முக்கியமான பொருளாதாரங்களில் காணப்பட்ட அதிகரித்த பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காகத் தொடர்ச்சியாகக் கைக்கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக்கொள்கைகளின் விளைவாக 2000ஆம் ஆண்டில் நிலவிய உயர் வட்டி வீதங்களின் காலங்கடந்த தாக்கம் என்பனவே முக்கிய காரணங்களாகும். 2001ஆம் ஆண்டுக்கான 3.2 சதவீத மதிப்பிடப்பட்ட உலக வெளியீட்டு வளர்ச்சி, முக்கியமான கைத்தொழிற் பொருளாதாரங்களிலான சமமின்மையில் சீராக்கமும் மசகெண்ணெயின் பன்னாட்டு விலைகளில் வீழ்ச்சியொன்றும் ஏற்படக்கூடுமெனக் கருதுகிறது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான பொருளாதார வளர்ச்சி, 2000ஆம் ஆண்டின் 4.1 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 1.9 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 5.8 சதவீதத்திலிருந்து 5.0 சதவீதத்துக்கு வீழ்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் முக்கியமான ஏற்றுமதி இலக்காகக் காணப்படும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலான வளர்ச்சி, 2000ஆம் ஆண்டின் 5.0 சதவீதத்திலிருந்து 2001இல் 1.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான ஏனைய இரு முக்கிய இலக்குகளாக காணப்படும் யூரோ பிரதேசம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியன முறையே 2.4 சதவீத, 2.4 சதவீத, 2.6 சதவீத மதிப்பிடப்பட்ட வளர்ச்சி வீதங்களுடனான அதே போன்ற ஆகக் குறைந்த வளர்ச்சியைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2000ஆம் ஆண்டில் பெருமளவான மீட்சியொன்றைப் பிரதிபலித்த உலக வர்த்தகம் 2001ஆம் ஆண்டில் 6.7 சதவீத விரிவொன்றுடன் ஊக்கமளிக்கக் கூடியதொன்றாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மசகெண்ணெயின் பன்னாட்டு விலைகளில் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சியினால் வர்த்தகமாற்று விகிதமானது 0.5 சதவீதங் கொண்ட அதிகரிப்புடன் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களுக்குச் சாதகமான வகையில் நகருமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், எரிபொருளை ஏற்றுமதி செய்யாத, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 2001ஆம் ஆண்டில் வர்த்தக மாற்று விகிதத்தில் 0.9 சதவீதத்தால் ஏற்படும் அதிகரிப்பினால் நன்மையடையும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நடைமுறைக்கணக்கு நிலுவைகள், இறக்குமதிகளில் காணப்பட்ட ஆகக் கூடிய வளர்ச்சியின் விளைவாக ஐ.அ.டொலர் 30 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றுக்கு மோசமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மசகெண்ணெய் விலைகளில் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சியுடன் பணவீக்க வீதம் இவ்வாண்டில் மிதமானதாக அமையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான நுகர்வோர் விலைப் பணவீக்கம், 2000 ஆம் ஆண்டின் 2.3 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 2.1 சதவீதமாக வீழ்ச்சியடையுமென மதிப்பிடப்பட்ட வேளையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இது 6.1 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதத்துக்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமான கைத்தொழிற் பொருளாதாரங்கள், வட்டி வீதங்களைப் படிப்படியாகக் குறைப்பதன் மூலம் தமது நாணயக் கொள்கையைத் தளர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் குறிப்பாக தோற்றம் பெறும் சந்தைப் பொருளாதாரங்கள், ஆகக் குறைந்த வட்டி வீதச் சூழலொன்றில் அதிகரித்த நிதியியல் பாய்ச்சல்களிலிருந்து நன்மையைப் பெறும். பொருளாதார நடவடிக்கைகளில் மெதுவான போக்குக் காணப்படுவதற்கான அறிகுறிகள் அதிகரித்தமை, ஆகக் குறைந்த வட்டி வீதங்கள் காணப்படக்கூடிய வாய்ப்புக்கள் தளர்வடைந்த ஐக்கிய அமெரிக்கப் பங்குச் சந்தை மற்றும், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நடைமுறைக் கணக்குக் குறையின் அளவு பற்றிய அக்கறை ஆகியவற்றின் காரணமாக உலகளாவிய நிதியியல் சந்தைகளில் ஐ.அ.டொலரானது, ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக அழுத்தமொன்றுக்குட்பட நேரிடலாம்.

முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் பங்குச்சந்தைகளிலான ஒழுங்கு முறைப்படுத்தப்

அட்டவணை 1.7
உலகப் பொருளாதார தோற்றப்பாட்டு எறிவுகளின் பொதுநோக்கு
(ஆண்டு சதவீத மாற்றம்)

| | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 |
| உலக வெளியீடு | 3.5 | 4.8 | 3.2 | 3.9 |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 3.4 | 4.1 | 1.9 | 2.7 |
| ஐக்கிய அமெரிக்கா | 4.2 | 5.0 | 1.5 | 2.5 |
| சேர்மனி | 1.6 | 3.0 | 1.9 | 2.6 |
| ஐக்கிய இராச்சியம் | 2.3 | 3.0 | 2.6 | 2.8 |
| யப்பான் | 0.8 | 1.7 | 0.6 | 1.5 |
| அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் | 3.8 | 5.8 | 5.0 | 5.6 |
| அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா | 6.1 | 6.9 | 5.9 | 6.3 |
| உலக வர்த்தக அளவு | | | | |
| (பொருட்கள் மற்றும் பணிகள்) | 5.3 | 12.4 | 6.7 | 6.5 |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 7.9 | 11.4 | 6.7 | 6.5 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம் | 1.0 | 16.6 | 8.8 | 7.9 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 5.0 | 11.4 | 6.2 | 6.2 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம | 4.1 | 15.7 | 7.1 | 7.0 |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 1.4 | 2.3 | 2.1 | 1.8 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம் | 6.7 | 6.1 | 5.7 | 4.8 |
| ஐ.அ.டொலர் வைப்புக்கள் மீது ஆறுமாத இ.வ.கி.வ.வீதம் | 5.5 | 6.7 | 4.5 | 4.3 |

மூலம்: உலகப் பொருளாதார தோற்றப்பாடு
ப.நா.நிதியம்

படுத்தப்பட்ட திருத்தங்களுடன், சந்தையின் உறுதிப்பாடு மீண்டும் ஏற்படுத்தப்பட்டமையினால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான தனியார் வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 36 பில்லியனிலிருந்து 2001இல் ஐ.அ.டொலர் 116 பில்லியனுக்கு கணிசமான அளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியாவினது, தனியார் மூலதனப்பாய்ச்சல்களில், 2001ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 22 பிலலியன் கொண்ட தேறிய வெளிப் பாய்ச்சலுக்கெதிராக ஐ.அ.டொலர் 11 பில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களுடன் நேர்மாறான தன்மையொன்றையும் எதிர்பார்க்க முடியும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மூலதன மற்றும் நிதியியல் பாய்ச்சல்களிலேற்பட்ட முன்னேற்றம், நடைமுறைக்கணக்குகளில் காணப்பட்ட மோசமான நிலைமையினை எதிரீடு செய்வதற்கு உதவியாக அமையும்.

எவ்வாறாயினும், 2001ஆம் ஆண்டுக்கான உலகளாவிய தோற்றப்பாடு குறிப்பிடத்தக்களவில் இடர்களையும் நிச்சயமற்ற தன்மைகளையும் எதிர்நோக்குகிறது. 2001ஆம் ஆண்டுக்கான உலக பொருளாதாரத் தோற்றப்பாடு, கைத்தொழிற் பொருளாதாரங்களிலும் மற்றும் பங்கு மற்றும் செலாவணிச் சந்தைகளிலும் காணப்படும் வெளியீட்டு வளர்ச்சி மாதிரிகளிலான சமமின்மைகளின் சீரானதும், ஒழுங்கு முறையிலமைந்ததுமான சீராக்கத்திலேயே பெருமளவுக்குத் தங்கியுள்ளது. மசகெண்ணெய் விலைகளில் உயர்ச்சியொன்று ஏற்படக் கூடுமென்ற அச்சுறுத்தலானது, உலகளாவிய பொருளாதாரம் அடங்கிலுமான உறுதிப்பாடு தொடர்பில் தாக்கம் செலுத்தக்கூடிய முக்கிய விடயமாகக் காணப்படுகிறது. அத்தகைய எந்த அதிகரிப்பும் பாதகமான தாக்கங்களை, குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீது கொண்டிருக்கும். வளர்ச்சிக்கான எறிவுகளும் ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரம் இவ்வாண்டில் எவ்வாறு காணப்படுகிறதோ அதிலேயே பெருமளவில் தங்கியிருக்கும். எறிவு செய்யப்பட்டுள்ள மிதமான, மெதுவான தன்மைக்கெதிராக ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரம் பற்றிய பாதுகாப்புக் கொள்கையானது இலங்கையை உள்ளடக்கிய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீது, அவற்றின் ஏற்றுமதிகளுக்கான கேள்வி குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடையக் கூடுமென்பதால் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துவதாயிருக்கும்.

## 2001ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதாரத் தோற்றப்பாடு

இப் பின்னணியில், குறையின் வளர்ச்சி மற்றும் ஓரளவு உயர்வான பணவீக்கம், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை குறைவடையச் செய்து, மொத்த மிகையொன்றைப் பதிவு செய்வதன் மூலம் சென்மதி

நிலுவையில் ஏற்படும் முன்னேற்றங்களுடனான பாரிய பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு, அரசதுறைக் கொடுகடன் கேள்வியிலான குறைப்பு மற்றும் பணவீக்கமல்லா நாணய விரிவு ஆகியவற்றை 2001ஆம் ஆண்டுக்கான தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள எறிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. எனினும் 2001ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள இறை இலக்குகளை எய்துவதும் அறிவிக்கப்பட்ட பொருளாதார சீரமைப்புக்கள் மற்றும் சீராக்கங்கள் என்பவற்றின் நடைமுறைப்படுத்தலும் ஆகியன பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்காக எறிவு செய்யப்பட்டுள்ள மேம்பாடுகளை எய்துவதை உறுதிப்படுத்துவதில் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கைப் பொருளாதாரமானது, 2000ஆம் ஆண்டின் 6 சதவீதத்துடனொப்பிடுகையில் 2001இல் ஏறக்குறைய 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. பாதகமான வானிலை நிலைமைகளினால் வேளாண்மையில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சி, 2000ஆம் ஆண்டிலான உயர்ந்த இயலளவு வெளியீட்டின் பின்னர் தயாரிப்பிலேற்பட்ட மெதுவான வளர்ச்சி வர்த்தகம் மற்றும் ஏனைய பணிகளிலான வளர்ச்சி வீதத்தில் காணப்பட்ட இணைந்த குறைப்பு ஆகியன குறைந்த வளர்ச்சிக்கான ஏதுக் காரணிகளாக விளங்குமென எதிர்பார்க்கப் படுகிறது. தேயிலை உற்பத்தி, 2001ஆம் ஆண்டிலும் தனது வளர்ச்சி உந்து விசையைத் தொடருமென எறிவு செய்யப்பட்டவேளையில் இறப்பர் உற்பத்தி 2000ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வீழ்ச்சியிலிருந்து மீட்சி பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் 2000/2001 பெரும்போக நெற்செய்கை மீதான பாதகமான வானிலை நிலைமைகளின் தாக்கம் மற்றும் தெங்கு உற்பத்தியில் அதன் 2000ஆம் ஆண்டுக்கான உச்சநிலைக்குப் பின்பான எறிவு செய்யப்பட்ட வீழ்ச்சி ஆகியன 2001ஆம் ஆண்டிலான மொத்த வேளாண்மை வளர்ச்சியை மிதமாக்கும். உலகப் பொருளாதார வளர்ச்சியில் எறிவு செய்யப்பட்டுள்ள மெதுவான போக்கின் தேறிய விளைவு மற்றும் அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகள் அண்மையில் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இலங்கை ஆடை ஏற்றுமதிகளுக்கான சந்தை வாய்ப்பின் அதிகரிப்பு என்பன 2001ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதித் தயாரிப்புத்துறையிலான மிதமான வளர்ச்சி வாய்ப்பொன்றை எடுத்துக்காட்டுகின்றன. அதே வேளையில் இறக்குமதிகள் மீதான புதிய மிகைக் கட்டணம் மற்றும் தேய்வடைந்த செலாவணி வீதம் ஆகியன இறக்குமதிகளுக்கான தேவையை மெதுவாக்கும். வேளாண்மை, தயாரிப்பு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவற்றின் வளர்ச்சி வீதங்களில் காணப்பட்ட மெதுவான போக்கு, அதனுடன் தொடர்புடைய ஏனைய பணிகளில் மிதமான வளர்ச்சியை ஏற்படுத்தும் எனினும் தொலைத் தொடர்பூட்டல், வலு மற்றும் கட்டுமானத்துறைகளில் வளர்ச்சிக்கான உந்துவிசை, எதிர்பார்க்கப்பட்ட புதிய முதலீட்டின் உதவியுடன் தொடர்ச்சியாக காணப்படுமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில், சுற்றுலாத்துறையில் மீட்சியொன்று ஏற்படுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.

அதிகரித்த இறக்குமதி விலைகள் மற்றும், 2000ஆம் ஆண்டில் நிருவகிக்கப்பட்ட விலைகளின் அதிகரிப்புக்களில் காணப்பட்ட முழுமையான தாக்கம் போன்ற செலவினால் உந்தப்பட்ட காரணிகளினால் 2001ஆம் ஆண்டில் பணவீக்கம் அதிகளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டின் தொடக்க மாதங்களில் பணவீக்கமானது அதிகரித்து ஆகக் கூடிய மட்டத்தில் காணப்படும் போலத் தோன்றுகிறது. எவ்வாறாயினும் விலைகள் 2001ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உறுதிப்பாட்டினையடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி ஆண்டுக்கான சராசரி பணவீக்கம் 2000ஆம் ஆண்டின் 6.2 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 9.5 சதவீதத்துக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

குறுங்கால பொருளாதார உறுதிப்பாட்டு வழிமுறைகள் மற்றும் இறைவிடயங்களில் காணப்படும் அமைப்பு ரீதியான குறைபாடுகள் சிலவற்றை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான வழிமுறைகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கி நடுத்தர கால இறைச் சீராக்க வழிமுறைக்கு மீள்வதற்கான வகையில் 2001க்கான வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசிறை நிலைமையானது அரசதுறையில் குறைச் சேமிப்பை குறைத்தல், (அதாவது அரசிறையின் மேலதிகமான நடைமுறைச் செலவு) பொதுவான அரசிறைப்பற்றாக் குறையைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உள்நாட்டுச் சந்தையிலிருந்தான கடன்பாடுகளைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசிறைப் பக்கத்தில் நேரடி மற்றும் மறைமுகவரி வீதங்களை அதிகரிக்கும் புதிய அரசிறை வழிமுறைகள் மற்றும் வரி நிருவாகத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறைகள் ஆகியன எடுத்துரைப்புச் செய்யப்பட்டன. உற்பத்தியாக்கமற்ற செலவிலான குறைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை விரைவுபடுத்துதல் அரச செலவீட்டை ஒழுங்கு முறைப்படுத்துதல் ஆகியனவே செலவுப் பக்கத்திலான முக்கிய விடயமாகக் காணப்படும். வெளிநாட்டு நாணய வருவாய்களின் பண அனுப்பல்களை ஊக்குவிக்கவும், அணியும் ஆடை மற்றும் மென் பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை அதிகரிக்கச் செய்யவுமென எடுத்துரைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட

வழிமுறைகளுக்குப் புறம்பாக அடிப்படைத் தோற்றப்பாடு ஒன்றில் இந்த வழிமுறைகள் வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எறிவு செய்யப்பட்ட 11.4 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.9 சதவீதப் புள்ளிகளால் குறைவடையச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி 2001ஆம் ஆண்டுக்கான அரசின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2000ஆம் ஆண்டின் 3.4 சதவீதக் குறையிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. நடைமுறைக் கணக்கிலான இம் முன்னேற்றத்தை அரசிறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை 18.3 சதவீதத்துக்கு உயர்த்துதல் மற்றும் நடைமுறைச் செலவு/ மொத்த உளநாட்டு உற்பத்தி விகிதத்தை 2001இல் 19.5 சதவீதத்துக்கு குறைத்தல் ஆகிய இரட்டை உபாயத்தினால் அடைவதற்குத் திட்டமிட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.4 சதவீதத்திலான அதிகரித்த அரச முதலீட்டுடன் 2000ஆம் ஆண்டின் 6.4 சதவீதத்துடனொப்பிடுகையில் பொதுவான வரவு செலவுத் திட்டக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.5 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் மற்றும் தனியார் மயப்படுத்தல் பெறுகைகளுக்காகச் சீராக்கஞ்செய்யப்பட்ட பின்பு எறிவு செய்யப்பட்ட உள்நாட்டு நிதியிடல் தேவை, 2000ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியினது 9.4 சதவீத (ரூ.118.5 பில்லியன்) பெறப்பட்ட தொகையினைவிட குறிப்பிடத்தக்களவில் குறைவானதாக 2001ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.8 சதவீதமாக (ரூ.69 பில்லியன்) விளங்குமென எறிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும், சில அரசிறை இலக்குகளை அடைவதில் ஏற்படக்கூடிய மறுபக்க இடர்நேர்வுகள் குறிப்பாக மீண்டெழும் செலவைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தனியார் மயப்படுத்தல் பெறுகைகளைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகியன குறைவாக மதிப்பிடக் கூடியவை அல்ல. எதிர்பார்க்கப்பட்ட அரசிறை இலக்குகளை எய்துவதானது வட்டி வீதங்களின் மீதான அழுத்தத்தைக் குறைக்கின்ற வேளையில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கும் தனியார்துறை முதலீட்டுக்கென அதிகளவு மூலவளங்களை விடுவிப்பதற்கும் அத்தியாவசியமான தாகும். வரவு செலவுத்திட்ட வெளிப்பாட்டில், எதிர்பாராத எந்த மாற்றத்திலிருந்தும் விலகியிருக்கக் கூடிய தன்மையானது மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுகின்றமையினால், எத்தகைய அரசிறைப் பற்றாக்குறைக்கோ அல்லது செலவு அதிகரிப்புக்கோ உடனடியாக திருத்த வழிமுறைகளை மேற்கொள்வதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும்.

2001ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையில் ஐ.அ.டொலர் 463 மில்லியன் கொண்ட குறைந்த நடைமுறைக் கணக்குக் குறையுடனும் ஐ.அ.டொலர் 140 மில்லியன் கொண்ட பொதுவான மிகையுடனுமான குறிப்பிடத்தக்க நேர்மாற்றமொன்று எதிர்பார்க்கப் படுகிறது. ஏற்றுமதிகளில் காணப்பட்ட வளர்ச்சிக்கான உந்து விசையின் தொடர்ச்சியானது 2001ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உயர்ந்தளவு வீதத்தை விட மெதுவான வேகத்தில் காணப்பட்டபோதிலும் பெற்றோலிய உற்பத்திகளுக்கான குறைந்த பன்னாட்டு விலைகள், பாதுகாப்பு இறக்குமதிகள் மீதான குறைக்கப்பட்ட செலவு, சொத்துப்பட்டியல் முதலீடுகளினூடான தனியார் மாற்றல் உட்பாய்ச்சல்களினதும் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களினதும் இணைந்த அதிகரிப்பு, வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பு அரசின் வெளிநாட்டு உதவிப்பயன்பாடு, ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட அரசின் எதிர்பார்க்கப்பட்ட நடுத்தரகால வெளிநாட்டுக் கடன்பாடு மற்றும் தனியார் மயப்படுத்தல் பெறுகைகளின் பேரிலான ஐ.அ.டொலர் 275 மில்லியன் கொண்ட எறிவு செய்யப்பட்ட உட்பாய்ச்சல்கள் ஆகியன இம்மிகையை அடைவதற்குத் ஆதாரமாகக் காணப்படும் காரணிகளாகும். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2000ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினது 6.4 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 2.9 சதவீதத்துக்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப் படுவதுடன் வெளிநாட்டுத்துறையின் சமமின்மையையும் குறிப்பிடத்தக்களவில் குறைக்கும். மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகள் ஆகியன 2001இல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் நாட்டின் இறக்குமதி இயலளவினையும் அதிகரிக்கும்.

மேலே கூறப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளின் அடிப்படையில் நாணய விரிவாக்கமானது 2001இல் கிட்டத்தட்ட 13 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்படுமென இலக்கிடப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட அரசிறை அதிகரிப்புக்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கொடுகடன் கேள்வியிலேற்பட்ட குறைப்பு ஆகியன வட்டிவீதங்களின் மீது அழுத்தங்களை ஏற்படுத்தாமலும், பணவீக்கத்துக்குப் பங்களிப்புச் செய்யாமலும் முறைசார்ந்த தனியார்துறைக்கு ஆகக்கூடியகொடுகடன் விரிவாக்கத்துக்கான வசதியை (ஏறக்குறைய 19

சதவீதத்தால்) 2001இல் வழங்க அனுமதிக்கும். மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பானது சந்தைத் திரவத்தன்மையை அதிகரிக்கும் வேளையில் 2000ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த அதன் அரச பத்திரங்களின் உடைமைகளின் ஒரு பகுதியை குறைப்பதை மத்திய வங்கிக்கு இயலச் செய்தது. அரச கூட்டுத்தாபனங்களின் புதிய கொடுகடன் தேவைப்பாடுகள் 2001இல் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உண்மையில், இவற்றுட்சில கூட்டுத்தாபனங்கள், நிருவாகிக்கப்பட்ட விலைகளில் ஏறப்பட்ட அதிகரிப்பினால் தமது தற்போதைய வங்கிக் கடன்களில் ஒரு பகுதியை திருப்பிச் செலுத்தக் கூடியதாயிருக்கலாம்.

2001 சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய செலாவணிவீத முறையின் கீழான நாணய முக்கியத்துவமானது 2001ஆம் ஆண்டில் அறைகூவலுடனான விடயமொன்றாகக் காணப்படும். அரசிறைச் சீராக்கங்கள் பயன்தரக் கூடியதாக அமையும் வரையிலும் பணவீக்க அழுத்தங்கள் வீழ்ச்சியடைந்து ஒதுக்குகள் அதிகரிக்கும் வரையிலும் 2001ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலாவது நாணயக் கொள்கை இறுக்கமாக இருத்தல் வேண்டும். நிருவகிக்கப்பட்ட விலையதிகரிப்புக்கள் மற்றும் செலாவணி வீதப் பெறுமானத்தேய்வு ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட செலவினால் உந்தப்பட்ட பணவீக்கமானது, கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்கமாக மாறுவதைத் தடுப்பதற்கு இது அவசியமாகும். இதன் பின்பு சந்தையிலான அதிகரித்த ரூபாத் திரவத்தன்மை, குறைக்கப்பட்ட அரசதுறைக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகள், நிதியியல் சந்தைகளிலான அதிகரித்த உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரத்திலான குறைக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் ஆகியவற்றின் காரணமாக மத்திய வங்கியானது, கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தமொன்று ஏற்படக்கூடிய இடர்நேர்வினை உருவாக்காது தனது வட்டிவீதங்களைப் படிப்படியாக (மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள்) இவ்வாண்டில் குறைக்கக் கூடியதாகவிருக்கும்.

எனினும், 2001ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட அரசிறை இலக்குகள் அடையப்படுகின்றமை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் நிதியியல் நிலைமையில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்கள் ஆகியன இந் நாணய இலக்குகள் அடையப்படுகின்றமையையும், 2001ஆம் ஆண்டில் வட்டி வீதங்களிலான குறைப்பையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நிபந்தனைகளாகக் காணப்படுகின்றன. திட்டமிடப்பட்ட அரசதுறைக் கடன்பாட்டுக் குறைப்புக்களை அடைவதிலிருந்து விலகிச் செல்லுதலானது விரும்பத்தக்க இந்நாணய இலக்குகளை அடைவதையும் வட்டி வீதங்களிலான குறைப்பை ஏற்படுத்துவதையும் கடினமாக்குவது மட்டுமன்றி செலாவணிவீதத்தின் மீது அழுத்தமொன்றையும் ஏற்படுத்தும். இவ்வாறு புதிய செலாவணி வீத முறையின் கீழ் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை அடைவதில் இறைக் கொள்கையானது முக்கிய பங்கை வகிக்கிறது.

## இலங்கைக்கான நடுத்தரகால பொருளாதார வாய்ப்புக்கள்

நடுத்தர காலத்துக்காக எறிவு செய்யப்பட்ட இலங்கையின் வளர்ச்சி இரண்டு பரிமாணங்களின் கீழ் கவனத்துக்கெடுக்கப்படலாம். ஒன்று வலுவான கொள்கைச் சீராக்கங்களையும், சீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதை விரைவுபடுத்துவதாயும் மற்றையது மிதமான கொள்கைச் சீராக்கங்களாகவும் மற்றும் சீரமைப்புக்களின் மிகவும் மெதுவான நடைமுறைப்படுத்தலாகவும் காணப்படுகின்றன. வலுவான சீராக்கங்கள் மற்றும் விரைவான சீரமைப்புக்களுடனான பரிமாணமானது, தொடர்ச்சியான அரசிறை உறுதிப்பாடு , அரசதொழில் முயற்சிச் சீரமைப்புக்கள், சிவில் பணியின் சீரமைப்புக்கள், தொழிற்சந்தைச் சீரமைப்புக்கள் ஆகியவற்றையும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான அரச செலவிலேற்பட்ட கணிசமான அதிகரிப்பையும் உள்ளடக்கும். முன்மதியுடைய அரசிறை மற்றும் நாணயக் கொள்கையின் உதவியுடன் புதிய செலாவணிவீத முறைமையானது வெளிநாட்டுத்துறையின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தி நாட்டின் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும். பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதார தோற்றப்பாட்டு எறிவுகளின் கீழான நடுத்தரகால எதிர்பார்ப்புக்கள், ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் மெதுவான போக்குக்கு மத்தியிலும் இலங்கையிலிருந்தான பங்காளி நாட்டு இறக்குமதிகளில் உறுதியான வளர்ச்சியொன்றை எடுத்துக்காட்டுகின்றன.

நடுத்தரகால கொள்கை வரைச்சட்டத்தின் கீழ், அரசினால் தெளிவாக்கப்பட்ட அரசிறை உறுதிப்பாடானது வட்டி வீதங்கள் மீதான அழுத்தங்களைக் குறைத்தல், தனியார்துறை முதலீட்டுக்காக அதிகளவு மூலவளங்களை விடுவித்தல் ஆகியவற்றின்மூலம் திருந்திய பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடொன்றுக்கு வழிவகுக்கும். குறைவான வட்டி வீதங்களுடனான வீழ்ச்சியடைந்து செல்லும் வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை அரசின் படுகடன் தீர்ப்பனவு சுமையைக் குறைத்து நடுத்தரகால அரசிறை உறுதிப்பாட்டினையும் உறுதிப்படுத்தும்.

## அட்டவணை 1.8
## நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| விடயம் | உண்மை | தற்காலிகம் | வலுவான சீராக்கங்கள் மற்றும் விரைவான | | | | | மிதமான சீராக்கங்கள் மற்றும் மெதுவான சீர்திருத்தங்களுடன் எறிவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 |
| நடுவாண்டுக் குடித்தொகை( மில்லியன்) | 19.0 | 19.4 | 19.4 | 19.6 | 19.8 | 20.0 | 20.2 | 19.4 | 19.6 | 19.8 | 20.0 | 20.2 |
| மொ.உ.உ. வளர்ச்சி (%) | 4.3 | 6.0 | 4.5 | 5.5 | 6.5 | 6.8 | 7.0 | 4.5 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 |
| முதலீடுகள் (மொ.உ.உ. %) | 27.3 | 28.0 | 27.6 | 28.9 | 31.0 | 31.5 | 32.0 | 26.0 | 24.8 | 24.4 | 24.4 | 24.4 |
| தனியார் | 20.8 | 21.4 | 20.2 | 20.9 | 22.5 | 23.5 | 24.0 | 19.9 | 18.4 | 17.9 | 17.9 | 17.9 |
| அரசு | 6.5 | 6.6 | 7.4 | 8.0 | 8.5 | 8.0 | 8.0 | 6.1 | 6.4 | 6.5 | 6.5 | 6.5 |
| உள்நாட்டு சேமிப்பு (மொ.உ.உ.வளர்ச்சி %) | 19.5 | 17.3 | 20.3 | 22.6 | 24.0 | 25.1 | 26.2 | 18.2 | 16.7 | 15.8 | 15.3 | 15.3 |
| தனியாள் | 20.5 | 20.7 | 21.4 | 22.0 | 22.5 | 22.6 | 22.7 | 22.9 | 19.8 | 17.9 | 16.7 | 16.4 |
| அரசு | -1.0 | -3.4 | -1.1 | 0.6 | 1.5 | 2.5 | 3.5 | -4.7 | -3.1 | -2.1 | -1.4 | -1.1 |
| கொ.நு.வி.சு.ஆண்டுச்சராசரி (%மாற்றம்) | 4.7 | 6.2 | 9.5 | 6.0 | 5.5 | 5.0 | 4.0 | 11.0 | 8.5 | 7.5 | 7.0 | 6.5 |
| ஏற்றுமதி அளவு (% மாற்றம்) | 5.0 | 18.3 | 6.8 | 8.8 | 8.5 | 8.8 | 9.2 | 6.7 | 6.6 | 6.5 | 6.3 | 6.2 |
| இறக்குமதி அளவு வானூர்திகள் நீங்கலாக(%மாற்றம்) | 2.8 | 15.4 | 5.0 | 7.1 | 7.6 | 8.7 | 9.1 | 4.6 | 8.9 | 7.6 | 7.5 | 6.3 |
| வெளிநாட்டு நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை (மொ.உ.உ %மாக) | -3.7 | -6.6 | -3.1 | -2.1 | -2.3 | -2.6 | -3.2 | -3.7 | -3.5 | -4.0 | -4.5 | -4.5 |
| அலுவல்சார் ஒதுக்குகள் (மாத்திற்குப் போதுமான இறக்குமதிகள்) | 3.0 | 1.5 | 2.5 | 3.1 | 3.5 | 3.6 | 3.7 | 1.2 | 0.9 | 0.8 | 0.7 | 0.5 |
| அரசின் அரசிறை (மொ.உ.உ % மாக) | 17.6 | 16.8 | 18.3 | 19.5 | 20.0 | 20.1 | 20.2 | 17.3 | 17.1 | 17.1 | 17.2 | 17.2 |
| அரசின் செலவினம் (மொ.உ.உ % மாக) | 25.1 | 26.7 | 26.8 | 26.0 | 25.5 | 25.1 | 24.7 | 27.8 | 26.6 | 25.6 | 25.3 | 25.1 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (மொ.உ.உ % மாக) | -7.5 | -9.9 | -8.5 | -6.5 | -5.5 | -5.0 | -4.5 | -10.5 | -9.5 | -8.5 | -8.1 | -7.9 |
| விரிந்த பணம் ( % மாற்றம்) | 13.4 | 12.9 | 13.0 | 10.8 | 11.3 | 11.1 | 10.7 | 16.0 | 13.9 | 12.9 | 12.4 | 11.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இடைவிடாத விலைச் சீராக்கங்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகளின் சீரமைப்பு ஆகியன, வரவு செலவுத் திட்டம் மீதான சுமையையும் அரச கூட்டுத்தாபனங்களின் கொடுகடனுக்கான கேள்வியையும் குறைப்பனவாகக் காணப்படுகின்றன. அமைப்புச்சீராக்க நடைமுறைப்படுத்தல் விரைவுபடுத்தப்படுவதைத் தொடர்ந்து உள்நாட்டு நிதியியல் மூலவளங்களுக்கான அரசதுறையின் குறைவான கேள்வியானது தனியார்துறை முதலீடு, நாட்டின் போட்டித் தன்மையை அதிகரித்தல் என்பனவற்றுக்குச் சாதகமான சூழல் ஒன்றை உருவாக்கி உள்ளார்ந்த வெளியீட்டை அதிகரிக்கச் செய்து நிலைத்து நிற்கக்கூடிய வகையில் தொழில் வாய்ப்பின்மை மற்றும் வறுமையினை மேலும் குறைவடையச் செய்யும்.

தனியார்துறைப் பொருளாதார நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள், ஏற்றுமதிகளை ஊக்குவித்து வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் கவர்வதுடன் சென்மதி நிலுவை நிலைமையையும் முன்னேற்றமடையச் செய்யும். திட்டமிடப்பட்ட அரசிறை உறுதிப்பாடும் சாதகமான சென்மதி நிலுவை நிலைமையொன்றினையடைதலும் முன்மதியுடைய நாணய முகாமைத்துவத்துக்கு வசதியளிப்பதுடன் நிலைத்து நிற்கக்கூடிய பணவீக்கத்தினை எய்துவதற்கும் நாட்டை இயலச் செய்யும். மக்கள் தமது பணவீக்க எதிர்பார்ப்புக்களை, கீழ் நோக்கி சீராக்கஞ் செய்து கொள்ளுவதற்கும் இது ஊக்கமளிக்கும்.

எனினும், மிதமான பேரண்டப் பொருளாதாரச் சீராக்கங்களுடனான மாற்றுப் பரிமாணமானது உயர்வான அரசிறைப் பற்றாக்குறை மற்றும் பொருளாதாரச் சீரமைப்புக்களிலான தாமதங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி, நம்பிக்கையற்ற நடுத்தரகாலப் பொருளாதார வாய்ப்புக்களை எடுத்துக்காட்டுகிறது. மிகக் குறைந்த பொருளாதாரச் சீரமைப்புக்களுடெனான அரசிறைப் பற்றாக்குறைகள் தொடர்ச்சியாக உயர்வாகக் காணப்பட்டமை, அதிகளவிலான அரசபடுகடன் சுமை, வட்டி வீதங்கள்மீதான அழுத்தம், மிகக்குறைந்த முதலீடு மற்றும் சேமிப்புக்கள், குறைந்த வளர்ச்சி, வெளிநாட்டுத்துறையின் அதிகரித்த சமமின்மைகள், உயர் பணவீக்கம் மற்றும் தொழில் வாய்ப்பின்மை மற்றும் வறுமை மட்டங்களிலான அதிகரிப்பு ஆகியவற்றை விளைவிக்கும். இப்பரிமாணத்தின் கீழ் உயர்ந்த பாதுகாப்புச் செலவுடனான உள்நாட்டு முரண்பாடு தொடருகின்றமையானது நடுத்தரகால பொருளாதார வாய்ப்புக்களை மேலும் மோசமாக்குவதுடன் பொருளாதார நெருக்கடியொன்றுக்குக் கூட இறுதியில் வழிவகுக்கக் கூடியதாயிருக்கும்.

மேலே காட்டப்பட்ட இரு பரிமாணங்களும் பேரண்டப் பொருளாதாரச் சீராக்கங்களை மேம்படுத்துவதற்கான அவசியத்தை எடுத்துக்காட்டிய வேளையில் மேலும் தாமதமின்றி பொருளாதாரச் சீராக்கங்களை விரைவுபடுத்த வேண்டிய தேவையையும் காட்டுகின்றன.

## 1.11 பொருளாதார விடயங்களும் கொள்கைகளும்

இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பலவற்றினால் பின்பற்றப்பட்ட உள்நோக்கியதும் கட்டுப்பாடுகள் சார்ந்ததுமான பொருளாதாரக் கொள்கைகளிலிருந்தும் உபாயங்களிலிருந்தும் நகர்ந்து சென்று வெளிநோக்கியதும் மிகத்தாராளமயமானதுமான பொருளாதாரக் கொள்கையொன்றுக்குக்கான வலியுறுத்தலுடன் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கையொன்றை ஏற்றுக் கொண்ட தெற்காசிய பிராந்தியத்தின் முதலாவது நாடாக இலங்கை மாறியது. இந்தக் கொள்கை மாற்றங்களின் பெறுபேறுகள் ஊக்கமளிக்கக் கூடியனவாக இருந்தன. அதன் தன்மை மற்றும் அவசியமான சீர்திருத்தங்களுக்காக நடைமுறைப்படுத்தலின் விரைவு என்பன தொடர்பான வேறுபாடுகள் காணப்பட்ட போதும் அன்றிலிருந்து இலங்கையின் அனைத்து முக்கிய அரசியல் கட்சிகளும் சந்தை சார்ந்த கொள்கைகளின் நன்மைகளை ஏற்றுக்கொண்டன. பொதுவான பொருளாதாரக் கொள்கை நெறிப்படுத்தலிலான மாற்றங்களிலிருந்து உருவாகும் உள்ளார்ந்த இடர் நேர்வுகளை இது பெருமளவில் குறைத்தது.

எனினும், பல பக்கங்களிலிலுமிருந்தான உறுதியான பொருளாதார பெறுபேறுகளின் மத்தியிலும் பலதரப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணிகளினால் சீர்திருத்தங்களின் நடைமுறைப் படுத்தலில் காணப்பட்ட மெதுவான முன்னேற்றத்தின் காரணமாக பல காலத்துக்குப் பின்னர் சீர்திருத்தங்களை தொடங்கிய ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய நாடுகள் அதனை முந்திச் சென்றுவிட்டதை இலங்கை உணர்ந்துள்ளது. இதன் விளைவாக மெதுவான வளர்ச்சி, போதுமான அளவு சேமிப்புக்களும் முதலீடுகளும் இன்மை, உறுதியான உயர் பணவீக்கம், தொழில் வாய்ப்பின்மையும் வறுமையும், போன்ற பாரிய பொருளாதார பிரச்சனைகளும் பாரிய பேரண்டப் பொருளாதார சமமின்மைகளும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து பாதித்துள்ளன. உண்மையில் அண்மைக் காலத்தில் இப்பிரச்சனைகளில் சில மிக மோசமடைந்துள்ளேதாடு கொள்கை வகுப்பாளர்களுக்கு பாரிய அறைகூவல்களையும் விடுத்துள்ளன. இவை நாட்டின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகக் காணப்பட்ட போதும் இவை நலிவுடைய செயலாற்றத்துக்கான காரணமாக இருக்கமுடியாது. எனவே மாற்று நிவாரண வழிமுறைகளை வடிவமைப்பது அறைகூவலொன்றாகக் காணப்படுகின்றது. சாக்குப்போக்குக் காரணங்களில் இழக்கப்பட்ட காலமானது வீணடிக்கப்பட்டதாக மாறி விரைந்து முன்னேற்றமடையும் வெளி உலகிலிருந்து நாடு ஒதுக்கப்படக்கூடிய இடர்நேர்வும் காணப்படுகின்றது.

மேலும் தாமதமின்றி சரிப்படுத்தும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான சீர்திருத்தங்கள் உறுதியாகவும் பயன்தருவகையிலும் நடைமுறைப் படுத்தப்பட்டாலன்றி நிலைமை மேலும் மோசமடையும் என்பதை முன்னர் கலந்துரையாடப்பட்ட 2001ஆம் ஆண்டுக்கான பொருளாதார தோற்றப்பாடும் நடுத்தர காலத்துக்கான பொருளாதார வாய்ப்புக்களும் குறித்துக்காட்டுகின்றன. தெளிவான தொலைநோக்கு, தீர்க்கமான குறிக்கோள்கள், குறித்துரைக்கப்பட்ட இலக்குகள், நிலைத்து நிற்கக்கூடிய அடிப்படையில் அனைத்தையும் உள்ளடக்கியதும் ஒன்றோடொன்று தொடர்புடையதுமான விடயங்களைக் கருத்திற் கொள்ளுவதற்கான கொள்கை உபாயங்கள் என்பனவற்றை வடிவமைப்பதற்கான தேவையை குறைவாக மட்டிட முடியாது. 1999 நவம்பரில் வெளியிடப்பட்ட "தொலைநோக்கு 21" இல் அதனது குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் கொள்கை உபாயங்கள் என்பவற்றை அரசாங்கம் தெளிவாக விளக்கியுள்ளது. அதிலும் அதற்கு முனனர் வெளியிடப்பட்ட ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டவாறு அரசாங்கத்தின் நடுத்தரகால பொருளாதாரக் கொள்கைக் குறிக்கோள்களாக காணப்படுவது யாதெனில் நிலைத்து நிற்கக்கூடிய நீண்டகால வெளிநாட்டு நிலைமையை (சென்மதி நிலுவை) உறுதி செய்து எளிதில் பாதிப்புக்கு உட்படுத்தக்கூடிய குழுவினருக்கு நியாயமான பாதுகாப்பை வழங்குகின்ற வேளையில் நட்புச்சந்தை கொள்கை வரைச் சட்டமொன்றினுள் நிலைத்து நிற்கக்கூடிய பணவீக்கமல்லா உயர்தரத்திலான பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதாகும். ஏனைய கொள்கைக் கூற்றுக்களைப் போன்றே தொலைநோக்கு 21உம் அண்மைக்கால வரவு செலவுத்திட்ட உரைகளும் - ஏற்கனவேயுள்ள தடைகளை அகற்றி உள்நாட்டு முதலீடுகளை விரைவுபடுத்துவதற்கும் சேமிப்புக்களை அதிகரிப்பதற்கும் சாதகமான சூழல் ஒன்றை உருவாக்கி ஆண்டுப் பொருளாதார வளர்ச்சியை 7-8 சதவீதத்துக்கு விரைவுபடுத்துவதற்கான தேவையை வலியுறுத்தியுள்ளன. அவசரமாக கவனம் செலுத்தவேண்டியதும் உடன்டியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுமான பல விடயங்கள் காணப்படுகின்றன.

மிக முக்கியமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மிக அமைதியான சூழல் ஒன்று தேவைப்படுகின்றது. நாட்டின் ஒரு

பாகத்தில் தற்போது இடம்பெற்றுவரும் ஆயுதப்போராட்டத்துக்கு தீர்வு காண்பதன் மூலமே இதனை எய்த முடியும். விவேகமற்ற இப்பிணக்கினைத் தொடருவது இந்நாட்டு மக்களுக்கு இனிமேலும் இயலாத காரியமாகக் காணப்படுகின்றமையினால் இப்பிரச்சனைக்கான அடிப்படைக் காரணத்தைக் கவனத்திற்கொள்வதன் மூலம் நிரந்தரத்தீர்வு ஒன்றுக்காக அனைத்து மக்களும் அனைத்து அரசியல் கட்சிகளும் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும். இந்தப் பிணக்கினால் பெருமளவு பாதிப்புக்கு உட்பட்டுள்ள சாதாரண மக்கள் ஒன்று சேர்ந்து வாழுவதற்கும் அமைதியாகவும் ஒற்றுமையுடனும் கருமமாற்றுவதற்கும் பெருமளவு விரும்புகின்றனர் என்பது தெளிவாகின்றது. அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் பக்கபலத்தை வழங்கியுள்ளது மட்டுமன்றி ஏற்பட்டுள்ள சேதத்தை சரிசெய்வதற்காக பெருமளவு உதவியினை வழங்குவதற்கும் முன்வந்துள்ளது. ஏனெனில் உள்நாட்டுப் பிணக்குகளை ஆயுதப்போராட்டமாக உருவெடுக்கச் செய்து நாடுகளின் பிரிவினைக்கு இடமளிக்கும் அரசாங்கங்களுக்கு உலக அரசாங்கங்களினதும் சர்வதேச சமூகத்தினதும் ஆதரவு கிடைக்காது. எனவே தமது விடயங்களை ஒழுங்காக வைத்திருக்கும் நாடுகளுக்கே அவர்கள் உதவி செய்ய முன்வருவதுடன் முதலீடுகளையும் மேற்கொள்வது இயற்கையாகும். சமாதானம், சட்டம், ஒழுங்கு என்பவற்றை மீள நிறுவுவதற்காக இணக்கமொன்றுக்கு வருவது இலங்கைத் தலைவர்களின் மிகப்பாரிய பொறுப்பாகும். உண்மையில் சமாதானம் மீள் நிறுவப்பட்டவுடன் பொருளாதாரப் பிரச்சனைகள் பல தீர்ந்துவிடும்.

அண்மையில் காணப்பட்ட மேம்பாடுகளுக்கு மத்தியிலும் இலங்கையின் அரசிறைப் பற்றாக்குறை மிக உயர்வாகவே இருந்துள்ளதோடு அது தனியார் முதலீட்டைத் தடை செய்து பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்து கடன்சுமையையும் அதிகரிக்கச் செய்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்கப் படுகடன் அதிஉயர் 97 சதவீதத்தில் காணப்படுகின்ற வேளையில் ஆண்டுக்கான படுகடன் மீள்செலுத்தல் அரசின் அரசிறையின் 34 சதவீதத்தையும் நடைமுறைச் செலவினத்தின் 32 சதவீதத்தினையும் எய்தியுள்ளது. விரிவடையும் அரசிறைப் பற்றாக்குறையை கட்டுப்படுத்துவதில் ஏற்படும் எத்தகைய தாமதமும் எதிர்காலத்தில் மிகச்சிரமமானதும் கடினமானதுமான சீராக்கங்களை வேண்டி நிற்கும். எனவே பலதரப்பட்ட அரசாங்கக் கொள்கைக் கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டவாறு நிலைத்து நிற்கக்கூடிய இடைக்கால வரைச்சட்டமொன்றினுள் அரசிறைப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதற்கு உறுதியான சரிப்படுத்தும் வழிமுறைகள் தற்பொழுது தேவைப்படுகின்றன. தேவைப்படும் அரசிறைச் சீராக்கமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4-5 சதவீதத்தில் உயர்வாகக் காணப்படுகின்றமையினால் வருவாய் அதிகரிப்பு மற்றும் செலவுக்கட்டுப்பாடு ஆகிய வழிமுறைகள் இரண்டுமே அத்தியாவசியமாகின்றன.

வருவாய் பக்கத்தில் பொருட்கள் பணிகள் வரி அதனது இலக்கை இன்னமும் எய்தாது இருப்பதனால் பொருட்கள் பணிகள் வரியில் தேவையான மாற்றங்களை உள்ளடக்குவது அவசியமாகும்.வரி முறையினை விரிவாக்கும் நோக்கில் இடையிணைப்பு வரித்தாக்கத்தினை அகற்றும் பொருட்டு 1998இல் பொருட்கள் பணிகள் வரியினால் புரழ்வு வரி மாற்றீடு செய்யப்பட்டது. வரி அறவீட்டு முறையினை ஒழுங்குபடுத்துவது அத்தியாவசியமான போதிலும் வரி அரசிறையில் கணிசமான குறைப்பானது எதிர் விளைவாகக் கொண்டதாக அமையும் பொருட்கள் பணிகள் வரியானது அதிகளவில் வருவாயை உருவாக்க வேண்டுமேயாயின் போதுமான அளவு பொருட்கள் பணிகளை உள்ளடக்கும் விதத்தில் ஏற்கனவேயுள்ள விலக்களிப்புக்கள் மேலும் குறைக்கப்படல் வேண்டும். அரசிறைக்கான தனியார் வருமானவரியின் பங்களிப்பு மிகக்குறைவானது மட்டுமல்ல (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1 சதவீதத்துக்கும் குறைவானது) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக படிப்படியாக குறைவடைந்துள்ளது. வருமானவரி முறையின் கீழ் வருவாய் உருவாக்கத்தை அதிகரிப்பதற்காக உள்ளடக்கத்தை விரிவாக்கும் வேளையில் வரி வீதங்களாக குறைப்பதன் மூலம் வரி இசைவினை மேம்படுத்துவதற்கு வரி நிருவாகத்தில் மேலதிக மேம்படுத்தல்கள் அவசியமாகின்றன. தாழ்ந்த வரி வீதங்கள் வரி இசைவினை ஊக்குவிக்கின்ற வேளையில் அரசதுறை ஊழியர்களினதும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளினதும் உள்ளடக்கதின் விரிவாக்கமானது வருமானவரி நோக்கத்துக்காக பலதரப்பட்ட குழுக்களாகப் பிரிக்கப்படும். ஏற்கனவேயுள்ள நடத்துமுறையில் காணப்படும் சமமின்மைகளை அகற்றிவிடும். அரசதுறையின் தற்போதைய சம்பளங்கள் வருமானவரியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட அடிமட்டத்திற்கும் கீழாகக் காணப்பட்டபோதும் உள்ளடக்கத்தின் விரிவாக்கமானது வேறு ஏதேனும் வரி செலுத்தவேண்டிய வருமானங்கள் காணப்படின் அதனை வெளிப்படுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தி நாட்டின் வரி இசைவுக் கலாச்சாரத்தை மேம்படுத்தி சமமற்ற நடத்துமுறையினை அகற்றிவிடும். இது தொடர்பாக தனியார் துறையினர் நீண்டகாலமாக எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர். இறக்குமதித்தீர்வைகளைப் பொறுத்தவரையில் பயன்தரு சராசரி தீர்வை வீதத்துடன் (15 சதவீதம்) ஒப்பிடுகையில் தாழந்த பயன்தரு சாராசரி தீர்வை வீதமானது

(4.5 சதவீதம்) தீர்வை விலக்களிப்புக்களை அகற்றுவதன் மூலமும் தீர்வை விலக்களிப்புக்களை குறைப்பதன் மூலமும் வருவாயை அதிகரிப்பதற்கான மேலதிக சாத்தியங்கள் காணப்படுவதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது[1]. இதே போன்று சுங்கத்திணைக்களத்துடன் முதலீட்டுச்சபை சுங்க முறையை ஒரு சீராக்கல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேளையில் தொழில் முயற்சிகளுக்கு செயல்திறன்மிக்க பணியினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். தேவையான வருவாய் மேம்பாட்டினை எய்துவதற்கு வரி நிருவாக முறையை மேலும் வலுப்படுத்துவது பயன்தரக் கூடியதாகும்.

செலவுப்பக்கத்தில் அதிகரித்துச்செல்லும் மீண்டெழும் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதிகரித்துச் செல்லும் அரசாங்க சம்பளப்பட்டியலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்க சேவையின் அளவையும் அதே போன்று சம்பள அதிகரிப்புக்களையும் கட்டுப்படுத்தவது அவசியமாகும். அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறிப்பாக சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நியாயப்படுத்த முடியாத பாரிய எண்ணிக்கையினைக் கொண்ட குடும்பங்களைக் கருத்திற் கொள்கையில் தகைமை பெறாத ஆட்களை நீக்குவதற்கான இலக்கிடலின் மேம்பாடும் அவர்களை வெளியேற்றுவதற்கான பயன்தரு பொறி முறையொன்றின் அறிமுகப்படுத்தலும் சேமிப்புக் களுக்கான உள்ளார்ந்த வாய்ப்புக்களை குறித்துக்காட்டுகின்றன. இது உதவி தேவைப்படா தோருக்கான உதவிக் கொடுப்பனவுகளைக் குறைவடையச் செய்வது மட்டுமன்றி பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகுவோருக்கான கொடுப்பனவில் மேம்பாடொன்றையும் அனுமதிக்கும். அரசதொழில் முயற்சிகளுக்கான மாற்றல்களைக் குறைப்பதற்கு அரச தொழில் முயற்சிகளில் வழக்கமாக கிரமமான முறையில் நியாயமான விலைச் சீராக்கங்களை மேற்கொள்ளுதல், கொள்வனவுகளை மேம்படுத்தல், விரயங்களைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியாக்கத்தை அதிகரித்தல் என்பன அவசியமாகின்றன. மீண்டெழும் செலவினத்தின் மிகப்பெரிய செலவு விடயமாக பொதுப்படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் மாறியுள்ளமையினால் அரச நிறுவனங்களிலும் திணைக்களங்களிலுமுள்ள தொழிற்படா காசு நிலுவைகளை ஆகக் குறைந்ததாக்குவதன் மூலம் காசு முகாமைத்துவத்தை மேம்படுத்தலும் முன்மதியுடைய பொதுப்படு முகாமைத்துவத்தின் ஊடாக அரசாங்க கடன்பாட்டுச் செலவுகளைக் குறைத்தலும் வட்டிச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கு அத்தியாவசியமாகின்றது. அதிகரித்துச் செல்லும் கடன்பாட்டுச் செலவானது நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3 -4 சதவீத மட்டத்தில் நிலைத்திருக்கக்கூடிய வகையில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினைக் குறைக்க வேண்டிய தேவையையும் எடுத்துக்காட்டுகின்றது.

தீர்வை அமைப்பு முறையை இலகுபடுத்திக் குறைத்ததன் மூலமும் தீர்வையற்ற தடைகளை அகற்றுவதன் மூலமும் வர்த்தக மற்றும் தீர்வைச் சீர்திருத்தங்களில் இலங்கை இப்பிரதேசத்தின் அயல்நாடுகளைவிட பெருமளவு முன் சென்றுள்ளது. எனினும் தீர்வைகளில் அவ்வப்போதைய மாற்றங்களும் தற்காலிகப் பிரச்சனைகள் தோன்றும்போது குறுகிய கால நிவாரணங்களை வழங்குவதற்கான தலையீடும் கொள்கைச் சூழலை பெருமளவில் எதிர்வு கூற இயலாததாக்குகின்றன. இத்தகைய பிரச்சனைகளுக்கு சந்தைப் பங்கேற்பாளர்கள் நிலைத்து நிற்கக்கூடிய நீண்டகால தீர்வுகளை அபிவிருத்தி செய்வதை இது ஊக்கமிழக்கச் செய்கின்றது. உதாரணமாக விலைகளைக் குறைப்பதற்கான தற்காலிக வழிமுறையாக 1999இல் அரிசி இறக்குமதியின் மீதான தீர்வை குறைக்கப்பட்டமையானது விவசாயிகள் ஆலைமிடுவோர் மற்றும் இருப்புக்களை வைத்திருப்போருக்கு முரண்பாடான சமிக்ஞைகளை வழங்கியது மட்டுமன்றி சந்தைத் திரிபுகளை உருவாக்கி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றின் ஊடாக பயன்தரா தலையீடுகளின் மேலதிக சுற்றுக்களையும் அத்தியாவசியப்படுத்தியது. பொதுவாக அரச தொழில் முயற்சிகள் இலாபமற்ற விலைகளில் கொள்வனவுகளை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுவதுடன் அதன் இறுதி விளைவாக அவற்றினது நிதி நிலைமை நலிவடைந்து இழப்புக்களைச் சரிசெய்வதற்காக அரசாங்க உதவிக் கொடுப்பனவுகளை அத்தியாவசியமாக்குவதுடன் இச்செலவினை வரி செலுத்துவோர் ஏற்க வேண்டியுமுள்ளது. இதேபோன்று உணவுக்காக பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகளின் மீது பிரயோகிக்கப்படும் தீர்வைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் தேங்காய் எண்ணெய் கைத்தொழிலில் கணிசமான திரிபுகளை ஏற்படுத்தியுள்ளதோடு தெங்கு பயிர்ச்செய்கையாளருக்கும் வர்த்தகர்களுக்கும் நிச்சயமற்ற சூழல் ஒன்றை உருவாக்கியுள்ளன. உருளைக் கிழங்கு இறக்குமதியிலும் இதே போன்றதொரு திரிபு காணப்பட்டுள்ளது. இத்தகைய திடீரென செய்யப்படும் கொள்கை மாற்றங்கள் சந்தைகளின் செயல்திறன்மிக்க தொழிற்பாட்டுக்குத் தடையாக இருந்துள்ளதுடன் கொள்கையின் நம்பகத் தன்மையை நலிவடையச் செய்து

1. சராசரித் தீர்வை = சேகரிக்கப்பட்ட மொத்தத் தீர்வை / மொத்த இறக்குமதிகளின் பெறுமதி
சராசரி பயன்தரு தீர்வை வீதம் = சேகரிக்கப்பட்ட மொத்தத் தீர்வை / இறக்குமதிகளுக்குப் பொருந்தத்தக்க தீர்வைகளின் பெறுமதி

நீண்டகாலத்தில் உற்பத்தியாளர்களையும் அதேபோன்று நுகர்வோர்களையும் பாதித்துள்ளன.

இலங்கையின் பெரும்பாலான மக்கள் இன்னமும் விவசாயத்தின் மூலமே வாழ்க்கையை நடாத்திச் செல்கின்றமையினால் பொதுவாக அவர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்கான தேவை காணப்படுகின்றது. எனினும், செயல்திறன் இன்மையை மறைத்து நுகர்வோர்மீது சுமையை ஏற்படுத்தும் வகையிலான அதிஉயர் இறக்குமதித்தீர்வைகளின் ஊடாகவோ அல்லது அவற்றிற்கான அவ்வப்போதைய மாற்றங்களின் ஊடாகவோ அது எய்தப்பெறலாகாது. தீர்வைகளின் ஊடாக உள்நாட்டு விவசாயத்துறைக்கு வழங்கப்படவுள்ள பாதுகாப்பின் பிரமாணத்தை அரசாங்கம் தெளிவாக குறித்துரைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்தகைய நிலையானதும் எதிர்வு கூறக்கூடியதுமான கொள்கைச் சூழலானது செயல்திறன்மிக்க மூலவள ஒதுக்கீட்டுக்கு இட்டுச் செலவதுடன் உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் இருப்புக்களை வைத்திருப்போர் மற்றும் தமது உள்ளீடாக உள்நாட்டு விவசாய உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துவோர் ஆகியோரை நீண்டகால சந்தை உபாயங்களை விருத்தி செய்வதற்கும் இத்துறைகளில் மேலதிக முதலீடுகளை மேற்கொள்ளவும் ஊக்குவிக்கும். போட்டித்தன்மை கொண்ட சந்தைச் சூழலொன்றில் இது அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

உள்நாட்டு விவசாயத்தில் விவசாயிகளைப் பாதிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக விளங்குவது தாழ்ந்த உற்பத்தியாக்கமாகும். இது அவர்களது சராசரி உற்பத்திச் செலவை அதிகரிக்கச்செய்து இறக்குமதிகளுக்குச் சார்பாக அவர்களினது போட்டித் தன்மையை குறைவடையச் செய்கின்றது. விவசாயத்துறையின் உற்பத்தியாக்கத்தைப் பாதிக்கும் முக்கிய விடயமானது உயர் விளைச்சலைக் கொண்ட விதை வகைகள் உரிய நேரத்தில் கிடைக்காமையே என்பதை பல ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. உயர்விளைச்சலைக் கொண்ட விதை வகைகளை விருத்தி செய்வதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குகின்ற வேளையில் விதை உற்பத்தி மற்றும் விநியோக கைத்தொழிலில் நேரடியான ஈடுபாட்டிலிருந்து விலகி தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்காக தனியார் துறையினரின் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் அண்மைக்கால முயற்சிகள் சரியான நெறிப்படுத்தலுக்கான நடவடிக்கையாகும். விவசாய விதைக் கைத்தொழிலில் தனியார்துறையினரின் பயன்தரு பங்கேற்பினை உறுதி செய்வதற்காக சந்தை சாராத அடிப்படையினைக் கொண்ட அரசதுறை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் விதை வகைகளுக்கான விலை நிருணய உபாயங்களை மாற்றுவதும் அத்தியாவசியமாகும். பண்ணை விலைகளில் பருவகால விலைத் தளம்பல்கள் சம்பந்தமான நீண்டகால பிரச்சனைகள் காணப்படுவதோடு உற்பத்திகளை மேற்கொள்ளல் மற்றும் சிறந்த பிரயோகங்களை மேற்கொள்ளல் என்பனவற்றிலிருந்து இது விவசாயிகளை ஊக்கமிழக்கச் செய்கின்றது. சந்தை நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுவதற்கு முயற்சி செய்யாது அத்தகைய பருவகால விதைத் தளம்பல்களுக்கான தீர்வினைக் காண்பதற்காக தனியார் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் போன்ற சந்தை சார்ந்த கருவிகளின் அபிவிருத்தியையும் பயன்பாட்டையும் அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும். ஏனெனில் அரசாங்கத்தின் நேரடித் தலையீடு வெற்றியளிப்பதாக இருந்ததில்லை.

சந்தைச் சக்திகளுக்கு அவற்றைத் தீர்மானிப்பதற்கு அனுமதியளிக்கும் வகையில் பாரிய எண்ணிக்கையிலானபொருட்களினதும் பணிகளினதும் விலையிடலில் இருந்து அரசாங்கம் படிப்படியாக விலகியுள்ளது. எனினும் அத்தியாவசியம் என கருதப்படுவதும் உற்பத்தியிலும் விநியோகத்திலும் அரசாங்கத்தின் ஈடுபாடு காணப்படுகின்ற சில பொருட்களினதும் பணிகளினதும் விலையிடலை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், மின்சாரம், பேருந்து மற்றும் புகையிரதப் போக்குவரத்துப் பணிகள் நீர் வழங்கல் பணிகள், அஞ்சல் பணிகள் மற்றும் கோதுமை மா என்பனவற்றை இவை உள்ளடக்குகின்றன. குறிப்பாக தனியுரிமை அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள வேளையில் பெருமளவு மிகை ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவத்தில் தொழிற்துறை தேர்ச்சி இன்மை என்பனவற்றினால் தென்படுகின்றவாறு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசின் முகாமைக்குட்பட்ட இந்த நிறுவனங்கள் சந்தை மெய்ப்பாடுகளுக்கு இடம் கொடாது இருப்பதுடன் அவை சம்பந்தமான உணர்வு இன்றியும் காணப்படுகின்றன. உள்ளீடுகளின் செலவு அதிகரிக்கின்ற வேளையில் உரிய நேரத்தில் விலைகளின் சீராக்கம் தேவைப்படும்போது அரசாங்கத்தின் உதவிக் கொடுப்பனவை எதிர்பார்த்து விலைச் சீராக்கங்களை மேற்கொள்ளுவதற்கு அவை தயங்குவதோடு வங்கிகளில் இருந்து பாரிய அளவிலான மேலதிக பற்றுக்களை பெற்றுக் கொள்வதுடன் அதன் மூலம் மேலதிக செலவும் ஏற்படுகின்றது. இறுதியாக வரி செலுத்துவோர் அதனைத் தாங்க வேண்டி ஏற்படும். மோசமான நிதி நிலைமைகள் தேவையான முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்கின்றன. உதவிக் கொடுப்பனவுகளின் மூலம் நிதியிடப்படும் அத்தகைய இழப்புக்களை பொதுமக்களே ஏற்க வேண்டியுள்ளதோடு அவற்றினது உற்பத்திப் பொருட்களினது அல்லது பணிகளினது

பாவனையாளர்கள் அல்ல. இத்தகைய தொழில் முயற்சிகளில் சிலவற்றின் தயக்கத்துக்கான காரணம் குறிப்பாக உலகின் ஏனைய பாகங்களின் தொழில்நுடப மேம்பாடுகளுக்கு இசைந்து செல்லும் வகையில் நுகர்வோருக்கு தரமானதும் போதுமானதுமான பணிகளை வழங்குவதற்கு அவற்றினால் இயலாது காணப்படுகின்றமையாகும். அரச தொழில் முயற்சிகளுக்கான உதவிக் கொடுப்பனவுகள் அரசிறைப் பற்றாக்குறையிலும் அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கின்ற வேளையில் அவற்றினது பாரிய அளவிலான வங்கிக் கடன்பாடுகள் சந்தை வட்டி வீதங்களில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. அவற்றினது செலவினை சிறப்பாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில் விலைகளின் அண்மைக்கால மேல்நோக்கிய திருத்தங்கள் வரவேற்கக் கூடியவை எனினும் அவர்களது செலவுகளை ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கான முயற்சிகள் சம்பந்தமாக மக்களை நம்பவைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக சில உதவிக் கொடுப்பனவுகள் செயல்திறன் அற்ற விலையிடலுக்கு இட்டுச் சென்றுள்ளதுடன் இதன் விளைவாக நாட்டின் வெளிநாட்டுப் போட்டித் தன்மையில் நீண்டகால பாதகமான உட்படுத்தல்களுடன் மூலவளங்களில் பொருத்தமற்ற ஒதுக்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக டீசல் மீதான குறுக்கு உதவிக் கொடுப்பனவு நீண்டகாலமாக தொடரப்பட்டமையானது பாரிய எந்திர இயலளவை பெருமளவுக்கு நாடச் செய்தது. இதே போன்று உள்நாட்டு நுகர்வுக்கு உதவிக் கொடுப்பனவை வழங்குவதற்காக பொருட்களினதும் பணிகளினதும் உற்பத்தியாளர்களின் மீது பாரிய சுமையைக் கொண்டிருக்கும் மின்சாரக்கட்டண அமைப்பிலும் நீருக்கான கட்டணங்களிலும் காணப்பட்ட கணிசமான குறுக்கு உதவிக் கொடுப்பனவானது இலங்கையின் வெளிநாட்டு போட்டித் தன்மையின்மீது பாதகமான தாக்கமொன்றைக் கொண்டுள்ளது. அத்தகைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய குடும்ப அலகுகளுக்கே உதவிக் கொடுப்பனவுடனான நன்மைகள் சென்றடைகின்ற வேளையில் அத்தகைய வசதிகளைப் பெற்றுக்கொள்ள இயலாதோரையும் உள்ளடக்கிய முழுக் குடித் தொகையினராலும் அந்த செலவுகளை மறைமுகமாக ஏற்க வேண்டியுள்ளது. 58 சதவீத குடும்ப அலகுகளே மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ள வேளையில் 30 சதவீதத்தினர் மட்டுமே தண்ணீர்க் குழாய் இணைப்புக்களைக் கொண்டுள்ளனர் எனினும் குடும்ப அலகுகளுக்கான மின்சாரமும் நீரும் அவற்றினைப் பயன்படுத்தாதோரும் ஏனைய உற்பத்தியாளர்களும் பகுதியளவில் பணம் செலுத்துகின்ற விலைகளிலேயே குடும்ப அலகுகளுக்கு வழங்கப்படுகின்றன. தற்போதைய கோதுமைமா விலை நிருணய முறையானது இலக்கிடப்படாத உதவிக் கொடுப்பனவு முறையொன்றினை வழங்குவதோடு கோதுமை மா நுகர்வோர் மீது சமமற்ற பகிர்ந்தளிப்புத் தாக்கத்தினைக் கொண்டுள்ளதோடு அவர்களது வருமானம் மற்றும் செல்வம் என்பன கருத்திற் கொள்ளப்படாது அனைத்து நுகர்வோரும் அவற்றினை நுகராதோரிடமிருந்து உதவிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். அது பாரிய அரசிறைச் சுமையொன்றினையும் ஏற்படுத்துவதுடன் உள்நாட்டுப் பதிலீடான அரிசியின் சார்பு ரீதியான விலையில் திரிபுகளையும் ஏற்படுத்துகின்றது.

வலு, போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல் மற்றும் நீர் வழங்கல் போன்ற முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் குறைந்த நெகிழ்ச்சித் தன்மைகளையும் பெரும்பாலும் திரிபுகளையும் கொண்ட விலை நிருணய முறையின் கீழ் உள்ளன என்பதை குறிப்பிடுவது இங்கு முக்கியமாகும். அவை தமது உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கும் தமது மிகை நிதியங்களை மீண்டும் முதலீடு செய்து உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் புதிய முதலீட்டாளர்களைக் கவருவதற்கும் இத்துறைகளுக்கு சந்தை நிலைமைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னியக்கமான சீராக்கங்களுடனான நெகிழ்ச்சியுடைய விலை நிருணய முறையொன்றினை அறிமுகப்படுத்துவது அத்தியாவசியமாகும். பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் மற்றும் கோதுமைமா போன்ற தற்போது நிருவகிக்கப்பட்ட விலை நிருணய முறையில் காணப்படும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான தன்னியக்கமானதும் புலப்பாட்டுத்தன்மை கொண்டதுமான விலைச் சீராக்க பொறி முறையொன்றினை அறிமுகப்படுத்துவது அத்தியாவசியமாகும். ஏனெனில் இது பன்னாட்டு விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஊடாக விரைந்து செல்வதனால் விலைத் திரிபுகளையும் மூலவள ஒதுக்கீட்டில் செயல்திறன் இன்மையையும் வரவு செலவுத் திட்டத்தின் மீதான சுமையையும் ஆகக் குறைந்ததாக்கும். உலக விலைகளில் ஏற்படும் அதிகரிப்பின்போது அதிகரித்த விலைகளையும் உலக விலைகள் வீழ்ச்சியடையும்போது தாழ்ந்த விலைகளையும் மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் நுகர்வோர் நம்பகத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டு இலகுவானதாகவும் புலப்பாட்டுத்தன்மை கொண்டதாகவும் அத்தகைய தன்னியக்க விலைச் சீராக்க முறை இருத்தல் வேண்டும்.

எனவே, மாறுபடும் சந்தை நிலைமைகளுக்கேற்ப விலைகளைச் சீராக்கம் செய்ய அனுமதிக்கும் வகையில் இந்த விடயங்களினது உண்மையான சந்தை விலைகளைப் பிரதிபலிப்பதற்காக கூடுதலான அளவு புலப்பாட்டுத் தன்மை கொண்டதும் தன்னியக்க

முடையதுமான விலை நிருணய பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்துவது அவசியம் என்பது புலனாகும். அதே போன்று முறையில் காணப்படும் இழப்புக்களை ஆகக் குறைந்ததாக்குதல் கொள்வனவு முறைகளை தரமுயர்த்தல் மற்றும் செயல்திறனை மேம்படுத்தல் என்பனவற்றின் மூலம் உள்நாட்டு உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கான சரிப்படுத்தும் வழிமுறைகளும் மேற் கொள்ளப்படல் வேண்டும். உட்கட்டமைப்பு வசதிகளை போதுமான அளவு விரிவாக்க வேண்டிய தேவை நாட்டுக்குக் காணப்படுவதனால் நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்காக வேண்டி இந்த நிருணய பொறிமுறைக்கும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

வெளிநாட்டுப் போட்டித் தன்மையை வலுப்படுத்தவும் அதேபோன்று இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் அடிப்படையிலான உள்நாட்டுக் கைத்தொழில்களின் செலவைக் குறைப்பதற்குமாக இலங்கை முயலுவதனால் பெருமளவில் வர்த்தகத்தில் தங்கியுள்ள நாடு என்ற வகையில் நாட்டிற்கு செயல்திறன் மிக்கதும் போதுமான அளவிலுமான துறைமுகப் பணிகளின் தேவையை புறக்கணிக்க முடியாது. மணித்தியாலமொன்றுக்கு கையாளாப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை 12 இலிருந்து 15இற்கு அதிகரித்தமையினாலும் நங்கூரமிடலில் சராசரி தாமதம் குறைக்கப்பட்டமையினாலும் அண்மையில் கொழும்புத் துறைமுகத்தின் செயல்திறன் மேம்பாடடைந்துள்ளது. எனினும் பொதுவான செயல்திறமை ஒப்பிடத்தக்க சருவதேச மட்டங்களுக்குக் கீழாகவே உள்ளது. கொழும்பில் துறைமுகப் பணிகளை வழங்குவதில் தனியார்துறையின் ஈடுபாடானது உண்மையிலேயே செயல்திறனை மேம்படுத்தவும் போட்டித்தன்மையை ஊக்குவிக்கவும் உதவும். வெகுவிரையில் முழுமையாகத் தொழிற்படவுள்ள தனியார் துறையினால் வழங்கப்படும் பணிக்கான செயல்திறன் மிக்க போட்டியாளராக கொழும்புத் துறைமுகத்தில் அரசுக்குச் சொந்தமான பாகத்தினை மீள நிறுவுதல் அத்தியாவசியமாகும். இதற்கு மேலதிகமாக துறைமுக ஊழியர்களுக்கு வேலைக் கூறுகளின் அடிப்படையிலான கொடுப்பனவு முறையொன்றுக்கு மாற்றமடைவதானது அவர்களது செயல்திறனை மேம்படுத்த உதவியாக அமையும். துறைமுக அபிவிருத்தியில் தனியார் துறையினரின் ஈடுபாடு நேரமெடுக்கும் விடயமொன்றாதலால் அரசதுறையின் முதலீடு பாரிய பங்கொன்றினை ஆற்ற வேண்டியுள்ளது. எனினும் மூலவளங்களின் கட்டுப்பாடு காணப்படுகின்றமையினால் அதி கூடிய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொது முதலீடுகளின் முன்னுரிமையை துறைமுகத்துறைக்கு வழங்குவது அவசியமாகும்.

அரசதுறையின் செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கும் தனியார் வர்த்தகத்துக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் செயல்திறன் மிக்கதும் இயக்க விசை கொண்டதுமான அரசாங்க சேவையொன்று தேவைப்படுகின்றது. தமது பொது நிருவாகத்தை நவீனமயப்படுத்தி சீராக்குவதற்காக பல நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. எனினும் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தோல்வியுற்ற முயற்சிகளின் பின்னர் இலங்கை அதனது ஆரம்ப கட்டத்தை இன்னும் தாண்டவில்லை. தேவையற்ற நிறுவனங்களை மூடிவிடல் செயலாற்ற அடிப்படையிலான பதவி உயர்வு மற்றும் ஊதிய முறைகளின் அறிமுகப்படுத்தல், அலுவலர் நகர்வு மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் மேம்பாடு என்பனவற்றின் மூலம் அரசதுறையினை அதிகளவு உற்பத்தித் திறன் உடையதாக்கலாம் என பெரும்பாலும் நம்பப்படுகின்றது. தற்போதைய போகும்போது செலுத்தும் நன்மை முறைக்குப் பதிலாக தாங்கிக் கொள்ளக்கூடிய உதவுதொகை முறைக்கு மாறுவதன் மூலம் அரசாங்க ஓய்வூதிய திட்டத்தை தாக்குப்பிடிக்கக் கூடியதாக மாற்றுவது அவசியமாகின்றது.

சமய வழிபாடுகளை மேற்கொள்ள விரும்புவோருக்கு விசேட குறுகிய விடுப்பினை வழங்குவதன் மூலம் ஏனைய நாடுகளின் மட்டங்களுக்கு பொதுவிடுமுறை நாட்களைக் குறைக்கலாம். தேவையற்ற நிறுவனங்கள் பலவற்றை மூடிவிடுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையும் பொது விடுமுறை நாட்களைக் குறைப்பதற்கான அதனது நோக்கமும் ஊக்கமளிக்கக் கூடியது என்பதைக் குறிப்பிடல் வேண்டும். 2000ஆம் ஆண்டு ஓகத்தில் ஓய்வூதிய சீர்திருத்தங்களைக் கருத்திற் கொள்ளுவதற்கான குழுவொன்றை சனாதிபதி நியமித்தார். இதற்கான விதந்துரைப்புக்கள் 2001ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற உள்ளன. இதே போன்று அரசாங்க சேவைக்கு செயல்திறன்மிக்க ஆட்களைக் கவருவதற்கான நோக்கில் அரசாங்க சேவையின் சம்பள அமைப்பில் காணப்படும் பல விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்காக சம்பள ஆணைக்குழுவிலிருந்து விதந்துரைப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் நடவடிக்கை முறைகளை மீளாய்வு செய்வதற்காக அரசாங்க சேவை முகாமைத்துவ அபிவிருத்தி அதிகாரசபையொன்றினையும் அரசாங்கம் நிறுவியுள்ளது. அதனது செயல்திறனை மேலும் மேம்படுத்துவதற்காக மத்திய வங்கி நவீனமயப்படுத்தல் திட்டமொன்றை தொடங்கியுள்ளதோடு நிதியமைச்சின் மீளமைப்பு தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. தொழில், தொலைத்

தொடர்பூட்டல், அணியும் பொருட்கள், வரிவிதிப்பு மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி போன்ற முக்கிய விடங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக பல செயலணிக் குழுக்களையும் அரசாங்கம் நியமித்துள்ளது. நிலைத்து நிற்கக் கூடிய உயர் வளர்ச்சிப் பாதையொன்றுக்கு செயல்திறன் மிக்கதும் உற்பத்தியாக்கமுடையதும் தேர்ச்சிகளைக் கொண்டதுமான தொழிற்படையொன்றும் நெகிழ்ச்சியுடைய தொழிற் சந்தையொன்றும் தேவைப்படும். இலங்கையில் கிட்டத்தட்ட 50 தொழிற் சட்டங்கள் காணப்படுவதோடு அவற்றில் சில தொழிற்படுவதும் இல்லை. அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பாரிய எண்ணிக்கையிலிருந்து தெரியவருவது போல தற்போதைய தொழில் ஒழுங்கு விதிகளின் சில மூலகங்கள் முழுமையாகவே பழமையானவையாவதோடு வாணிப விரிவாக்கத்தையும் முதலீட்டையும் தடை செய்வதுடன் தொழில் உருவாக்கத்தையும் தடைசெய்து குறுகியகால தொழில் உருவாக்கத்துக்கு இட்டுச் செல்கின்றது. தனியார் துறையினால் தொழிலாளரின் வேலையை நிறுத்துவதற்கு அரசாங்கத்தின் அனுமதியினைத் தேவைப்படுத்தும் தொழிலாளரின் வேலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சட்டமானது அதனது நடவடிக்கைகளுக்கு பெருமளவு நேரத்தை எடுப்பதால் அது தொழில் சந்தையின் நெகிழ்ச்சித்தன்மையினை பெருமளவில் குறைத்திருப்பதாகத் தென்படுகின்றது. துணை ஒப்பந்த நிறுவனங்களுக்கு தொழிற்சட்ட சிறப்புரிமைகள் பிரயோகிக்கப்படுவதானது வாணிப நடவடிக்கைகளின் வெளிப்பகுதிகளை ஒப்பந்தம் செய்து கொள்ளுவதை அவை ஊக்கமிழக்கச் செய்கின்றன. இதேபோன்று சிறிய தொழிற் சங்கங்களினதும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதகமான தன்மையினைக் கொண்ட தொழிற்சங்கங்களினதும் தோற்றமானது நியாயமற்றதும் செலவு மிக்கதுமான தொழிலாளர் பிணக்குகளை உருவாக்குகின்றன. தொழிலாளர் பிணக்குகளுக்கான நடவடிக்கை முறைகளை விரைவுபடுத்துவதற்கும் தீர்வுகளுக்கும் நடுவர் தீர்ப்புகளுக்குமான வழிமுறைகள் கருத்திற் கொள்ளப்படுவதானது ஊக்கமளிக்கக்கூடியதாக உள்ளது. அவர்களது பரசுபர நன்மைகளுக்காகவும் வளர்ச்சியினையும் உற்பத்தியாக்கத்தினையும் மேம்படுத்துவதற்காக அனைத்து மூன்றுதரப்பினரும் (ஊழியர்கள் தொழில் தருநர்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்துவோர்) இணைந்து தொழிற்படையும் முகாமைத்துவமும் நிறுவனங்களின் உரிமையாளர்களும் பங்குடையில் செயலாற்றும் கலாச்சாரம் ஒன்றை உருவாக்குவது அத்தியாவசியமாகும். பெருமளவு போட்டித் தன்மைகொண்ட உலகொன்றில் நியாயமற்ற சம்பள அதிகரிப்புக்கள் நிறுவனமொன்றின் போட்டித்தன்மையையும் நிலைத்து நிற்கும் தன்மையினையும் பாதிக்கக் கூடியதாகையால் சம்பள அதிகரிப்பை உற்பத்தியாக்க மேம்பாட்டுடன் இணைப்பது பெருமளவு முக்கியமாகும். புதிய தொழில் வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் நோக்கில் தொழில் சட்டங்களை முழுமையாக மீளாய்வு செய்வது உதவக் கூடியதாக இருக்கும். எனெனில் தற்போதைய சட்டங்கள் புதிய தொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதாக இல்லை. 7 சதவீதத்திற்கும் மேலான தொழில் வாய்ப்பின்மையைக் கொண்டுள்ள நாடொன்று புதிய தொழில் வாய்ப்புக்களையும் தொழிலாளர் நகர்வினையும் ஊக்குவிக்காத சட்டங்களைக் கொண்டிருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியவிடயமல்ல.

இதே போன்று, குறிப்பாக வேளாண்மைத் துறையில் காணிப்பயன்பாட்டின் செயல்திறனை வலுப்படுத்துவதற்காக நெகிழ்ச்சியுடையதும் செயல்திறன் மிக்கதுமான காணிச்சந்தையொன்று அவசியமாகின்றது. பழமைவாய்ந்த வழிமுறையொன்றாக பயன்படுத்தப் படாத காணிகளைக் கட்டாயமாகக் கைக்கொள்ளும் அண்மைக்கால முயற்சிகள் போன்ற ஒழுங்குவிதிகள் நேரடியானதும் சந்தை சாராததுமான ஒழுங்குவிதிகளை விட தெளிவானதும் தனியானதுமான சட்டமுறைமை, செயல்திறன் மிக்க காணிப்பதிவு பணி, சந்தை அடிப்படையிலான விலையிடல் பொறிமுறை மற்றும் போட்டித்தன்மை கொண்ட சந்தை அமைப்புமுறை என்பன காணிப்பயன்பாட்டுச் செயல்திறனையும் உற்பத்தியாக்கத்தினையும் மேம்படுத்துவதற்கான பயன்தரு முறையாகும்.

பொருளாதார வளர்ச்சியினை விரைவுபடுத்து வதற்கான முயற்சியில் செயல்திறன்மிக்க இடையீட்டுப்பணிகளை வழங்குவதற்கு மட்டுமல்ல நிதியியல் நெருக்கடிகளின் பாதிப்புக்களை தடைசெய்வதற்கும். சிறந்த வங்கித் தொழில் முறையொன்று அத்தியாவசியமாகும் என்பதை அண்மைக்கால அனுபவங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. அண்மைக்கால மேம்படுத்தலுக்கு மத்தியிலும் இலங்கையில் மொத்த முற்பணங்களுக்கான செயற்படாக் கடன்களின் விகிதம் இன்னமும் அதி உயர்வாகக் காணப்படுகின்ற வேளையில் (15 சதவீதம்) ஏனைய அண்மைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் (2 –3 சதவீதம்) வட்டிவீச்சு (அதாவது இடையீட்டுச் செலவு) சார்பு ரீதியில் உயர்வாகவே உள்ளது. (5 – 6 சதவீதம்) மத்திய வங்கி தொடர்ந்தும் அதனது ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தி வருகின்றது. எனினும் வங்கிகள் தாமாகவே முன்மதியுடன் நடந்து கொள்ளாவிட்டால் மத்திய வங்கியினால் எவ்வளவு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டாலும் அது வங்கித் தொழில் முறையை சிறந்ததும் பாதுகாப்பானதுமான முறையாக மாற்றாது என்பதனை தெளிவாக ஏற்றுக் கொள்ளல்

வேண்டும். அரச வங்கிகள் இரண்டினையும் சீர்திருத்தம் செய்வதில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். அவற்றினது முகாமைத்துவத்தினையும் பணிப்பாளர் சபையினையும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வர்த்தகமற்ற தொழிற்பாடுகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. இடையீட்டுச் செலவைக் குறைப்பதற்கும் அவற்றின் மூலதன அடிப்படையை அதிகரித்து நிதியியல் துறையின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கும் இத்துறையின் கிட்டத்தட்ட 55 சதவீதத்திற்கு வகைகூறும் அரச வங்கிகள் இரண்டினையும் மேலும் வலுப்படுத்துவது அவசியமாகும். பணிக்கப்பட்ட கடன் வழங்கலின் பெருமளவு காரணத்தினால் உருவான பற்றாக்குறையை எதிர்கொள்வதற்காக இரண்டுமுறை இந்த வங்கிகளுக்கு வரி செலுத்துவோரினால் உதவி வழங்கப்பட்டதோடு இன்னுமொருமுறை அவ்வாறு செய்யுமாறு வரிசெலுத்துவோரைக் கேட்டுக்கொள்ளுவது நியாயமானதல்ல. எனவே ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் புதிய பங்குகளை வழங்குதல் போன்ற மூலதன அதிகரிப்பு மாற்று நடவடிக்கைகள் தமது வங்கியின் மீது அலுவலர்களின் கட்டுப்பாட்டினையும் அதிகரிக்கச் செய்யும்.

நாட்டில் தேவையான நிதியியல் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உள்நாட்டுப்படுகடன் மற்றும் பங்குச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதில் அதிகூடிய கவனமும் வலியுறுத்தலும் காணப்படல் வேண்டும். கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் சார்பு ரீதியில் உயர்வான கொடுக்கல் வாங்கல் செலவுகளும் சருவதேச சந்தைகளில் அத்தகைய செலவுகளின் வீழ்ச்சியுறும் போக்கும் சந்தை நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக இந்த நடவடிக்கைகளில் செலவுக் குறைப்புக்கான தேவையை எடுத்துக்காட்டுகின்றன. இதேபோன்று பங்குப் பரிவர்த்தனையில் பல நிதியியல் கருவிகளின் பட்டியலிடலுக்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. உதாரணமாக வர்த்தகப் பத்திரங்களினதும் மாற்றத்தக்க முறிகளினதும் பட்டியலிடலானது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் நடவடிக்கைகளை அதிகரிக்கச் செய்யக்கூடும் இதற்கு மேலதிகமாக சந்தையின் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக (தேயிலை இறப்பர் போன்றவற்றுக்கான) ஒருசில பண்டங்களின் முன்னோக்கிய விற்பனையையும் அபிவிருத்தி செய்யலாம். அண்மைக் காலத்தில் உள்நாட்டுப்படுகடன் சந்தை ஒருசில மேம்பாடுகளைக் காட்டியுள்ளபோதுலும் இன்னும் பல விடயங்கள் எஞ்சியுள்ளன.முதனிலை வணிகர் முறையில் மேலும் அபிவிருத்தி அதே நேர முழுமையான தீர்ப்பனவு முறையினதும் பத்திரமற்ற பிணையங்களின் வர்த்தக முறையினதும் அறிமுகம் படுகடன் கருவிகளின் விற்பனைக்கான வசதிகள், உள்நாட்டுப்படுகடன் சந்தையை படிப்படியாக திறந்துவிடல் என்பன கொள்கைக் கவனிப்பைத் தேவைப்படுத்தும் முக்கிய விடயங்களாகும்.

குறிப்பாக நிதியியல் பணிகளும் பயன்பாட்டுப் பொருட்களும் தாராளமயமாக்கப்பட்டுள்ள வேளையில் சிறந்ததும் செயற்றிறன் மிக்கதுமான சந்தைகளை அபிவிருத்தி செய்வதில் செயல்திறன் மிக்கதும் பயன்தருவதுமான ஒழுங்கு முறைப்படுத்தல் அவசியமாகின்றது. எனினும் ஒழுங்கு முறைப்படுத்தல் முறையின் அறிமுகப்படுத்தலானது சந்தையின் அபிவிருத்தியை பாதித்தலாகாது. எனினும் பெருமளவு போட்டித் தன்மைக்கும் நுகர்வோரின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அவை தனியே விலைக் கட்டுப்பாட்டாளர்களாக மட்டுமே இருத்தலாகாது. கட்டுப்படுத்தும் ஆயமானது அரசாங்க நிறுவனமொன்றாக அல்லாது முழுமையான சுயாதீனத்துடன் சந்தையின் பாகமொன்றாக இருத்தல் வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

அரசாங்கம் தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளவிடத்து அரசினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு தனியார்துறை ஊக்குவிக்கப்படுகின்றது. ஒரு சில விடயங்களைத் தவிர பெறுபேறுகள் உற்சாகம் தருவதாகவே உள்ளன. இது அத்தகைய செயல்முறைக்கான ஊழியர்களினதும் பொது மக்களினதும் ஆதரவினை வலுப்படுத்துவதாயிருந்தது. பாரம்பரியமாக அரசதுறைகளின் பொறுப்பிலிருந்த பாரியளவு பொது வசதிகளுடன் தொடர்புபட்டதான இரண்டாந் தலைமுறைச் சீர்திருத்தங்கள் என அழைக்கப்படும். இச் சீர்திருத்தத்தின்மீது அதிகாரிகள் ஏற்கனவே தொழிற்படத் தொடங்கிவிட்டனர். இத்துறைகளின் கட்டுப்பாடுகளை அகற்றுவது மிகச் சிக்கலாக உள்ளதுடன் முழுமையாக சீர் செய்யப்பட வேண்டிய தேவையையும் கொண்டுள்ளன. உறுதியான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்குத் தேவையாக இருந்த வினைத்திறன் மிக்க உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் வலு, துறைமுகம், தொலைத் தொடர்பூட்டல், போக்குவரத்து மற்றும் நீர்த்துறைகளின் சீர்திருத்தங்கள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டமை முக்கியமாகக் காணப்பட்டது.

இயக்கவிசை கொண்ட சந்தைப் பொருளாதாரமொன்றில் உள்நாட்டு, வெளிநாட்டுக் காரணிகளின் விளைவாக ஏற்படும் வாணிப முறிவடைவுகள் ஒரு பொதுவான நிகழ்வாகும். வாணிப முறிவடைவு நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவும் நியாயமான காலவரையறையொன்றுக்குள்

**சிறப்புக் குறிப்பு 4**

## மத்திய வங்கியின் குறிக்கோள்களை மீள வரைவிலக்கணம் செய்தல்

*புதிய மத்திய வங்கியொன்றினை உருவாக்கிக் கொண்டிருந்த நேரத்தில் காலப்போக்கில் அதன் அபிவிருத்தி பற்றிய ஊகங்களைத் தெரிவிப்பது இயலாத விடயமாகும்.*

*ஜோன் எக்ஸ்டர், 1949*

### அறிமுகம்

ஆரம்பத்தில் மத்திய வங்கி பற்றித் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட கோட்பாடெதுவும் இருக்கவில்லை. ஆரம்ப காலங்களில் வங்கியொன்று நாணயத்தாள்களை வழங்கல் மற்றும் அரச வங்கியாளர் மற்றும் முகவராக செயற்படுதல் என்பவற்றில் காட்டும் ஈடுபாடுகளின் காரணமாக மத்திய வங்கியின் நிலைமையை மேலும் மேலும் மேற்கொள்ளும் நிலைமைக்கு படிப்படியாக முன்னேறின. சுவீடன் றீக்ஸ் பாங் வங்கி முதன் முதலில் நிறுவப்பட்ட மத்திய வங்கியாக (1887) இருந்த போதும் 1694இல் நிறுவப்பட்ட இங்கிலாந்து வங்கியே மத்திய வங்கியொன்றின் கடமைகளையும் மத்திய வங்கித் தொழிலின் நுணுக்கமான தன்மைகளின் அடிப்படைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைக் கொண்ட வங்கியாகவும் காணப்பட்டது.

1847, 1857 மற்றும் 1866இல்[1] பிரித்தானியாவில் இடம்பெற்ற வங்கித்தொழில் நெருக்கடிகள் காரணமாக இங்கிலாந்து வங்கி இறுதிக்கடன் ஈவோன் என்ற தகுதியையும் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது. நெருக்கடிகளுக்கான முதன்மைக் காரணமான நிதியியல் பற்றிய தேவையற்ற அச்சத்தினை, நிதி தொடர்பான சட்டரீதியான தேவைப்பாடுகள் அனைத்தும் ஈடுசெய்யப்படும் என இங்கிலாந்து வங்கியினால் வழங்கப்பட்ட உறுதிப்பாட்டினையடுத்து தணிக்க முடிந்தது. இதே மாதிரியான நெருக்கடிகள் 1837, 1857, 1873, 1884, 1893 மற்றும் 1907ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்டதுடன் 1914இல் பன்னிரண்டு பிராந்திய றிசேர்வ் வங்கிகளை உள்ளடக்கிய பெடரல் றிசேர்வ் முறையொன்றினை நிறுவுவதற்கு இது வழிவகுத்தது.

இங்கிலாந்து வங்கியின் உதாரணத்தைப் பின்பற்றி பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியில், நாடுகள் பலவற்றில் ஏற்கெனவேயுள்ள வங்கியொன்றிடம் நாணயத்தாள்களை வழங்கும் பொறுப்பினை முழுமையாக வழங்கின அல்லது முதன்மை உரிமையை வழங்கின அல்லது மத்திய வங்கியொன்றுக்கான சிறப்பு அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகளுடனான வங்கியொன்றினை நிறுவுவதற்கு இடமளித்தன. எனினும், குடியேற்ற ஆட்சியின் கீழ் இருந்த பல அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் ஆரம்ப ஆண்டுகளில் மத்திய வங்கியைக் கொண்டிருக்கவில்லை.அதற்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட சுதந்திரங்களைச் கொண்ட பணச்சபையினால் நாணயத் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.[2]

ஏற்கனவே இருந்த பணச்சபை அமைப்பிற்கு மாற்றாக ஜோன் எக்ஸ்டரினால்[3] ஆக்கப்பட்ட நாணயவிதிச்சட்டத்தின் அடிப்படையில் 1950ஆம் ஆண்டு ஓகத்து 28ஆம் நாளன்று மத்திய வங்கி நிறுவப்பட்டது. அந்த நேரத்தில் நிறுவப்பட்ட பணச்சபை முறை எப்பொழுது தேவையோ அப்பொழுது பணநிரம்பலைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியாமல் இருந்தமை, உள்நாட்டு நாணயத்திற்கும் வெளிநாட்டு நாணயத்திற்குமிடையில் (இந்திய ரூபா) இது பேணவேண்டிய இறுக்கமான இணைப்பு போன்ற பல குறைபாடுகளைக் கொண்டிருந்தது. மத்திய வங்கி நிறுவப்பட்டமைக்கு பணச்சபை முறையில் காணப்பட்ட குறைபாடுகள் ஓரளவிற்கும், 1948இன் அரசியல் சுதந்திரத்தினைத் தொடர்ந்து பொருளாதார சுதந்திரத்தின் மறைமுக முக்கியத்துவம் ஓரளவிற்கும் காரணமாக இருந்தது. மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோள் உள்நாட்டு விலை உறுதிப்பாடு செலாவணி வீத உறுதிப்பாடு இலங்கையில் உற்பத்தி தொழில்நிலை மற்றும் உண்மை வருமானத்தின் உயர்ந்த பெறுமதியினை மேம்படுத்துதல் மற்றும் பேணுதல் மற்றும் இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் முழு அபிவிருத்தியையும் ஊக்குவித்தல் மற்றும் பேணுதல் என்பன பற்றியதாக இருந்தன.

மத்திய வங்கி நிறுவப்பட்டமையானது வங்கித்தொழில் முறையைப் பெருமளவிற்கு வலுப்படுத்தும் என எக்ஸ்டர் (1949) நம்பினார். வங்கிகள் முறிவடைவதனைத் தடுப்பதற்கு வங்கித்தொழில் நிறுவனங்களை பரீட்சிப்பதற்கும் மேற்பார்வை

---

1. எம். எச். டி. கொக் மத்திய வங்கித் தொழில் 4ஆவது பதிப்பு (மறுபதிப்பு 1997) யுனிவர்சல் புத்தகசாலை, புதுடில்லி.
2. பணச்சபை என்பது, தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றுடன் இணைக்கப்படும் முறையொன்றாகும். எனவே அந்த வெளிநாட்டு நாணயத்தின் உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாச்சல்களுக்கு பதிலிறுக்கும் வகையில் உள்நாட்டு பண நிரம்பல் தளம்பலுறும்.
3. எக்ஸ்டர் ஜோன் - இலங்கை மத்திய வங்கியை நிறுவுவதற்கான அறிக்கை - இலங்கை அரசாங்கம் - கொழும்பு, இலங்கை.

செய்வதற்கும் இது அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் "இறுதிக்கடன் ஈவோன்" என்ற ரீதியில் கொடுகடன்களை முற்பணமாக வழங்குவதற்கு ஆயத்த நிலையிலும் இருக்க வேண்டும். இதன் மூலம் நெருக்கடியான நேரங்களில் வங்கித்தொழில் முறையை பெரும்பாலும் பாதிப்பிற்குள்ளாகாததாகச் செய்து கொள்ளலாம். வங்கித்தொழில் முறையினை வலுப்படுத்துவது, பொதுமக்கள் தமது சேமிப்புக்களை வைப்புச் செய்வதன் மூலமாக சந்தைகளை பெருமளவிற்கு பயன்படுத்த அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் பலருக்கு கடன்களை வழங்க வங்கிகளை இயலச் செய்கிறது. முதலீட்டு நிதியங்களைக் கவருவதற்கு இன்றியமையாததாக இருந்த சாதுரியமான சந்தை ஆதரவு, விலை உறுதிப்பாடு மற்றும் திரவநிலை என்பவற்றினூடாக அரச பிணையங்களை வழங்குவதன் மூலம் சாத்தியமான அளவிற்கு பரந்த சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கு வங்கி உதவ முடியும்.

பொதுப்படுகடனின் மிகப் பயன்மிக்க முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்துவதிலும், அரசின் இறை முகவராகவும் வங்கியாளராகவும், நிதியியல் மதியுரையாளராகவும் தொழிற்படுவதன் மூலம் அரச நிதியினை மிகச் சிறந்த முறையில் கையாள்வதிலும் மத்திய வங்கி பெருமளவிற்கு பங்களிக்குமென எக்ஸ்டர் (1949) நம்பினார். வர்த்தக வங்கிகள் தவிர்ந்த ஈட்டுக்கடன் வழங்கலில் நிறுவனங்கள் கூட்டுறவுக் கெடுகடன் சங்கங்கள் போன்ற நிறுவனங்கள் வேளாண்மையாளர்களுக்கு பெருமளவு கடன்களைக் கிடைக்கச் செய்துள்ளமையினால் அந்நிறுவனங்களுக்கு கடன் வழங்கும் அதிகாரத்தினை மத்திய வங்கி கொண்டிருக்க வேண்டும் என வாதாடியதன் மூலம் எக்ஸ்டர் மத்திய வங்கி கடன் காப்புறுதியிலும் கடன் உத்தரவாதங்களிலும் ஈடுபட வேண்டும் எனவும் வாதிட்டார். நேரடி சேமிப்புக்களுக்கு உதவுவதன் மூலம் புதிய வேளாண்மை அபிவிருத்தி மற்றும் புதிய கைத்தொழில்களுக்கு கொடுகடன்களையும் வெளிநாட்டு மூலவளங்களையும் உள்ளீடு செய்வதன் மூலமும் பொருளாதாரத்தின் பன்முகப்படுத்தலைத் தூண்ட முடியும் எனவும் இவற்றை வெளிநாடுகளில் மாற்றமடைந்துவரும் பொருளாதார நிலைகளுக்கு ஏற்ப பின்பற்றக்கூடியதாகவிருக்கும் எனவும் அவர் நம்பினார்.

இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்ட வேளையில் மிகவும் நம்பிக்கை பொருந்திய இயலாற்றல் பொருந்திய அரச முகவர் என அது மதிக்கப்பட்டது. இதன் காரணமாக ஓரளவிற்கு மத்திய வங்கித் தொழில் அல்லாத பல தொழிற்பாடுகள் மத்திய வங்கி நிறுவப்பட்ட நேரத்திலும் அதன் பின்னரும் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றுள் செலாவணிக் கட்டுப்பாடு ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்துவதும் ஊழியர் சேமநிதியத்தினை பேணுவதும் காணப்பட்டன.

## மத்திய வங்கி குறிக்கோள்களின் பரிணாம வளர்ச்சி

எந்த ஒரு மத்திய வங்கியினதும் இறுதிக் குறிக்கோள் நாட்டில் உற்பத்திக் காரணிகளை மேம்படுத்தல், மூலவளங்களின் முழுப் பயன்பாட்டினையும் ஊக்குவித்தல், வாணிபச் சுற்றோட்டத்தில் தீங்கு பயக்கத்தக்க விளைவுகளையும் பொருளாதார நெருக்கடிகளையும் தவிர்த்தல், இடர் நேர்வு நிகழ்வுகளை மிகக் குறைத்தல் என்பனவற்றின் மூலம் பொருளாதாரத்தினைப் பேணி வளர்ப்பதே ஆரும். தொடக்க ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேவ் வங்கி பொருட்கள் மற்றும் பணிகளின் உற்பத்திக்கு ஆதரவளிக்கும் பொருட்டு, கடன்களை வழங்குவதற்கு வங்கித்தொழில் துறைக்குச் செய்யப்படும் ஒதுக்கங்கள் பணவீக்கத் தன்மையைக் கொண்டிருக்காது என்ற எடுகோளின் அடிப்படையில், உற்பத்தி நோக்கங்களுக்கான கடன்களை வழங்கியது. தற்பொழுது முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ள இக் கொள்கை "உண்மைச் செலவுக் கோட்பாடு" என அழைக்கப்படுகிறது. யுத்தத்திற்கு நிதியிடுவதற்கு அரசிற்கு உதவும் பொருட்டு வட்டி வீதங்களைக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க வேண்டியிருந்தமையினால் உண்மைச் செலவுக் கோட்பாட்டின் பணவீக்க அழுத்தம் முதலாம் உலகப்போர் காலத்தில் பெருமளவிற்கு அதிகரிக்கப்பட்டது. அதன் பின் பெடரல் றிசேர்வ் உண்மைச் செலவுக் கோட்பாடானது விலை உறுதிப்பாட்டுக் குறிக்கோளுடன் தொடர்பற்றது என தீர்மானித்தது.

விலை உறுதிப்பாடு மத்திய வங்கிகளின் இலக்குகளில் முன்னுரிமை பெற்ற ஒன்றாக விளங்குகிறது. வரலாற்று ரீதியான சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றவாறு உயர் பணவீக்க வீதங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு இழப்புக்களை ஏற்படுத்தி சமூக ரீதியான தடங்கல்களை [4] உண்டாக்குவதுடன் இவை அரசியல் சமூக ஒழுங்கீனங்களுடன் பின்னிப் பிணைந்தவைகளாகக் காணப்படுகின்றன. ஆகவே பணவீக்கம் அது இருக்கவேண்டிய அளவிற்கு ஒழிக்கப்பட வேண்டியதுடன், அலன் கிறீன்ஸ்பன் குறிப்பிடுகின்றவாறு பொருளாதார முகவர்கள் தமது தீர்மானங்களை மேற்கொள்கின்ற போது

4. பிசர் ஸ்ரென்லி - மத்திய வங்கிகள் நீண்டகால விலை உறுதிப்பாட்டை தொடருவது ஏன்? வியோமிங், ஜக்சன் ஹோல் கன்சாஸ் நகர பெடரல் ரிசர்வ் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் வாசிக்கப்பட்ட பத்திரம்.

பணவீக்கத்தினைக் கருத்திற்கொள்வதில்லை. மத்திய வங்கியால் இலக்கிடப்பட்ட பணவீக்க அளவின் மீது உடன்படிக்கைகள் எதுவும் இல்லாதபோதும் வளர்ச்சியை உச்சப்படுத்துகின்ற பணவீக்க வீதங்கள் வழமையாக தாழ்ந்த ஒற்றை இலக்க பணவீக்க வீதங்களாக இருப்பதனை ஆராய்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

விலைகளுடன் இணைந்த உறுதிப்பாடே நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி அல்லது உறுதியான செலாவணி வீதங்களில் ஏற்படும் உறுதிப்பாடாகும். உறுதியற்ற செலாவணி வீதங்கள் உயர்ந்த பணவீக்கங்களைவிட பொருளாதாரத்தினை பெருமளவிற்குச் சேதப்படுத்தும் காரணியாக இருக்கும் என்பதற்கு சிறிய கணிசமான சான்றுகளே உள்ளன. ஆகவே, நாடுகள் செலாவணி வீத உறுதிப்பாட்டிலும் பார்க்க உள்ளாட்டு விலை உறுதிப்பாட்டிலேயே அதிகரித்த கவனத்தினைச் செலுத்தி வருகின்றன. இவ்வுண்மை கட்டுப்பாட்டினைக் கொண்ட செலாவணி வீத அமைப்புக்களின் தோல்வி தொடர்பான உலக அனுபவங்களின் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட செலாவணி வீதங்களின் பிறிட்டன் வூட்ஸ் முறை 1944 இலிருந்து 1971 வரையே நிலைத்தது. நிர்ணயிக்கப்பட்ட செலாவணி வீதத்தினைப் பேணுவதற்கான நாடுகளின் முயற்சிகள் உள்நாட்டு பொருளாதாரங்களின் உறுதியற்ற தன்மைக்கு வழியமைத்தமையினால் இம்முறை சிதைந்து போனது. அண்மையில், உள்ளாட்டு விலை உறுதிப்பாட்டையும் செலாவணி வீத உறுதிப்பாட்டையும் பேணுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டிருந்த மத்திய வங்கிகள் கடுமையான நிதியியல் நெருக்கடிகளை எதிர்நோக்கின. 1992இல் இடம்பெற்ற சுவீடன் நெருக்கடி, 1994இல் இடம்பெற்ற மெக்சிக்கோ நெருக்கடி 1997இல் காணப்பட்ட கிழக்காசிய நெருக்கடி என்பன இதற்கு உதாரணங்களாகும். வலுவான அடிப்படையில் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டையும் செலாவணி வீத உறுதிப்பாட்டையும் சமகாலத்தில் மத்திய வங்கியினால் பேணமுடியாமல் இருக்கும் என்பதனை நாடுகள் உணர்ந்துள்ளன. மேலும், மத்திய வங்கி அல்லது நாணய அதிகாரசபையின் வடிவமைப்பும் செலாவணி வீத உறுதிப்பாட்டினைப் பேணும் இயலாற்றலைப் பாதிப்பதனை அவர்கள் உணர்ந்துள்ளனர். உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணும் கடப்பாட்டினைக் கொண்ட மத்திய வங்கி போன்று செலாவணி வீதங்களில் குறிப்பிடத்தக்க மாறுபடும் தன்மையினை அனுமதிக்க வேண்டியிருக்கும் என்பதுடன் செலாவணி வீதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு செலாவணிச் சந்தையில் நேரடியாகத் தலையிடுவதனையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

கடுமையான செலாவணி வீதங்களைப் பேணும் நாணய அமைப்புக்கள் முக்கியமாக பணச் சபைகளாகவே உள்ளன. செயற்பாட்டின்போது பணநிரம்பலின் மீது அவை எந்த ஒரு கட்டுப்பாட்டையும் இழந்து விடுகின்றன. இன்னொரு முக்கியமான விடயம், ஒளிவு மறைவுமின்றி பணவீக்கத்தினை இலக்கிடுவதனை தெரிவுசெய்துள்ள மத்திய வங்கிகள் தமது நாணயம் சுதந்திரமாக மிதப்பதற்கு அனுமதித்திருக்கின்ற போதும் அவற்றின் பணநிரம்பலின் மீது கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. இந்த இரண்டு விடயங்களிலும், உள்நாட்டு (அல்லது வெளிநாட்டு) சமநிலை அடையப்படும் போது, பொருளாதாரத்தில் வெளிநாட்டு (அல்லது உள்நாட்டு) சமநிலை வழமையாக அடையப்படும் என்பது இரு அமைப்பு முறைகளும் சிறப்பான அமைப்பு முறைகள் தான் என ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு இட்டுச் சென்றது.

உள்நாட்டு விலை உறுதிப்பாடு, மற்றும் செலாவணி வீத உறுதிப்பாடு ஆகிய இரண்டும் வலுவான நிதியியல் முறையில் தங்கியுள்ளமையானது முதன்மைக் குறிக்கோள்களை அடைவதற்கான முன் தேவைப்பாடாக இதனை மாற்றியுள்ளது. நிதியியல் துறை மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகளினூடாகவும் "இறுதிக்கடன் ஈவோன்" என்ற உட்கிடையான உத்தரவாதத்தினூடாகவும் உறுதி பேணப்படுகிறது. எனினும், நிதியியல் துறை மேற்பார்வைகளும் ஒழுங்குவிதிகளும் எப்போதும் மத்திய வங்கிகளினால் மேற்கொள்ளப்படுவதில்லை. பெரும்பாலான நாடுகளில் மேற்பார்வையும் ஒழுங்குவிதிகளும் வெவ்வேறு நிறுவனங்களினாலேயே நடத்தப்படுகின்றன. ஆங்கிலத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்கள் பொதுவாக நாணயக் கொள்கைகளையும் மேற்பார்வையையும் ஒன்றாக இணைத்து விடுகின்றார்கள். ஜேர்மனியின் செல்வாக்கிற்குட்பட்ட நாடுகள் வெவ்வேறான தன்மையினையே விரும்புகின்றன. ஓரளவிற்கு, இவ் வேறுபட்ட பாரம்பரியங்கள் வேறுபட்ட வரலாற்று சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கின்றன. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், ஜேர்மன் வங்கித்தொழில் முறை ஒருசில காசோலைகளை மட்டுமே (மக்கள் காசுக்கே முன்னுரிமையளித்தனர்) வழங்கியதுடன் உயர்ந்த மட்ட மூலதனத்தினை ஊக்குவித்தது. இதன் விளைவாக வங்கி செயற்பாடு மிக அரிதாக இருந்ததுடன் புண்டெஸ் வங்கி ஒழுங்குவிதியில் மிகச்சிறிய பங்கினையே ஆற்றியது. ஆங்கில பாணியிலமைந்த வங்கித்தொழில் முறைகள் வங்கி முறிவுகளுக்கு பெருமளவு உட்படக் கூடியவையாகும். இதற்குப் பதிலிறுக்கும் வகையில், தோற்றம் பெற்ற தீர்வகம்

காசோலைகளைத் தீர்ப்பனவு செய்த அமைப்பொன்றாகவும், வங்கிகளை மேற்பார்வை செய்வதாகவும் அமைந்து சிலநேரங்களில் அதன் சொந்த நாணயங்களையும் வெளியிட்டது. இந்த நாடுகளின் மத்திய வங்கிகள் வெளிப்படையாகவே தீர்வகங்களின் மாதிரியைக் கொண்டிருந்ததோடு இறுதிக் கடன் ஈவோனாக அல்லது வங்கிக் கூட்டு ஒன்றின் ஒருங்கிணைப்பாளராக வங்கிகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டன. பல ஆங்கிலப் பாணியிலான வங்கிகள் இணைந்து தொழிற்பாடுகளைக் கொண்டிருந்தபோதும் 1998இல் மேற்பார்வைத் தொழிற்பாடு இங்கிலாந்து வங்கியிலிருந்து பிரிக்கப்பட்டதுடன் அத்தகைய பணவீக்க இலக்குகளை எய்துவதற்கு நாணயக் கொள்கையின் பயன்பாட்டில் பெருமளவு சுயாதீனத்தையும் நெகிழ்ச்சியினையும் வழங்கும் எனவும் நம்பப்பட்டது.

## இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களின் மீளமைப்பு

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை எய்துவது எப்பொழுதும் இலங்கை மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள்களாக இருந்து வருகிறது. எனினும் முதன்மைக் குறிக்கோளில் கவனத்தைச் செலுத்துகின்ற வேளையில் இலங்கை மத்திய வங்கி மற்றைய மூன்று குறிக்கோள்களான செலாவணி வீத உறுதிப்பாடு; உற்பத்திகளின் உயர் பெறுமதி தொழில்வாய்ப்பு மற்றும் உண்மை வருமானத்தினை மேம்படுத்திப் பேணுதல்; உற்பத்தி மூலவளங்களின் முழுமையான அபிவிருத்திகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்பாடு செய்தல் என்பவற்றை எய்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. நிதியியல் துறையின் உறுதிப்பாடு, அதன் குறிக்கோள்களின் ஒன்றாக, வெளிப்படையாகத் தெரிவிக்கப்படாதபோதும் அதுவும் ஒரு தொழிற்பாடாகவே மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதேபோன்று அரச படுகடனை முகாமைப்படுத்துதல் செலாவணிக் கட்டுப்பாடு, ஊ.சே.நிதியம் நாணய வெளியீடு மற்றும் ஏனைய முகவர் தொழிற்பாடுகளும் அதன் தொழிற்பாடுகளாக ஒப்படைக்கப்படுகின்றன.

புதிய சான்றுகளும், இலங்கை மத்திய வங்கி மத்திய வங்கி ஒன்றாக தொடர்ந்து இருக்கவேண்டிய தேவையையும் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை பேணுகின்ற குறிக்கோள்களாக கொண்ட முதன்மை நிலைக்கு ஆதரவாக இருக்கின்றன. ஆகவே செலாவணி வீத உறுதிப்பாட்டினை எய்துவது, இது விலை உறுதிப்பாட்டினை எய்துவதற்குத் தேவைப்படுத்துகின்ற அளவிற்கு வரையறுக்கப்பட்டிருப்பதுடன் இது விலை உறுதிப்பாட்டின் மூலம் தேவைப்படுத்தப் பட்டிருக்கின்றது. எனவே சந்தை உணர்வுகளுக்கு பதிலறுக்கும் வகையில் செலாவணிவீதம் சுதந்திரமாக மிதக்கலாம்.

அதேபோன்று, உண்மைச் செலவுக் கோட்பாடு பிழையானது என நிரூபிக்கப்பட்டமை மற்றும் எண்பதுகளில் இலங்கை மத்திய வங்கியின் சொந்த அனுபவங்கள் என்பவற்றின் காரணமாக வளர்ச்சியையும் அபிவிருத்திகளையும் மேம்படுத்துவதில் அதுவ நேரடி ஈடுபாட்டின் முக்கியத்துவம் குறைவடையச் செய்யப்பட்டுள்ளது. ஏனைய பல நாடுகளைப் போன்றே குறைந்த பணவீக்கம் பொருளதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுத்தக்கூடும்.

உறுதிப்பாடு நாணயக்கொள்கையின் நடத்துமுறைக்கு வசதிசெய்து கொடுப்பதானால் நிதியியல்துறை உறுதிப்பாடு வலுவான இரண்டாம் நிலைக் குறிக்கோளாகத் தோற்றம் பெற்றிருக்கிறது. நாணயக்கொள்கைக் கருவிகள் அதிகரித்தளவில் சந்தை சார்ந்தவைகளாகவுள்ளன. எனவே நிதியியல் முறைக்கொள்கை விருத்திக்கு சிறப்பான நிதியியல் சந்தையொன்று அத்தியாவசியமானதாகும். ஆகவே வங்கி மேற்பார்வை தொழிற்பாட்டினை மத்திய வங்கியிலிருந்து பிரிக்கவேண்டிய தேவை பெருமளவிற்கு உணரப்படும் வரை, நிதியியல் துறை உறுதிப்பாடு இலங்கை மத்திய வங்கியின் முக்கிய தொழிற்பாடுகளில் ஒன்றாக விளங்கும்.

பிரதான குறிக்கோளை எய்துவதற்குத் தேவையான தொழிற்பாடுகளுக்கு மாறான நடவடிக்கைகள் இருப்பதனால் இலங்கை மத்திய வங்கி சில தொழிற்பாடுகளை கட்டம் கட்டமாக அகற்ற வேண்டிய தேவை காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பொதுப்படுகடனின் முகாமைத்துவம் வட்டிவீத அமைப்பிலும் பணநிரம்பலிலும் தலையீடுகளைக் கொண்டதாக இருக்கின்றது. நாணயக்கொள்கையும் வட்டிவீதங்களைக் கொள்கைக் கருவியாக பயன்படுத்துகிறது. இதன் காரணமாக இரண்டு நடவடிக்கைகளிடையே அடிக்கடி முரண்பாடுகள் தோன்றுகின்றன. இதேபோன்று, ஊ.சே.நிதிய முகாமைத்துவம் நாணயக்கொள்கை தொழிற்பாடுகளில் முரண்பாடான நடவடிக்கைகளைத் தோற்றுவிக்கக் கூடும். எனவே இலங்கை மத்திய வங்கியிலிருந்து இரு நடவடிக்கைகளினதும் முகாமைத்துவத்தினை படிப்படியாக நீக்கும் தேவை காணப்படுகின்றது. புதிய மத்திய வங்கியில் மற்றைய தொழிற்பாடுகள் பிரதான குறிக்கோள்களுடன் முரண்படாத காலப்பகுதி வரைக்கும் அந்நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளலாம்.

முடியாததாகவுமிருக்குமிடத்து இத்தொழில் முயற்சிகளில் முடக்கப்பட்டிருக்கும் மூலதனத்தினை உற்பத்தியாக்க நடவடிக்கைகளுக்குமாற்றல் செய்வதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் முறிவடைவதலுக்கான காரணங்கள் தற்காலிகமான தன்மையைக் கொண்டனவாகவும், வெளியிலுள்ள அமைப்பொன்றின் உதவியுடன் சரிசெய்யப்படக் கூடியதாகவிருக்குமிடத்து மீளவமைப்பதற்கு ஏதுவாக சட்டரீதியான தடைகளை அகற்றுவதன் மூலமாக அத்தகைய தொழில் முயற்சிகள் தாமாகவே மீளமைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை அவர்களுக்கு வழங்க வேண்டும். தற்போது இலங்கையிலுள்ள சட்டவமைப்புக்கள் விரைவாக அத்தகையமுடிவிடும் நடவடிக்கைகளுக்கு அல்லது மீளமைத்தல் நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பனவாக இல்லாமையால் மீளமைத்தல்களில் அல்லது தோல்விகண்ட தொழில் முயற்சிகளைக் கையேற்பதில் அரசாங்கம் நேரடியாக ஈடுபட முயற்சிப்பதிலும் பார்க்க, அத்தகைய நடவடிக்கைகளுக்கு தேவையான சட்டவமைப்புக்களை அபிவிருத்தி செய்வதில் கூடிய கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட பெரும்பாலான அமைப்புச் சீர்திருத்தங்கள் பொருளாதாரத்தின் விரைவான அபிவிருத்திக்கு அவசியமானவை யாகவுள்ளன. எனினும் அவற்றின் உணர்வு பூர்வமான தன்மைகளைக் கருத்திற் கொள்கையில் அனைத்துக் கட்சியினரும் கலந்து கொள்ளும் திறந்த விவாதம் மற்றும் அறிவூட்டல் என்பனவற்றினூடாக தேசிய இணக்கப்பாடொன்றினை கட்டியெழுப்புவது இச்சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுவதற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. இச் சீர்திருத்தங்களைச் செய்வதில் மேலும் தாமதிப்பது பொருளாதாரத்திற்கு உண்மையில் பெரும் செலவினை ஏற்படுத்துவதுடன் சீர்திருத்தங்களின் முதல்கட்டத் தின்போது கடுமையான உழைப்பின் மூலம் பெறப்பட்ட பல நன்மைகளையும் இடர்ப்பாட்டிற் குள்ளாக்கிவிடக் கூடும். தாமாகவே செய்துகொண்ட ஒருங்கிணைப்புக்கள் காரணமாக தற்போதைய உலகமயமாக்கல் செய்முறையுடன் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் போட்டியாளர்களிடமிருந்து எமது நாட்டைப் பின்தங்கச் செய்துவிடவும் கூடும். கடந்த காலத்தில் இலங்கையின் சாதனைகளை அங்கீகரிக்கின்ற விதத்தில் இலங்கையின்அடுத்த தலைமுறைப் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அதிகளவு சலுகை நியதிகளில் ஆதரவளிப்பதற்கான தமது விருப்பங்களை பன்னாட்டு சமூகம் அடிக்கடி தெரிவித்து வந்திருக்கிறது. நாடு இச்சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்பது மிக முக்கியமானதாகும். இலங்கை அண்மையில் ஏற்பட்ட பல நெருக்கடிகளுக்கும் ஈடுகொடுத்து தாக்குப் பிடித்தமைக்கு, 24 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட முதற்கட்ட சீர்திருத்தங்களினால் கட்டியெழுப்பப்பட்ட ஆற்றலுக்கு நன்றி சொல்ல வேண்டும். உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்பதற்கான எந்தவித உத்தரவாதமும் இல்லை. எனவே வலுவானதும் கூடியளவிற்கு ஆற்றல் கொண்டதுமான பொருளா தாரத்தினை உருவாக்குவதற்கு இலங்கை அதன் சீர்திருத்த முயற்சிகளை தீவிரப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகவுள்ளது.